:25.

THE EXILE

OF

PANDAVAS

BY

VARAKAVI TIRU

A. SUBRAMANYA BHARATI

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாண்டவர் வனவாசம்

வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதி
எழுதியது.

இரண்டாம் பதிப்பு.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபி ரைட்] 1923 [விலை அணா. 12

PRINTED AT THE

NOBLE PRESS, TRIPLICANE,

MADRAS. S. E.

செந்திலாண்டவன் திருவடி துணை

முகவுரை

புவியில் மக்களுக்கு வேண்டிய அரிய பெரிய நீதிகளைப் புகட்டக்கூடியது பாரதமென்கிற இதிகாச மென்பதும், அது மிக விரிவானதென்பதும், அதனை முழுவதும் படிப்பது எளிதில் முடிவதல்ல வென்பதும் யாவரும் அறிந்த விஷயமேயாம். அந்நூல் அவ்வளவு பெரிதாயினும் அதனைக் கேட்கவும் படிக்கவும் மக்களுக்குப் போதிக்கவும் அவாவுடையார் பெரும்பான்மையராவர்; அந்நூலும் அத்துணைச் சிறப்புடையதேயாம். ஆகையினால், அதனை மாணவர்கள் எளிதிலே யோதியுணரத் தக்கபடி செய்யவேண்டுமென்ற அவா எமக்குண்டாயது. அதனை நிறைவேற்ற வெண்ணிய யாம் முதலில் பாண்டவர் பாலலீலை என்கிற பெயரிட்டுப் பாண்டவர்களின் உற்பத்திமுதல் அவர் திரௌபதியை மணந்து இந்திரப்பிரஸ்தம் வந்து குடிபுகுந்தவரையில் ஒரு பாகமாக வெளியிட்டோம். அது தமிழுலகிற்குப் பயன்படுமா றமைந்தமையின், இப்பொழுது, பாண்டவர் வனவாசம் என்ற பெயரிட்டுப் பாரதத்தின் இரண்டாம் பாகமாக இதனை எழுதி முடித்தோம். இனி மூன்றும் பாகத்தோடு பாரதம் முடிவுபெறும்.

இந்நூல் மாணவர்களுக் கென்று எழுதியதாத லின் அவர்கள் பயிலுவதற்கேற்றபடி நடையொழுங்கும், விஷயவிமரிசையும், சொற்பொருட் சுவையும் அமை யும்படி போதிய உழைப்பு எடுத்துக்கொண் டிருக்கி றோம். இதனைக் கல்வியிலாகா அதிகாரிகள் கவனித்து மாணவர்களுக்கேற்ற உபபாடங்களில் ஒன்றாக அங்கீ கரித்தமைக்கு யாம் மிகவும் சந்தோஷமடைகிறோம்.

குமாரவிலாஸம்,
இராயப்பேட்டை } திரு - அ. சுப்ரமண்ய பாரதி

பொருளடக்கம்.

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை.

பாண்டவர் வனவாசம்

அத்தியாயம்—1

அர்ச்சுனன் காண்டீவம் பெறுவது

தருமமேஜயம் என்னும் சிறந்த கொள்கையை மேற்கொண்ட பாண்டவர்கள், துரியோதனனிடமிருந்து பங்கு பெற்ற பிறகு காண்டவப்பிரஸ்தம் என்கிற ஒரு காட்டை அழித்துச் சீர்படுத்தி இந்திரப்பிரஸ்தம் என்றொரு திருநகரம் உண்டாக்கிக்கொண்டு அதில் வசித்துவந்தனர். பாண்டவர்கள் கருணையங்கடலாகிய கிருஷ்ண பரமாத்மாவின் பரம மித்திரர்களாகையினால் அவர் தேவேந்திரன் மூலமாக விசுவகர்மாவென்கிற தெய்வச் சிற்பியை வரவழைத்துக் கொடுத்தார். அவனைக் கொண்டு பாண்டவர்கள் அந்த நகரத்தை நிர்மாணித்துக்கொண்டனர். நகரம் இணையிடற்றதா யமைந்தது. நகரத்தைச் சூழ, பகைவர்கள் உள்ளே பிரவேசியாவாறு பிர்மாண்டமான மதிலும் அதனைச் சூழக் கடலே வளைந்து கொண்டதோ என்று வியப்புறும்படி நீர் நிரம்பிய ஆழமான அகழியு மிருக்

கும். அதில் தாமரை, அல்லி முதலியன பூத்துப் பார்வைக்கு அது வெகு அழகாயிருக்கும். முதலை முதலிய நீர்ப்பிராணிகள் நிறைந்து எவருமுள்ளே பிரவேசியாதபடி காவல் புரிவதுபோல் இங்கு மங்கு முலாவும்.

மதிலில் நான்கு திக்குகளிலும் நான்கு அழகிய வாயில்களிருக்கும். வாயில்கள்தோறும் இரவும் பகலும் இடைவிடாமல் ஆயுத பாணிகளாகிய இராணுவ வீரர் காவல்புரிந்து வருவர். மதிலின்மேல் ஆங்காங்குப் பலவாறான சூழ்ச்சிகளும் பொறிகளும் பொருத்தி வைத்திருக்கும். அவைகட்கருகே தக்க காவல்கள் வைத்திருக்கும். பகைவர் கண்டால் இதனை நெருங்குவது அசாத்தியம் என்றஞ்சுவர்.

இப்படிப்பட்ட மதிலின் உட்புறத்தில் சலவைக் கற்களா லமைத்த உந்நதமான அநேக மாட மாளிகைகளும் தடாகங்களும், வாவிகளும், ஓடைகளும், கண்டவர் கண்களைக் கவரும்படி அதிமனோகரமாய் அமைத்திருக்கும். இந்நகரத்தில் இது இல்லை, இதனை அமைக்கத் தவறிவிட்டார்கள் என்று குறை கூறுவதற் கிடமில்லாமல் ஜனங்கள் விரும்பி வசித்தற்குரிய சகல வசதிகளும் நிறைந்து நகரம் அதியற்புதமாய் விளங்கியது.

இவற்றிற்கெல்லாம் கடுநாயகமாக அரண்மனைகளை அமைத்திருந்தனர். அரண்மனைகள் ஸ்படிகம் போன்ற சலவைக் கற்களாலும் இரத்தினக் கற்களாலும் சிகரங்களுடனும் சித்திரப் பதுமைகளுடனும் கொடுங்கைகளுடனும், விசாலமான கூடங்களுடனும், மாடங்களுடனும் அமைத்திருந்தமையால் மகோந்நதமாக விளங்கும். அரண்மனைக்குப் பின்புறம் ஓடைகள், வாவிகள், மண்டபங்கள், செய்குன்றுகள், விளையாட்

டுக் கூடங்கள் முதலிய அரசர்க்குரிய விநோத வசதிக ளெல்லாம் நிரம்பிய பூந்தோட்டங்க ளிருக்கும். அங்கு எப்போதும் எந்த ருதுக்களிலும் பூஞ்செடிகள் பூத் துப் பொலிவுறும். பழந்தரும் மரங்கள், பழுத்து அங்கு வருவாரை உபசரிக்கச் சித்தமா யிருப்பதுபோல் விளங் கும்.

இன்னும் இவைபோல்வன பலவுண்டு. ஆதலின் பாண்டவர்கள் இங்கே குடியேறி இந்நகரை இராஜ தானியாகக் கொண்டு அரசுபுரியத் தொடங்கிய நாள் முதல் பழமுள்ள மரங்களைப் பறவைகள் நாடி அடை வதுபோல் ஜனங்கள் பல பாகங்களிலிருந்தும் அங்கே வந்து குடியேறினர்கள்.

நகரம் சகல வளப்பங்களிலும் நாளுக்கு நாள் மேம்பாடடைந்து வந்தது. "பாண்டவர்கள் சிறிதும் அறநெறி தவருதவர்க ளாகையினல் தருமதேவதை இந் நகரத்தில் தாண்டவம் புரிகின்ருள்! இதனலே தான் இந் நகரம் இத்துணைச் சிறப்பொடு விளங்குகிறது" என்று இதனைக் கண்டவரெவரும் கூறுவாராயினர்.

ஆகவே பாண்டவர்கள் ஒரு குறைவு மில்லாமல் வாழ்ந்து வந்தார்கள். எல்லோருக்கும் நல்லவர்களாயும் நல்ல நடவடிக்கைகளுக்கு இருப்பிடமாயும் விளங்கினர். கிருஷ்ண பகவானுடைய பரிபூரணமான திருவருட் செல்வத்திற்குப் பாத்திரர்களான அவர்களுக்குக் குறைவென்பது எவ்வா றுண்டாகும்?.—

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில"

என்று தமிழ்வேதம் கூறுகின்றதன்ருே? இப்படி யிருக்கையில் அர்ச்சுனன் மகாவீரனென்று புகழ்

பெற்றுத் தீர்த்தயாத்திரை போய் வந்தான். அவன் அப்பொழுது கிருஷ்ண பகவானுடைய தங்கையாகிய சுபத்திரை என்னும் உத்தம குணமாதை அந்தப் பகவானுடைய திருவருளின் துணையினாலே மணந்து அந்த மணத்திற்கு விரோதமாய் நின்றவர்களெல்லோரையும் வென்று ஜயலக்ஷ்மியோடும் அந்த பாக்கியலக்ஷ்மியோடும் திரும்பினான்.

அப்பால் ஐவருக்கும் ஐந்து புத்திரர்கள் பிறந்தார்கள். அர்ச்சுனனுக்குச் சுபத்திரையினிடம் ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு அபிமந்யு என்று திருநாமமிட்டனர். (அபி = ஒன்றுக்கு மஞ்சாதவன்; மந்யு—பகைவர்களின் மீது பெருங் கோபமுடையவன்) மக்களெல்லாம் நாளுக்கு நாள் வளர்ந்து கல்வியிலும் கேள்வியிலும் அறிவிலும் சிறந்து மகா சமர்த்தராக விளங்கினர். அபிமந்யு தன் தந்தையாகிய அர்ச்சுனனிடம் வில்வித்தை பயின்று அதில் நிகரற்றவனானான்.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் கிருஷ்ணபகவானும் அர்ச்சுனனும் யமுனைக்குச் சென்றார்கள். அங்கு அக்நிபகவான் ஓர் அந்தணனைப்போல் வேடம்பூண்டு அவர்கள் முன்னேவந்து, "எனக்குக் காண்டவ வனத்தை உணவாகக் கொடுக்கவேண்டும்" என்று கேட்டார். காண்டவவனம் என்பது யமுனைக்கருகிலிருந்த ஒரு பெரிய வனம். அதில் அநேக கொடிய வனவிலங்குகள் வசித்து வந்தன. அது இந்திரனுடைய காவலிலிருந்தது. ஆகையினால் அக்நிபகவானால் அதனை எரிப்பதற்குக் கூடவில்லை. அக்நி எரிக்கத் தொடங்கினால் இந்திரன் மழை பொழிந்து அதை அவித்து வந்தான். அதனால் அக்நிபகவானுக்கு அதனை எரித்து

உணவாகக் கொள்ள இயலவில்லை. ஆகையினால் அக்நி பகவான் கிருஷ்ணார்ச்சுனர்களை வேண்டிக் கொண்டார். அவர்கள் அக்நிபகவானுக்கு உதவி செய்வதாக ஒப்புக் கொண்டார்கள். அர்ச்சுனன் தனக்குத் தேர், வில், அம்பு, முதலிய போர்க்கருவிகள் இல்லையென்று கூறினான். அக்நிபகவான் உடனே வருணனிடம் போய்த் தேரும் காண்டீவம் என்கிற வில்லும் குறைவுறாத அம்பறாத்தூணியும் வாங்கிவந்து கொடுத்துவிட்டு அவ்வனத்தை எரிக்கத் தொடங்கினார். வனமெரிவதை அறிந்த இந்திரன் உடனே பெருமழை பொழிவித்தான். கிருஷ்ணார்ச்சுனர்கள் அம்மழையைச் சரக் கூடுகட்டித் தடுத்துவிட்டனர். அக்நிபகவான் அவ்வனத்தை வெகு விரைவில் எரித்துச் சாம்பராக்கினார். அவ்வனத்திலிருந்த பிராணிகளில் தக்ஷகன் பிள்ளையாகிய ஒரு பாம்பும், மயன் என்கிற அசுரனும், நான்கு சாரங்கப் பறவைகளும் உயிர்தப்பிப் பிழைத்தன.

தக்ஷகன் மனைவியாகிய தாய்ப்பாம்பு தன்குட்டியைப் பிழைப்பிக்க வெண்ணி அதன் வாலைத் தன் வாயிலே கவ்விக்கொண்டு விண்ணிலே கிளம்பியது. அதைக் கண்ட அர்ச்சுனன் ஓர் அம்பெய்து தாய்ப் பாம்பின் தலையை அறுத்துவிட்டான். அதனால் குட்டிப் பாம்பின் சிறுவால் மாத்திரம் வெட்டுண்டது. இச்சமயத்தில் இந்திரன் காற்றையும் தூசியையும் உண்டாக்கி மறைத்தான். அதில் சிறுபாம்பு மறைந்து தப்பியோடிவிட்டது. அவ்வனத்திலிருந்த தக்ஷகன், அக்நி பகவான் அதனை எரிப்பதற்கு முன்பே அங்கிருந்து வெளிப்பட்டு குருக்ஷேத்திரம் போயிருந்தான்.

மயன் என்கிற, ஓர் அசுரன் தீ சூழ்ந்துகொண்டு வருவதை யறிந்து அதை விட்டுத் தப்பி ஓடப் பார்த்தான். அதனை யறிந்த கிருஷ்ணபகவான், அவன்மீது சக்கரத்தைப் பிரயோகிக்கப் போனார். அப்பொழுது மயன், "அர்ச்சுன அடைக்கலம்! அடைக்கலம்!" என்று கத்தினன். அர்ச்சுனன் "அஞ்சாதே" என்றான். கிருஷ்ணபகவான் சக்கரத்தைப் பிரயோகிக்காமல் நிறுத்திவிட்டார். இவ்வாறு மயன் தப்பினன்.

சாரங்கப் பறவைகள் நான்கும் இறகு முளையாத குஞ்சுகளா யிருந்தும் அக்நி எங்கும் மூண்டு வருவதை யறிந்து அவை அக்நிபகவானைத் துதித்தன. அக்நி பகவான் அவற்றின்மீது இரக்கங்கொண்டு எரிக்காது விட்டுவிட்டார்.

காண்டவ வன தகனம் இருபத்தொரு நாள் நடந்தது. அது முடிந்த பிறகு இந்திரன் கிருஷ்ணார்ச்சுனர்கள் முன்பு தோன்றி அவர்களைப் புகழ்ந்து "உங்களுக்கு வேண்டும் வரங்களைக் கேளுங்கள்" என்றான். அர்ச்சுனன் தனக்கு அஸ்திர சஸ்திரங்கள் வேண்டுமென்று கேட்டான். இந்திரன், "உனக்குச் சிவபெருமானின் திருவருட் செல்வம் கிடைக்கும். அப்பொழுது நானும் என்னிடமுள்ள ஐந்திர முதலிய அஸ்திரங்களைத் தருவேன்" என்றான். கிருஷ்ணபகவான் ஒரு வரமும் விரும்பவில்லை; ஆனால் அர்ச்சுனனுடைய நட்பு மாத்திரம் எப்போதும் நிலைபெற்றிருக்க வரமருளின் போதும் என்றார். இந்திரன், "அவ்வாறே ஆகுக" என்று கூறி அக்நிபகவானை நோக்கி, 'நீ மகான்களை அடுத்தபடியால் உன்னுடைய விருப்பம் நிறைவேறியது. உன்மீது எனக்கு ஒரு வருத்தமு மில்லை' என்று தெரிவித்துத் தன் உலகம் சென்றான்.

இந்திரன் சென்ற பிறகு அக்நிபகவான் அர்ச்சுனனை நோக்கிக் "காண்டீவம் என்கிற வில்லினாலும் அக்ஷயம் என்கிற தூணியினாலும் வானரத்துவஜமுடைய இரதத்தினாலும் நீ உன் பகைவர்களை யெல்லாம் நாசஞ்செய்து நிகரற்றவனாக வாழப்போகிறாய்! நான் போய் வருகின்றேன்" என்று கூறி விடைகொண்டு கிருஷ்ணமூர்த்தியையும் பணிந்து துதித்துத் தன் உலகம் சென்றான். பிறகு கிருஷ்ணார்ச்சுனர்களும் பரம சந்தோஷத்துடன் பலவித லீலைகளைச் செய்துகொண்டு நகரம் வந்து சேர்ந்தனர்.

அத்தியாயம்—2

இராஜஸூயயாக யத்தனங்கள்

அர்ச்சுனன் இவ்வாறு காண்டவ வனத்தை அக்நி பகவானுக்கு உணவாகக் கொடுத்ததும் காண்டீவம், தேர், அம்பறாத்தூணி முதலியன பெற்ற வரலாறும் நகர முழுவதும் பரவின. எல்லோரும் அர்ச்சுனனை அவதாரபுருஷனாக மதித்துப்புகழ்ந்தனர்; "பகவானுடைய திருவருள் பெற்றவர்க்கு எது பெறுவதரிது எது முடிப்பதரிது" என்றும் பேசிக் கொண்டனர்.

இப்படி யிருக்கையில் காண்டவ வனத்திலிருந்து அர்ச்சுனனுடைய திருவருளினால் உயிர் தப்பிய மயன் என்னும் அசுரன், தருமபூபதியின் அவைக்கேகித் தான் அர்ச்சுனனால் உயிர் தப்பிப் பிழைத்ததைக் கூறி அதற்குக் கைம்மாறாகத் தான் ஏதேனுமொன்று செய்ய விரும்புவதாகத் தெரிவித்தான். அதைக்கேட்ட அர்ச்சுனன், "எங்கட்கு இப்போது நீ ஒன்றும் செய்ய

வேண்டாம். இந்த நன்றியை நீ மறவாம லிருந்தாற் போதும்'' என்றான். தருமபூபதியும் "அவ்வளவு தான் போதும்'' என்றனர். மயன், "பெரியோர் களின் முன்பு என் மனத்திலுள்ளதை நான் சொல்லு கிறேன். ஏதேனும் ஒரு நன்மை செய்யவேண்டு மென் கிற எண்ணம் எனக்கிருக்கிற படியால் அதற்கு அநு மதிதரவேண்டும்'' என்று வணங்கி வேண்டிக்கொண் டான். அர்ச்சுனன், "எனக்கொன்றும் தெரியாது. கிருஷ்ணமூர்த்தியின் திருவுளப்படி நடந்துகொள்'' என்று கூறிவிட்டான். மயன் பிறகு கிருஷ்ண பகவா னிடம் போய்ப்பணிந்து நின்றான். கிருஷ்ணமூர்த்தி "நீ சிற்பத்தில் வல்லவனாதலால், உனக்கேற்றதாய் ஓர் அலுவல் கூறுகிறேன். அதனைச்செய்'' என்றார். மயன், "சந்தோஷம்! அவ்வாறே செய்வேன்'' என, கிருஷ்ணபகவான், "உனக்கு உயிர்கொடுத்த அந்த அர்ச்சுனனுடைய அண்ணாவாகிய தருமபுத்திரரிருந்து அரசுபுரியத் தகுந்ததாய்ச் சிற்பசாஸ்திர நிபுணர்கள் கண்டு, அம்ம! இது அற்புதம்! என வியக்கத்தக்க அரிய மணி மண்டபமொன்று இந்த இந்திரப்பிரஸ்தத்தில் அமைத்துத் தருவாயாக'' என்று கட்டளையிட்டார். மயன் அக்கட்டளையைச் சிரசின்மேற்கொண்டு அவரைப் பணிந்து, தமது "திருவுளப்படி செய்துமுடிக்கின்றேன்'' என்றான். இதனையறிந்த எல்லோரும் இது நல்ல கட்டளை யென்று கூறி மகிழ்ந்தார்கள். பிறகு கிருஷ்ண பகவான் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு துவாரகைபோய்ச்சேர்ந்தார். மயன் மண்டபங் கட்டுவதிலே கவனஞ் செலுத்தினான்; தன் கிங்கரர் பலரை வரவழைத்துக் கைலையங்கிரிக்கு அருகேயுள்ள விந்துஸரஸிலிருந்து விலை மதித்திடற்கரிய கற்களைக்

கொண்டுவரும்படி கட்டளை யிட்டான். அவர்கள் கற்களைக் கொண்டுவந்து மலைமலையாகக் குவித்தார்கள். மயன் நவரத்தினங்களையும் கொண்டுவரச்செய்து போர்போராகக் குவித்தான். பிறகு பெரியோர் விதித்துள்ள சிற்பசாஸ்திர விதிப்படி அழகிய மண்டபம் நிருமிக்கத் தொடங்கிப் பதினன்கு மாதத்தில் விசித்திரமான ஒரு சபாமண்டபத்தைக் கட்டிமுடித்தான்.

சபையில் விநோத விசித்திரங்கள் அமையப்பெற்ற வாயில்களும் வீளவுகளும் பலவித வேலைப்பாடுகளுமமைந்த அறைகளும் மணி மண்டபங்களும் மேடைகளும் தெற்றிகளும் சாய்மானங்களும் மாடங்களும், கூடங்களும்; கோபுரங்களும், முற்றங்களும், குளங்களும், செய்குன்றுகளும், நந்தவனங்களும் பொருந்த அமைத்திருந்தமையால் அச்சபை கண்டவர் வியந்து "இது, இந்திரனுடைய சபையாகிய சுதர்மையே" என்று பேச விளங்கியது. சுவரில் வாயில் வைத்திருக்கும் சில இடங்களில் வாயில் இல்லாததுபோலத் தெரியும். நீரில்லாத சிலவிடங்களில் நீரிருப்பது போலவே தெரியும். சிலவிடங்களில் உயரத்திலிருப்பவர்களுக்குப் பள்ளத்திலிருப்பதுபோலத் தோன்றும். சில விடங்களிற் போனல் நிலவு பிரகாசமாய் வீசுவது போலிருக்கும். சிலவிடங்களிலே இரவு பகலாகவும் பகலிரவாகவும் தோன்றும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருச்சபையைக் கண்டு பாண்டவர்கள் பரமசந்தோஷ மடைந்தார்கள் ; கிருஷ்ணபகவானுக்குத் திருமுக மனுப்பி அவரை வரவழைத்துக் காட்டினர்கள். சிற்பநூல் முறைப்படி சகல வேலைப்பாடுகளும் அழகுபெற அமைந்திருக்கக் கண்டு

அவரும் வியந்து சந்தோஷமடைந்தார். அப்பால்கிருஷ்ண பகவானுடைய கட்டளையின்படி ஒரு நல்ல நாளில் நல்ல முகூர்த்தத்தில் பாண்டவர்கள் சபாப்பிரவேசஞ் செய்தார்கள். தருமபுத்திரர் அந்தத் திவ்ய திருச்சபையில் வீற்றிருந்து மநுமுறை தவறுமல் அரசு செலுத்தி வந்தார். மயன் பீமசேனனுக்கு ஒரு தண்டாயுதமும் அர்ச்சுனனுக்கு ஒரு சங்கமும் தந்து எல்லோரிடமும் விடைகொண்டு தன் உலகம் சென்றுன். கிருஷ்ண பகவானும் துவாரகைக்குச் சென்றுர்.

தருமபுத்திரர் அரசுசெய்துவரு மிக்காலத்திலே அநேக அரசர்கள் பாண்டவர்களையும் அந்தச் சபையையும் பார்த்துவிட்டுப் போக அடிக்கடி வருவார்கள். முனிவர்கள் பலபேர் வந்து தருமராஜருக்கு வேண்டிய இராஜ நீதிகளையும் தரும நீதிகளையும் போதித்துவிட்டுப் போவார்கள். இப்படியிருக்கையில் ஒரு நாள் நாரத முனிவர் அந்தத் திவ்ய சபைக்கெழுந்தருளினுர். தருமராஜா அவரை முறைப்படி வணங்கி வரவேற்று ஆசனமளித்து வீற்றிருக்கச் செய்து உபசரித்தார். நாரதர் தருமராஜாவைப் பார்த்து அரசின் சிறப்பை விசாரித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, அவர் நாரதரைப் பணிந்து, "முனிவர் பெருமானே! இந்தச் சபையைப்போல் வேறு சபையொன்று எங்கேயாவது தாம் கண்டதுண்டா?" என்று கேட்டார். நாரதர் "நான் இந்த மானிட உலகத்தில் இதைப் போன்ற சபை கண்டதில்லை. ஆனுல் தேவலோகத்தில் இந்திரன், யமன், வருணன், குபேரன் முதலியவர்களுடைய சபைகள் இதனினும் சிறிது சிறந்தவையெனச் சொல்லக் கூடியவையா யிருக்கின்றன" என்று அந்தச் சபை

களின் சிறப்பை ஒவ்வொன்ருக யுதிஷ்டிரர்க்குச் சொல் லிக்கொண்டே வந்தார். அப்பொழுது அவர் இந்தி ரன் சபையில் சூரிய வம்ச அரசனுயிருந்த அரிச்சந்தி ரன் இருக்கின்ருனென்றும் யமனுடைய சபையில் பாண்டுமகாராஜா இருக்கின்ருரென்றும் கூறினுர்.

இதைக்கேட்டதும் யுதிஷ்டிரர் அவர்களுடைய வர லாறு கேட்க விரும்பி, "ஸ்வாமி! என் தந்தை மாத்தி ரம் ஏன் இன்னும் பிதிர் லோகமாகிய யமனுடைய சபையிலிருக்கிருர்? அரிச்சந்திர மகாராஜா இந்திரனு டைய சபையில் இருப்பானேன்?" என்று வினவ, நார தர், "தருமநந்தன! இதை நீ தெரிந்துகொள்ள வேண் டியது அவசியமேயாம். அரிச்சந்திரன் முன் ஏராள மான பொருள் செலவழித்து இராஜஸூயம் என்னும் சிறந்த ஒரு பெரிய வேள்வியை இயற்றினுன். அதன் பயனுக அவன் இந்திர சபையில் இப்பொழுது சுகமநு பவிக்கின்ருன். அரிச்சந்திரனைப் போலவே தானும் இந் திரனுடைய சபையிலிருக்க உன் தந்தைக்கு விருப்ப முண்டு. நீ அந்த வேள்வியைச் செய்வாயேயானுல் உன் தந்தைக்கு அப்பதவி கிடைக்கும். நீ செய்யலாம். ஆனுல் பெருஞ் சிரமமிருக்கிறது. பூமி முழுவதையும் ஜயித்தல் வேண்டும்; அரசர்களெல்லோரும் உனக்கு நட்பினராக விருத்தல் வேண்டும்; பகைமை பாராட் டியவர்களை நீ ஜயித்தல்வேண்டும்; இந்த வேள்வியில் உனக்கு வேந்தர்களனைவரும் மரியாதை செய்யும்படி யான நிலையை நீ பெறுதல்வேண்டும். இப்படிப்பட்ட சிறப்பை அடைவது எளிதில் முடிவதல்ல. இதற்குப் பலவாருன இடையூறுகளுண்டாம். ஆயினும் நீ தக்க முயற்சி செய்தால் இதனை நிறைவேற்றுவாய்! நான்

போகிறேன்'' என்று கூறி விடைகொண்டு புறப்பட்டுப் போய்விட்டார்.

பிறகு, தருமபுத்திரர் தம்முடைய தம்பிமார்களுடனிருந்து ஆலோசனை செய்தார். அவர்கள் "அது செய்யத்தக்கதே" என்று கூறவே தருமபுத்திரர் உடனே கிருஷ்ணபகவானை அழைத்து வந்து அவரிடம் ஆலோசனை செய்யக்கருதி துவாரகைக்கு இந்திரசேனன் என்பவனை அனுப்பினார். இந்திரசேனன் போய்த் தெரிவித்ததும் கிருஷ்ணபகவான் இந்திரப்பிரஸ்தத்துக்கு வந்துசேர்ந்தார். தருமபுத்திரர் அவரைப் பணிந்து பெருமகிழ்ச்சியோடு "என் ஐயனே! என் அரணே! என் தெய்வமே! வரவேண்டும்! வரவேண்டும்'' என்று வரவேற்று வீற்றிருக்க உபசரித்துத் தம்மிடம் நாரதமுனிவர் வந்து போனதையும் அவர் இராஜஸூயயாகம் செய்யுமாறு தெரிவித்ததையுங் கூறி "இதற்கென்ன ஆலோசனை சொல்லுகிறீர்? அந்த வேள்வி செய்யத் தொடங்கினால் அது எனக்குக் கைகூடுமா? கூடாதா? உண்மையான தமது திருவுளக் கருத்தைச் சொல்லவேண்டும்'' என்று வேண்ட, கிருஷ்ணமூர்த்தி, "வேந்தே! தாம் சகல சாஸ்திரங்களுமறிந்தவர். கேள்வியிலும் பெரியவர். இதைக் குறித்தும் மகாத்மாக்கள் பலரிடம் தாம் வினவியிருப்பதுங் கூடும். ஆயினும் நான் எனக்குத் தெரிந்தவரையில் கூறுகிறேன்—

" இராஜஸூயம் என்கிற வேள்வி புரிவதற்குரிய குலம், குணம், ஒழுக்கம் முதலியன உம்மிடமுண்டு. ஆகவே அது செய்ய உமக்குத் தகுதியுமுண்டு. இதில் வெகு கஷ்ட மிருக்கிறது. நீர் அரச ரெல்லோரையும்

வென்று பகையற்றவரா யிருத்தல் வேண்டும். முன்னர் அரிச்சந்திரன் ஒருவனே இந்த வேள்வியைச் செய்த வன். புரூரவஸ் என்னும் வேந்தன் இதை இயற் றத் தொடங்கிக் கடைப்பிடியாமல் விட்டுவிட்டான். உமக்குத் தம்பிமாருடைய துணைவலி இருக்கின்றமை யினால் நீர் அதைச் செய்வது கூடும். நீர் வெல்லவேண் டிய அரசர்களில் ஜராசந்தன் என்பவனொருவன். அவன் மகா பராக்ரமசாலி. அவனுக்குப் பதினாயிரம் யானை பலமுண்டு. அவனுடைய சரித்திரம் விநோதமானது: அவன் தந்தைக்கு இரண்டு மனைவிகள். மக்கட்பேற் றின் பொருட்டு ஒரு பெரியவர் கொடுத்தருளிய மாங் கனியை அவர்களிருவரும் பகிர்ந்துண்டார்கள். அதன் காரணமாக அவர்கள் கர்ப்பமடைந்து ஒருத்தி ஒரு குழந்தையின் வலது பாதியையும் இன்னொருத்தி அக் குழந்தையின் இடது பாதியையும் பெற்றனர். இதைக் கண்ட அவர்கள் துக்கமடைந்து அவ்விரண்டு பகுதி களையும் குப்பைமேட்டி லெறிந்துவிடும்படி செய்தனர். அப்பொழுது அங்குத் தற்செயலாய் வந்த கிராம தேவதை அவற்றைக் கண்டு எடுத்து ஒன்றாய்ச் சேர்த் தது. சேர்க்கவே அவை அழகிய ஓர் ஆண் மகவா யின. அந்த ஆண் மகவை அத்தெய்வம் அரசனிடம் கொடுத்துச் சென்றது. அக்குழந்தையை ஜரை என் கிற தேவதை கொடுத்தமையால் அரசன் அதற்கு ஜராசந்தன் என்று பெயரிட்டான். அவன் சரித்திரம் இத்தன்மையானது. அவன் மகா கொடியவன். அவன் நரபலி கொடுக்கவெண்ணி அநேக அரசரைச் சிறை செய்திருக்கிறான். அவனைக் கொல்வதுதான் நீர் செய்ய

வேண்டிய முதல் வேலை. அவனொழிந்தால் வேள்வியும் முடிந்ததெனவே சொல்லலாம்"—என்றார்.

தருமபூபதி, "ஓ அப்படிப்பட்ட கொடியவனைக் கொல்வது நமது முதற் கடமையாகும். அதற்கு யாதேனும் உபாயமுண்டானால், அவ்வழிபற்றி நடப்போம்" என, பகவான், "பராக்ரமமே முக்கியமாயினும் உபாயமும் வேண்டும். உபாயத்தினாலே தான் ஜராசந்தனை வெல்லவேண்டும். எப்படிப்பட்ட பலசாலிகளையும் உபாயத்தினாலே வெல்வதெளிது. ஆதலின் நானும் பீமனும் அர்ச்சுனனும் போய் அவனை வென்று வருவோம். தாம் உத்தரவு கொடுத்தாற் போதும்" என்றார்.

இதைக் கேட்டதும் யுதிஷ்டிரர் மிக மகிழ்ச்சியடைந்து, "தமது பராக்ரமமாகிய நெருப்பில், விட்டிற் பூச்சி விளக்கிலே விழுந்து மாய்வது போல் மடியாமல் ஜராசந்தன் தப்புவது ஒருகாலுமில்லை. அவ்வாறே செய்யலாம்" என்றார். பிறகு பகவானுடைய ஆலோசனையின்படி மூவரும் பிராமண வேடம்பூண்டு ஜராசந்தனுடைய நகரமாகிய கிரிவிரசம் என்கிற நகரத்திற்குப் போய் அவனுடைய அரண்மனைக்குள் பிரவேசித்து, அவனைக்கண்டு, "வேந்தே, நாங்கள் அதிதிகள். உம்மை நாடிவந்தோம்" என்றார்கள். ஜராசந்தன் அதிதிகளை உபசரிக்க வேண்டிய முறைப்படி அவர்களை உபசரித்து வீற்றிருக்கும்படி செய்து சம்பாஷித்தான். அப்பொழுது அவன், இவர்களை, பிராமணராக வேடம் பூண்டு வந்த அரசர்களெனத் தெரிந்துகொண்டு "நீவிர் யாவர்? உண்மையைக் கூறுங்கள்" என்று கேட்டான். கிருஷ்ணமூர்த்தி, "நாங்கள் மூவரும் தருமராஜாவின்

கட்டளையை மேற்கொண்டுவந்த உன் பகைவர்கள். அவர் தருமபரிபாலனம் செய்யும் இந்தக்காலத்தில் நீ கொடுங்கோல் நடத்துகிறாய்! உன்கொடுமை பொறுத் தற் கரியது. பலியிடுவதற்காக அநேக அரசர்களைச் சிறையாக்கி வைத்திருக்கிறாய்? அந்தோ இதனினும் கொடுமை யுண்டோ? ஆதலின் மகாகொடிய குண முடைய உன்னைச் சங்கரிக்கவே நாங்கள் வந்தோம். நான் கிருஷ்ணன்; இவர்களிருவரும் பீமார்ச்சுனர்கள். உண்மையைச் சொன்னோம், உனக்கு ஆற்றலிருந் தால் எங்களுடன் இப்பொழுதே போரிடவா!'' என்றார்.

ஜராசந்தன், உடனே கண்கள் சிவக்க விழித்துப் பார்த்து, "அடே கிருஷ்ணா! இடையா! மாடோட் டும் மடையா! உன் வேலையா இது? இருக்கட்டும். உன்னை நான் அறிவேனல்லவா? நீ என்னோடு எத் தனையோ முறை போரிட்டிருக்கிறாய்? அந்த அர்ச்சு னன் சிறுபையன். நான் பீமனை முதலில் எதிர்க்கிறேன். அவன் முன்னே வரட்டும், அவனுக்கு வேண்டிய படைகளுந் தருகின்றேன்'' என்று கூறி ஆரவாரஞ் செய்தான்.

பிறகு பதினான்கு நாள் இருவருக்கும் கடும்போர் நடந்தது. பதினான்காவது நாள் ஜராசந்தன் களைப் படைந்தான். பிறகு பீமன் அவனோடு மல்யுத்தம் செய்யத் தொடங்கி அவனைக் கீழே தள்ளிக் காலைப் பிடித்திழுத்துத் தூக்கிக் கீழே யடித்துக் கொன்றுவிட் டுப் பெருங்கர்ஜனை செய்தான்.

மறுநாள் கிருஷ்ணபகவான் ஜராசந்தனுடைய பிள்ளைக்குப் பட்டங் கட்டி வைத்து அவனை இராஜ

ஸூய யாகத்திற்கு வரும்படி அழைத்துவிட்டு, அங்குச் சிறைப்பட்டிருந்த அரசர்களெல்லோரையும் விடுவித்து உடனே புறப்பட்டுப் பீமார்ச்சுனர்களுடன் இந்திரப் பிரஸ்தம் வந்து சேர்ந்தார்.

இவ்வாறு ஜராசந்தன் ஒழிந்ததைக் கேட்ட தரும புத்திரர் சந்தோஷமடைந்து, கிருஷ்ண மூர்த்திக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்து தம்பிமார் களைத் தழுவிக்கொண்டு "இனி நாம் மேற்கொண்ட வேள்வி முடிந்ததென்பதில் ஐயமில்லையே!" என்று கூறி மற்றும் நடக்க வேண்டியவற்றிற் சிந்தை செலுத் தினர்.

அத்தியாயம்—3

திக்குவிஜயமும் இராஜஸூய யாகமும்

தருமபுத்திரர் மறுபடியும் சபை கூட்டி இனிச் செய்யவேண்டியதென்ன வென்பது பற்றி ஆலோசித் தார். திக்குவிஜயம் செய்வதே இனிச் செய்ய வேண் டியதெனத் தீர்மானமாயிற்று. பிறகு தருமபுத்திர ருடைய கட்டளையின்படி அர்ச்சுனன் வடதிசை நோக் கிச் சென்றான். பீமன் கிழக்குத் திக்குக்குச் சென்றான். சகாதேவன் தென்றிசைக்கும் நகுலன் மேற்றிசைக்கு மாக ஏகினர்.

வடதிசை நோக்கிச் சென்ற அர்ச்சுனன் தன்னை எதிர்த்த அரசர்களை எதிர்த்துப் போர்புரிந்து தனக் குக் கீழ்ப்படியும்படி செய்தான்; தன்னை எதிர்

கொண்டழைத்துப் பொருள் கொடுத்தவர்களோடு நட்புக்கொண்டு வேள்விக்கு வரும்படி அழைத்தான்; இவ்வாறு அநேக தேச அரசர்களை வென்று ஏராளமான பொருள்களை யடைந்தான்; வடக்கே மலைப்பிரதேசம் போய் அங்குள்ள அரசர்களையும் வென்றான்; பிறகு உத்தரகுரு கண்டம் சென்றான். அங்கே காவலாயிருந்தவர்கள் "இங்குச் சென்றால் தப்பிவருவது அரிது. ஆகையினால் போகவேண்டாம்" என்றனர். அர்ச்சுனன் தான் வந்தகாரிய மின்னதென்று கூற, அங்குள்ளவர்கள், தரும நெறிதவறாத தருமபுத்திரருடைய ஒழுக்கத்திற்காக விலைமதித்திடற்கரிய ஆடை யாபரணங்களையும் ஏராளமான பொருள்களையும் கொடுத்து மரியாதையோடு அனுப்பித்தந்தனர். அர்ச்சுனன், அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு வெற்றிப் பிரதாபத்துடன் இந்திரப்பிரஸ்தம் வந்து தன் அண்ணனிடம் எல்லாவற்றையும் ஒப்புவித்துப் பணிந்தான்.

கீழ்த்திசை சென்ற பீமன், பாஞ்சாலம், விதேகம், புளிந்தம், சேதி முதலிய தேசங்களுக்குப் போய்க் கப்பம் பெற்றுக்கொண்டு, மச்சியம், மாளவம், மகதம், பவுண்டரகம் முதலிய தேசங்களிலுள்ள அரசர்களைப் போரிட்டு வென்று பிறகு கிரிவிரசம் போய் அப்பால் அங்கதேசம் வந்தான்; அங்கதேசாதிபதியாகிய கர்ணனோடு கடும்போர் செய்து அவனை வென்றான்; இப்படியாகப் பலதேச அரசர்களை வென்று ஏராளமான பொருள்களுடன் இந்திரப்பிரஸ்தம் வந்துசேர்ந்தான்.

தென்றிசை சென்ற சகாதேவன், சூரசேனம், கிஷ்கிந்தை, அவந்தி, குண்டினம் முதலிய பல தேசங்களுக்குச் சென்று அங்கிருந்த அரசர்களை வென்று

அநேக திரவியங்களையும், யானைத்தந்தம், தேன், நாளு விதக் கனிகள், புலித்தோல், மான்தோல், புலி நகங்கள் முதலிய அபூர்வமான பொருள்களையும் பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, திரிபுரம், இராஜத பர்வதம், தெலுங்கு தேயம், தக்ஷிணம், கொங்குநாடு, தொண்டைநாடு—இங்கெல்லாஞ் சென்று அரசர்களை வென்று பிறகு மாஹிஷ்மதி நகரம் போனான். அங் கிருந்த நீலன் என்னும் அரசனோடு போர் புரிகையில் சகாதேவனுடைய சேனைக்குக் களைப்பு அதிகரித்தது. அந்த அரசனுக்கு அக்நிபகவான் துணையாக வந்தார். அதனை யறிந்த சகாதேவன் அவரைத் துதித்தான். அக்நிபகவான் எதிர் தோன்றிச் சகாதேவனுக்கும் நீல னுக்கும் சிநேகம் செய்வித்தார். அப்பால் சகா தேவன், இலங்கை போய் விபீஷணரைக் கண்டு அவரி டம் பரிசுபெற்றுப் பிறகு இந்திரப்பிரஸ்தம் வந்தான்.

மேற்றிசை சென்ற நகுலனும் அங்கே அநேக அரசர்களைவென்று ஏராளமான பொருள்கள் பரிசாகப் பெற்றுக் கடைசியில் துவாரகை வந்தான். கிருஷ்ண பரமாத்மா அவனை அன்போடு வரவேற்றுத் தக்க மரியாதைகள் செய்தனுப்பப் பின் அவன் மத்திர தேசம் போய்த் தன் மாமனைக் கண்டு அவனைத் தன்வசப் படுத்திக்கொண்டு இந்திரப்பிரஸ்தம் வந்தான்.

இவ்வாறு திக்குவிஜயம் செய்து முடிந்த பின்னர், தருமபுத்திரர் வேள்வி செய்வதற்குரிய நல்ல நாளைப் பெரியோர்களைக் கொண்டு நிச்சயித்தார்; தமது மந் திரிமார்களுக்குச் சாஸ்திர விதிப்படி வேள்விச்சாலை கட் டவும், வேள்விக்கு வரும் அரசர்களுக்கெல்லாம் அவரவ ருடைய தகுதிக்குத் தக்கவாறு விடுதிகளை ஏற்படுத்த

வும், இன்னும் அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரிக்கவும் கட்டளையிட்டார். தருமராஜாவின் கட்டளையென்றால் அது தரும தேவதையின் கட்டளையாதலால், அவர் விருப்பப்படி யாவும் குறைவின்றி நிறைவேறின. அப்பால் எல்லாத் தேச அரசர்க்கும் நண்பர்க்கும் உறவினர்க்கும் திருமுகமனுப்பப்பட்டது. ஒருவர் வரவில்லை என்கிற குறையின்றி எல்லோரும் யாகவைபவம் கண்டு களிக்க இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தனர். தருமபுத்திரர் யார் யாருக்கு எங்கெந்தவித மரியாதைகள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து, ஒவ்வொருவரையும் அவரவர் விடுதிக்கு அனுப்பினர். கிருஷ்ண பகவானும் அநேகவிதமான பரிசுகளுடன் இந்திரப் பிரஸ்தத்திற்கு வந்து சேர்ந்தார். அவரோடு அநேகாயிரம் யாதவர்களும் வந்திருந்தனர். அத்தினபுரத்தி லிருந்து துரியோதனன், துச்சாதனன் முதலிய தம்பிமார்களுடனே காணிக்கை கொண்டுவந்திருந்தான். பீஷ்மர், திருதராஷ்டிரன், விதுரர், துரோணர், கிருபர், அசுவத்தாமா—முதலியவர்களும் வந்திருந்தனர். கர்ணன், சல்லியன், சகுனி, பலராமன்—முதலியவர்களும் வந்திருந்தனர். இவர்களெல்லோரும் அந்த வேள்விக்கு வேண்டிய உதவிகளைத் தாமே சுதந்தரமெடுத்துக் கொண்டு சந்தோஷமாய்ச் செய்தனர்.

இங்ஙனம் எல்லோரும் வந்த பிறகு தருமபுத்திரர் பெரியோர்களுடைய அநுமதிபெற்று அந்த வேள்வி செய்யத் தொடங்கினர். வேள்வி ஒருவிதமான இடையூறுமின்றி முறைப்படி இனிது நடந்தது. ஆனால் கடைசி நாள், அந்தச் சபையாரைப் பூசிக்க வேண்டிய சமயம் வந்தது. அப்பொழுது தருமபுத்திரர் யாரை முதலிற்

பூசிப்பதென்று அறியாதவராய்ப் பீஷ்மரைக் கேட்டார். பீஷ்மர் தருமரை நோக்கி "சபையில் கதிரவனைப் போல் விளங்கும் கிருஷ்ண மூர்த்தியை முதலிற் பூசை செய்" என்றார். தருமபுத்திரர், பீஷ்மர் கூறியபடியே கிருஷ்ண பகவானுடைய திருவடிமலரை நறும்புனல் கொண்டு அலம்பி அதனைச் சிரசில் புரோட்சித்துக் கொண்டு சோடசோபசார பூசையும் புரிந்து "நான் புனிதனானேன்" என்று கூறித் தேகம் இறும்பூதெய்த மகிழ்ச்சி யடைந்தார். இவ்வாறு கிருஷ்ணபகவானுக்கு முதலிற் பூசை செய்தது கண்டு தேவர், தேவரிஷிகள், பெரியோர்கள் யாவரும் தருமபுத்திரரைக் கொண்டாடினார்கள். க்ஷத்திரியரில் மாத்திரம் சிலர் பொறாமையினால் பெருமூச்சு விட்டுக்கொண்டு அங்குமிங்கும் விழித்துப் பார்த்தபடி பிரமித்தாற்போ லிருந்தனர். நுண்ணறிவுடைய சகாதேவன் இதனை யறிந்து, "ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்குப் பூசை செய்ததில் பொறாமைப் படுகிறவர்களின் தலைமீது எனது இடது காலை இதோ வைத்தேன்!" என்றான்.

இதைப் பார்த்ததும் சேதி தேச மன்னனும் பிறந்ததுமுதல் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் பொறாமை கொண்டவனுமாகிய சிசுபாலன் என்பவன், கடுங் கோபங்கொண்டு சபையைத்தன் கண்கள் சிவக்க விழித்துப் பார்த்து, "இச்சபையின் கண்ணுள்ள வேந்தர்களுக்கு அவமானமும் இடையனுக்குப் பூசையும் கிடைத்தது நியாயந்தானா?" என்று கேட்டுத் தரும புத்திரரையும் பீஷ்மரையும் கிருஷ்ண பகவானையும் பல படியாகத் திட்டினான். கிருஷ்ணனைப் பார்த்து " அடே கிருஷ்ணா! தருமபுத்திரனுக்குத்தான் அறிவில்லை; பீஷ்-

மன் கிழவனைய் விட்டபடியால் தனக்கிருந்த அறிவை இழந்து மனம்போனபடி நடக்கிறான். நீ எப்படிச் சிறிதும் அச்சமில்லாமலும், உன் குலத்தைப் பற்றிச் சிந்தியாமலும் பூசையை ஏற்றுக் கொண்டாய்? இதில் உனக்கு வெட்கமில்லையா? அடே பைத்தியக்காரா! துரியோதனாதியர் நகைக்கிறார்களே! இச்சபையில் நீயும் பீஷ்மனும் பாண்டவர்களுந்தான் இருப்பதற்குத் தகுமே யல்லது மற்றவர்க ளிருப்பதற்குத் தகாது'' எனப் பகர்ந்து தன் இருக்கையைவிட்டெழுந்து வெளியே போனான். தருமபுத்திரர், அவனைத் தடுத்துப் பிடித்துக்கொண்டு, ''அப்பா சிசுபாலா, நீ சினங்கொள்வதாகாது. பொறாமையினாலும் அறியாமையினாலும் வாயில் வந்தவாறு பேசுவது அறிவுடைமை யாகாது. நீ இப்பொழுது இகழ்ந்ததுபோல் பீஷ்மரை ஒருவரும் இது வரையில் இகழ்ந்ததில்லை. அவரை அறியாதவரென்று சொல்ல ஒருவனும் துணியவே மாட்டான். கிருஷ்ண மூர்த்திக்குப் பூசை செய்ததை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்க, நீ மட்டுமேன் வீணே கோபங் கொள்ளுகின்றாய்? முற்றுமுணர்ந்த பெரியோர்களுடைய வாக்குப்படி நாம் நடக்கவேண்டியவர்கள் என்பதை நீ உணரவில்லையே?'' என்று நல்லவார்த்தை சொன்னார். பீஷ்மர், ''தருமநந்தனா! இந்தத் துஷ்டனுக்கு நல்ல வார்த்தை சொல்வதனால் பயனேது? இவன் வீண் அகங்காரங் கொண்டவன். போரில் ஒருவனை வென்று அவனை உயிரோடு விட்டவனெவனோ அவன் தோற்றவனுக்குக் குரு என்கிற க்ஷத்திரிய தருமமுண்டு. இவ்வுலகில் ஸ்ரீ கிருஷ்ணபகவானாலே ஜயிக்கப்படாதவர்கள் யாவர்? இந்தத் துஷ்டன் ருக்மிணிதேவியின் திருமண

காலத்தில் அவரிடம் என்னபாடு பட்டான். இவற்றை யெல்லாம் சிந்தித்துப்பாராமல் சினங்கொண்டால் நாமென்ன செய்கிறது? ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய மகிமையை யாரால் அளவிட்டுப் பேசமுடியும்? வேதியர்க்குள் ஞானமுடையவன் பெரியவன். க்ஷத்திரியர்க்குள் பலமுடையவன் பெரியவன். கிருஷ்ணபகவான் எவரு மடைந்திராத ஞானமும் பலமுமுடையவர். இந்தப் பிறவிக் குருடனுக்கு அவர் மகிமை எப்படித் தெரியும்?" என்றார்.

இப்பொழுது சகாதேவன், "ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குப் பூசை செய்த விஷயத்தில் எவர்கள் பொருமைப் படுகிறார்களோ அவர்கள் வில்லையெடுத்துக் கொண்டு இக்கணமே போருக்கு வரட்டும்! அவர்கள் தலைமேல் இதோ எனது இடதுகாலைத் தூக்கி வைக்கிறேன்" என்றான். இதைக்கேட்டதும் சிசுபாலன் பெருஞ்சினங் கொண்டு தனக்கு நட்பாயிருக்கும் சில அரசர்க்குக் கண்ஜாடை செய்து அவர்களுடன் சேர்ந்துகொண்டு போருக்கெழுந்தான். இப்பொழுது தருமபுத்திரர், பீஷ்மரை நோக்கி, "வேள்விக்கு இடையூறுண்டாகும் போலிருக்கிறதே! இதற்கென்ன உபாயம்?" என்று கேட்டார். பீஷ்மர் "அவ்வாறொன்றும் நேராது. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி இந்தப் பாவிகளை ஒரு நொடியிலே சங்கரிக்கப் போகிறார்" என்றுறுதி கூறினார்.

போருக்கெழுந்த சிசுபாலன் மறுபடியும் பீஷ்மரை வாயில் வந்தபடி பேசிக் கிருஷ்ண மூர்த்தியை "சை-இவன் கெட்டான்; இவன் அறிவுடையவனா?" என்று கேட்டவரெல்லாம் இகழும்படி திட்டினான்.

சிசுபாலனுடைய அன்னை தன் மகனுக்குக் கிருஷ்ணபக வானால் மரணம் நேரிடுமென்பதை அறிந்து அவரிடம் தன் மகன் செய்யும் பிழைகளில் நூறுபிழைகளைப் பொறுத்துக்கொள்ளும்படி முன்பே வரங்கேட்டு வாங் கிக்கொண்டாள். அதனால் பகவான் அது வரையில் பொறுத்துக் கொண்டிருந்தார்; ஆயினும் அந்தமூர்க்கன் வரம்பு கடந்து பேசுகிறபடியால் அவனை ஒழிக்கச் சித்தத்தில் உறுதிகொண்டு இரதத்தின் மீதேறிச் சங் கத்வனி செய்து சக்கரத்தைக் கையிலெடுத்துச் சிசு பாலன் மீது பிரயோகித்து அவனைச் சங்காரஞ் செய் தார். அவன் தலை கீழே விழுந்ததும் அவனுடைய தேகத்திலிருந்து ஒரு சோதி கிளம்பி யாவரும் பார்த் துக் கொண்டிருக்கும்போதே கிருஷ்ணனை வலம்வந்து அவர் திருமேனியில் புகுந்து மறைந்தது. அது கண்டு எல்லோரும் வியப்படைந்து, ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பரமபதி யென்றுணர்ந்து தியானித்துத் தொழுதார் கள். தருமபுத்திரரும் எழுந்து ஸ்ரீ கிருஷ்ண பகவா னைத் தொழுது மகிழ்ந்தார்.

இவ்வாறு சிசுபாலவதமும் கிருஷ்ணமூர்த்திக்கு அக்ரபூசையும் முடிந்தபின்னர்த் தருமபுத்திரர் முறைப் படி எல்லோருக்கும் பூசைசெய்து ஏராளமான தானங் கள் வழங்கித் திவ்ய போஜனம் செய்வித்து வேள்வியை முடித்தார்; அப்பால் சகல தேச அரசர்களும் வேதி யரும் புடைசூழத் தம்பிமாருடனும் திரௌபதியுட னும் வேள்விச் சாலையினின்று புறப்பட்டுப் பரிசுத்த நதியில் அவபிருத ஸ்நானஞ்செய்து அரண்மனை வந்து யாவரும் சம்ராட் என்று கொண்டாடும்படி திவ்ய தேஜஸோடு விளங்கினர். பிறகு எல்லோரும்

தருமபூபதியினிடம் விடைகொண்டு அவரவர் தேசத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கிருஷ்ண பகவானும் அவ்வாறே விடைகொண்டு துவாரகை சென்றார்.

அத்தியாயம்—4

துரியோதனனின் வஞ்சகம்

வேள்விக்கு வந்தவர்களெல்லோரும் அவரவர் ஊருக்குப் புறப்பட்டுப் போன பின்பு துரியோதனன் தன் மாமன் சகுனியோடு சில நாள் இந்திரப் பிரஸ்தத்தில் தங்கியிருந்தான். அப்பொழுது ஒருநாள் இருவரும் முன் மயன் அமைத்த சபையைச் சுற்றிப் பார்த்தார்கள். சபையின் விநோதத்தைக் கண்டு வியப்படைந்து பலபல பேசிக்கொண்டே செல்கையில், நீரில்லாத இடங்களில் துணிகளைத் தூக்கிக்கொண்டு நடந்தனர்; நீர் நிறைந்த தடாகத்தில் தெரியாமல் விழுந்தனர்; கதவில்லாத இடங்களில் கதவிருக்கிறதென் றெண்ணிப்போய் முட்டிக் கொண்டனர். இந்த விநோதத்தைக் கண்ட திரௌபதியும் பீமசேனனும் நகைத்தார்கள். இதனால் துரியோதனனும் சகுனியும் வெட்கமடைந்து உடனே அத்தினபுரம் போக நிச்சயித்துத் தருமபுத்திரர் முதலிய எல்லோரிடமும் விடைகொண்டு புறப்பட்டுப் போயினர்.

தருமபுத்திரர் செய்த இராஜஸூய யாகத்தையும் மயன் அமைத்த சபையையுங் கண்டு பொறாமை கொண்ட துரியோதனன், பாண்டவர்களுடைய பெரு

மையை அழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துத் தன் மாமன் சகுனி, கர்ணன் முதலியவர்களோ டிருந்து ஆலோசனை செய்தான். சகுனி, "தருமபுத்திரரைச் சூதாட வரவழைத்தால், நான் எப்படியும் அவரைச் சூதாட்டத்தில் வென்று உனக்கு அவ்வைவரையும் அடிமைகளாக்குகிறேன்" என்றான். கர்ணன் "இது நல்ல ஆலோசனை தான்" என்றான். துரியோதனன், "மாமா நல்ல யுக்தி சொன்னாய்; அவர்களைச் சூதாட வரவழைப்பதற்கு, ஓர் உபாயம் வேண்டுமே! அது என்ன?" என்றான். சகுனி, "பாண்டவர்களைச் சண்டையில் வெல்வதரிது. ஆகையினால் நான் இந்த உபாயத்தைச் சொன்னேன். முதலில் உன் தந்தையினிடம் இந்த ஆலோசனையைத் தெரிவித்து அநுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். பிறகு நான் அவர்களை இங்குச் சூதாட வரவழைப்பதற்கேற்ற உபாயங் கூறுகின்றேன்" என்றான். துரியோதனன், "நல்லது" என்று சொல்லித் தன் தந்தையிடம் போய், தான் பாண்டவர்களுடைய பொருளைக் கவர்ந்து அவர்களுடைய பெருமையை அழிக்க எண்ணங்கொண்டு அதற்குச் சூதாடுவதே உபாயமெனத் தீர்மானித்திருப்பதாகக் கூறி அவனிடம் அநுமதி கேட்டான். திருதராஷ்டிரன், "துரியோதனா, பொறு; இதைப்பற்றி விதுரனிடம் ஆலோசனைசெய்து பிறகு சொல்லுகிறேன்" என்றான். துரியோதனன், "நீர் விதுரரிடம் ஆலோசித்தால் அவர், சூதாடிப் பிறர் பொருளைக் கவர்வது நியாயமல்லவென்று கூறிவிடுவாரே யல்லது ஒப்புக்கொள்ளவேமாட்டார். அதைக் கேட்டவுடன் நான் உயிரை விட்டுவிடுவேன். பிறகு நீரும் விதுரருமே

இந்த அரசை ஆண்டு கொண்டிருக்கலாம்'' என்று துக்கத்தோடு பதில்சொன்னான்.

மகன் துக்கப்படுவதை அறிந்த திருதராஷ்டிரன், "அப்படியே செய்யலாம்'' என்று கூறி விதுரரை வரவழைத்தான். விதுரர்க்கு இவர்களுடைய ஆலோசனை முன்பே தெரியுமாதலால் அவர் வந்தவுடன், கிழவனை நோக்கி, "நீர் செய்திருக்கும் ஆலோசனை நல்லதல்ல; அது குடியைக் கெடுக்கும் ஓர் இழிவான செய்கை. அறிவுடையவன் அதை விரும்பான். அது கலகம் என்னும் செடிக்குக் கிழங்கு. ஆதலின் அது எண்ணவுந் தக்கதல்ல'' என்றார். திருதராஷ்டிரன், "நியாயமாய்ச் சூதாடினால் கலகம் எப்படி வரும்? நீ போய் என் பேச்சைத் தட்டாமல் யுதிஷ்டிரனை அழைத்துவா'' என்றான். விதுரர், "ஓ கெடுவான் கேடு நினைப்பான்! இது இவர்கட்கு விநாசகாலம் என்பது நிச்சயம்!'' என்றெண்ணித் திருதராஷ்டிரனைப் பார்த்து, "இனி விரைவில் நீர் உமது உறவினரையும் நண்பரையும் இழந்து பெருந் துயரத்துக் காளாவீர்'' என்று கூறி வெகு விரைவில் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்.

அவர் போனபின் திருதராஷ்டிரன், விதுரருடைய கருத்தைச் சிறிது சிந்தித்துப் பார்த்துத் துரியோதனனை அழைத்து "விதுரன் சூதாடுவதை வெறுக்கிறான். அவன் சகல நீதிகளையும் கற்றுணர்ந்தவன். அவனுடைய பேச்சு வீணாகாது. ஆதலின் அவனுடைய பேச்சைக் கடந்து சூதாடல் தீமைதரு மாதலால் அந்த எண்ணம் வேண்டாம்; விட்டுவிடு. உனக்கென்ன குறைவிருக்கிறது? சகல பாக்கியங்களு முடை

யவனுயிருக்கிருய்'' என்று கூறினன். துரியோதனன், ''சோறுந் துணியும் கிடைப்பின் போதுமென்றிருப்பவனுக்கு வயிறு வளர்ப்பதே பெருமை. நாயும் நரியும் வயிறு வளர்க்கவில்லையா? அவ்வாறிருப்பதை விட உயிரைவிடுவது பெருமையல்லவா? பகைவர் கிளேக்காமல வாழ்வதல்லவா வாழ்வு? சூரன் தன் பகைவர் மேன்மையாயிருப்பதைப் பார்த்துக்கொண்டு சும்மாவிருப்பானு? என் செல்வம் பாண்டவர்களுடைய செல்வத்திற்கு எம்மாத்திரம்? அதைக் கவர்ந்தாலல்லது நான் உயிர் பெற்றிரேன்'' என்முன்.

திருதராஷ்டிரன், ''துரியோதனு, நீ பொருமையினுல் உன்மீது அன்புடைய பாண்டவர்களிடம் பகைதேடிக்கொள்கிருய்? இப்படிப் பகை தேடிக்கொள்வதனுல், இப்பொழுது உனக்கிருக்கும் செல்வமும் பெருமையும் குறையும். பொருமை ஒருவனே அழிக்குமே யல்லது செழிக்கச் செய்யாது. உனக்கு விருப்பமிருந்தால் நீயும் அவர்களேப்போல் ஒரு வேள்வி செய்; ஒரு மண்டபமும் கட்டிக்கொள்; சந்தோஷமாயிரு. இதைவிட்டு நீ பொருமை கொண்டு அவர்களேக் கெடுக்க முயற்சி செய்வது இம்மையில் இழிவையும் மறுமையில் நரக வாதனையையும் கொடுக்கும். வீணே நல்லவர்களேப் பகைத்துக்கொள்ளாதே'' என்முன்.

துரியோதனன், தந்தையை நோக்கி நகைத்து, ''நல்லது, நியாயமே கூறினீர்! பின் வருவதை நினைத்துப் பாராமல், சுயபுத்தியை மேற்கொள்ளாமல், பிறர் பேச்சைக் கேட்டுக்கொண்டு பேசுகிற உம்மிடம் நான் என்ன சொல்வது? தவிர நீர் பேசுவது தரும விரதம். இராஜ விரதமல்ல. தருமவிரதம் வேதியர்க்குப் பிர

தானமானது. இராஜவிரதம் அரசர்க்குப் பிரதான மானது. பகைவர்களின் செல்வத்தைக் கவர்வது, நியாயமானாலும் அநியாயமானாலும் அரசர்க்குத் தருமந் தான். அரசன் எப்போதும் உள்ளது போதுமென்று திருப்தி கொள்வது கூடாது. பகைவரை வெல்வதற்கு யுத்தமே உபாயமல்ல; வஞ்சனையும் உபாயந் தான். அரசன் பகைவர்களுடைய செல்வத்தைக் கவர்ந்து நிகரற்றவனாய் வாழவேண்டும். இல்லையானால் அவர்களால் கொலையுண்டு இறத்தல் வேண்டும். இவ்விரண்டு மில்லாமல் நான் எவ்வாறிருப்பேன்? நீர் என்னைத் தடுப்பது நியாயமல்ல'' என்றான்.

திருதராஷ்டிரன், "மகனே, நீ என்ன நியாயங் கூறினாலும் இவ்விஷயத்தில் விதுரனுடைய ஆலோசனையின்படி நடப்பதுதான் யுக்தமென்று எனக்குத் தோன்றுகிறது. ஆதலின் அவன் வந்ததும் ஆலோசிப்போம்'' என்றான். துரியோதனன், "விதுரர் பாண்டவரிடம் அன்புடையவரன்றோ? ஆதலின் அவர் இதற்குடன்படார். இதில் அவருடைய ஆலோசனை சிறிதும் பயன்படாது'' என்றான். திருதராஷ்டிரன் "அப்பா! நீ தீமையை நன்மையாகக் கருதுகிறாய்? விஷம் தற்காலத்தில் குளிர்ந்துதானிருக்கும். அறிவாளி எப்போதும் தீர ஆலோசிப்பானாதலால், நீ அவசரப்படாதே. இதனால் பெருங் கேடு விளையும்'' என, துரியோதனன், "உலகத்தில் அரசர் சூதாடுவது வழக்கந்தானே? சூது காலப்போக்குக்கேற்ற ஒரு விளையாட்டு. அதனால் எந்தத் தீமையும் நேரிடாது. சூதில் மாமா சமர்த்தராகையினால் அவர் நினைத்தபடி காயும் விழும். ஆகையி

ஞல் நான் பாண்டவர்களுடைய இராஜ்யத்தைச் சூதி ஞலேயே கவர்வேன் ; போர்புரிவதில்லை'' என்ருன்.

இதைக் கேட்டதும் திருதராஷ்டிரன் சினங் கொண்டு, "உனக்கு அறிவில்லை. சொன்ஞலும் கேட்க மாட்டேனென்கிருய்? இதன் பயன் பின்ஞல் தெரி யும். விதுரன் உன்னைப்பற்றிப்பேச நேர்ந்த ஒரு சமயம் 'துரியோதனஞல் தீமையே விளையும்' என்று சொன் ஞன். அது நன்ருய் இப்போது நினைவுக்கு வருகிறது. நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். நீ உன் விருப்பப்படி நட! கெட்டழி!—இழிவடை!'' என்று கூறி உடனே விதுரரை வரவழைத்து "நீபோய் நான் அழைத்துவரச் சொன்னதாகக் கூறிப் பாண் டவர்களைச் சூதாட அழைத்து வா'' எனவே விதுரர் மனவருத்தத்துடன், " அந்தோ! ஏன் வீணே கேடு தேடிக் கொள்கிறீர்? நீர் மனமறிந்து பாண்ட வர்களை வஞ்சிக்கப் பார்க்கிறீர்! இதனுல் அவர்களுக் கொரு குறைவு முண்டாகாது. உமது குலத்துக்கு நாச முண்டாகும். இதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. நான் சொல்லுகிறபடி இந்தச் சூழ்ச்சிக்கு இடங்கொடா திருப்பதே க்ஷேமம்'' என்ருர். திருதராஷ்டிரன், "விதுரா, என்பேச்சைத் தட்டாதே! போய்ப் பாண் டவர்களை அழைத்துவா'' என்றுகூறி அவரை இந்தி ரப் பிரஸ்தத்திற்கு அனுப்பிஞன்.

இந்திரப் பிரஸ்தத்திற்குச் சென்ற விதுரர், தரும புத்திரருடைய அறைக்குச் சென்று அவரைக்கண் டார். தருமபுத்திரர் பெரியவராகிய விதுரரை முக மலர்ச்சியோடும் பணிவோடும் வரவேற்றுப் பெரியோர்க் குச் செய்யவேண்டிய மரியாதைகளை யெல்லாம் செய்து

க்ஷேமம் விசாரித்தார். விதுரர் "எல்லோரும் சுகமே இருக்கின்றனர்" என்று கூறினர். அப்பொழுது அவர் முகத்திற் சிறிது வாட்ட முண்டாயது. அது கண்டு தருமபுத்திரர், "சந்தோஷம்! உமது முகம் வாட்ட முற்றிருக்கிறதே! காரணமென்ன?" என்று கேட்டார். விதுரர், பெருமூச்சுடன் "ஆ அப்படி யொன்றுமில்லையே! உமது தந்தை உமது க்ஷேமத்தை விசாரிக்கக் கருதியிருக்கிறார். அங்குப் புதிதாக நியமித்துள்ள சபைக்கு உம்மை வரவழைத்துப் பேச விரும்புகிறார். இவை யன்றி அந்தச் சபையிலிருந்து நண்பர்களுடன் சூதாடவும் உம்மை அழைத்துவர எனக்குக் கட்டளையிட்டார். அக்கட்டளையைச் சிர மேற்கொண்டு இவணுற்றேன். இதுதான் விசேஷம்! உமது விருப்பப்படி நடக்கலாம்" என்றார். இதைக் கேட்டதும் தருமபுத்திரர், "என்ன விநோதமிது! என் தந்தை என்னைச் சூதாடுவதற்கா அழைத்தார்? வெகு விந்தை! நான் அங்கேகிச் சூதாடுவேனாகில் நமக்கும் அவர்கட்கும் பகையுண்டாவதில் ஐயமில்லை. பகையை யுண்டாக்கும்படியான ஒரு செய்கையைச் செய்ய நானெவ்வாறு உடன்படுவேன்? என்ன சங்கடமிது! தமக்கு இதில் விருப்பந்தானா? தாம் எவ்வாறு கட்டளையிடுகிறீரோ அவ்வாறு செய்கின்றேன்" என்றார்.

விதுரர் சிறிது நகைத்து, "யுதிஷ்டிரரே! நான் உமது தந்தையாகிய முதியவரிடம் 'சூதுதீமைகளுக்கெல்லாம் வித்து; அதனை அறிவுடையவன் விரும்புவானோ? விரும்பான். ஆதலின் இம் முயற்சி வேண்டாம்' எனப் பன்முறை சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கவில்லை. 'நான் தருமனை அழைத்துவா என்று

சொன்னால் நீர் அவ்வாறு செய்வதை விட்டு என் என்னைத் தடுத்துப் பேசுகிறீர்?' என்று அவர் என்னைக் கடிந்துகொண்டார். அதன்பின் ஏதோ பொல்லாத காலம் முன்னிற்கிறதென்று எண்ணிக்கொண்டு, வேறொன்றும் அவரோடு பேசாமல் நேரே இங்கு வந்தேன். நீர் சகலமுந் தெரிந்தவர். உமக்கு நானென்ன சொல்லப் போகிறேன். தீர ஆலோசித்து நடந்து கொள்ளும்'' என்றார். தருமபுத்திரர். "நல்லது! அச்சபையில் சூதாடுவதற்கென்று வந்திருப்பவர்கள் யாவர்? என்னோடு சூதாட முன்னிற்பவர் யாவர்?'' என்று கேட்டார். விதுரர், "சகுனி மாமாதான் தலைவனாக வந்திருக்கிறான். இவனுடைய குணந்தான் உமக்குத் தெரியுமே! இவன் சூதாட்டத்தில் வல்லவன். நினைத்தபடி பகடை போடுவான். சித்திரசேனன், சத்தியவிரதன், புருமித்திரன் ஜயன்—முதலிய இவர்களும் வந்திருக்கிறார்கள்'' என்றார். யுதிஷ்டிரர், "ஓ அங்குச் சூதாட என்னை அழைப்பது என் தந்தையல்லவா? என் தந்தை எனக்குத் தீங்கு நினைப்பாரா? நினைக்கவே மாட்டார்! ஆகையினால் நான் உம்மோடு அங்கே வருகிறேன். வந்து தந்தையின் விருப்பப்படி சூதும் ஆடுகிறேன். ஆனால் சகுனியோடு மாத்திரம் ஆட எனக்கு விருப்பமில்லை. ஆயினும் அவன் என்னை ஆட அழைப்பானாயின் ஆடாம லிருக்கவுமாட்டேன். அதனால் வந்தது வரட்டும். வருவதெதுவும் வந்துதான்தீரும். வருவதை யாரே விலக்கவல்லவர்?'' என்று கூறி, அத்தினபுரம் போகத் தீர்மானித்து இந்தச் செய்தியைத் தம்பிமார்களுக் கறிவித்து அவர்களைப் பயணப்படுத்தி அரசர்க்குரிய ஆடம்பரத்துடன் இர

தங்களிலே விதுரர், தம்பிமார், திரௌபதி இவர்களுடன் புறப்பட்டுப் போனர். வழியில் விதுரர், துரியோதனனுடைய வஞ்சக எண்ணங்களையும் அதற்குக் குருடன் இணங்கி யிருப்பதையும் பாண்டவர்களுக்கு விஸ்தாரமாய்க் கூறினர்.

அதைக் கேட்டதும் யுதிஷ்டிரர், பெருவருத்தமடைந்து, "புறப்பட்டு வந்தாயிற்று; இனி என்ன செய்வது? அன்றியும் என்னை யாரேனும் சூதாட்டத்திற் கழைத்தால் வரமாட்டேன் என்று சொல்வது மில்லை. ஆதலால் இனி நன்மையாயினும் ஆகுக! தீமையாயினும் ஆகுக!" என்று கூறினர். விதுரர் "விதியின் படி மதி செல்கின்றது"—என எல்லோரும் அத்தினபுரம் போய் அவர்கட் கென்று நியமித்திருந்த திருமாளிகை யொன்றிலே இறங்கினர்.

அத்தியாயம்—5

தருமபுத்திரரும் சகுனியும் சூதாடல்.

மறுநாட் காலையில் தருமபுத்திரர் தம்பிமார்களுடனும் திரௌபதியுடனும் திருதராஷ்டிரனுடைய அரண்மனை சென்று அவனைப் பணிய மற்றவரும் பணிந்தனர். பின்னர் எல்லோரும் பீஷ்மர் முதலிய பெரியவர்களை வணங்கினர். அப்பால் உணவருந்தித் தருமபுத்திரர் தம்பிமாருடன் துரியோதனன் கட்டி முடித்திருந்த சபைக்குச் சென்றார். அங்கே சகுனி மாமாவுடன் துரியோதனன் முன்னரே சென்று காத்திருந்து அவரை வரவேற்று ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து உபசரித்தான். எல்லோரும் சற்று நேரம்

பலபல பேச்சுக்கள் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது சகுனி, "இந்தத் திவ்ய சபைக்கு இன்று நமது நண்பர் பலபேர் வந்து கூடியிருக்கின்றமையால் உம்மோடு சொக்கட்டாடை எனக்கு விருப்ப முண்டாகிறது. ஓராட்டம் ஆடுவோம் வாரும். உமது விருப்பப்படி ஏதாவது பந்தயம் வைக்கலாம்" என, தருமபுத்திரர், சிறிது நகைத்து, "என்ன சொல்லுவேன்! சூதாடுவதே குற்றம்; அதிலும் வஞ்சனையாக ஆடுவதென்றால் அது எத்தகைய குற்றமாகும்? சிந்தித்துப் பாரும். வேந்தர்கள் ஒருவரையொருவர் வல்லமையினாலே வெல்லவேண்டுமே யல்லாமல் இவ்வாறு வஞ்சனையினால் வெல்ல முயல்வது ஒரு சாமர்த்தியமாகுமா? உங்களோடு வேடிக்கையாகவும் சூதாடுவது கூடாது. நீங்கள் பிறரை வஞ்சிப்பதிலேயே கண்ணுயிருப்பவர்கள்" என்று கூறினர். சகுனி, "நன்றாய்ப் பேசுகிறீர்! எங்களை வஞ்சகர்களென்றும் உமது பொருளை வஞ்சனையினால் கைக்கொள்ள நாங்கள் கூடியிருப்பதாகவும் நீர் கருதி ஆடுவதற்கு அஞ்சுகின்றீர் போலும்! ஆனால் நீர் ஆடவேண்டாம். உலகத்தில் சிநேகத்தினால் இலாபமுமுண்டாம், நஷ்டமுமுண்டாம். இவற்றிற்கெல்லாம் உம்மைப்போன்ற வேந்தரொருவர் அஞ்சினால், நானென்ன சொல்லப்போகின்றேன்? வெற்றி ஒருவர் பங்கிலென்று எவ்வாறு கூறுவது? வெற்றியும் தோல்வியும் இருவருக்கும் பொது. விருப்பமிருந்தால் பந்தயம் வைத்து ஆடுக. இன்றேல் வேண்டாம். கட்டாயப் படுத்துவாரில்லை" என்றான். தருமபுத்திரர், "நல்லது; வேந்தராயினோர், தங்கட்குரிய நெறி தவறாமல் போர்புரிந்து அரசைத் தேடவேண்

டும்; தேடிய பின் முறை தவருமல் பரிபாலனஞ் செய்தல் வேண்டும். அவ்வாறின்றி வஞ்சனையினுல் பிற ரரசைக் கைப்பற்றுவது, இவ்வுலகில் இகழ்ச்சியையும் மறுவுலகில் நரக துன்பத்தையுங் கொடுக்குமென்பதில் ஐயமில்லை'' என்று கூறி, "இருக்கட்டும், என்னை யாரேனும் சூதாட அழைத்தால் நான் அவர்களோடு ஆடாம விருப்பதில்லை. ஆதலின், ஆட இணங்குகின்றேன். என்னேடு ஆடப்போவது யார்? பந்தயமென்ன?'' என்று கேட்டார். துரியோதனன் முன்வந்து, "எனக்காகச் சகுனிமாமா ஆடுவார். எதைப் பந்தயம் வைக்கச் சொல்லுகிறீரோ அதை நான் வைக்கிறேன். ஆட்டம் நடை பெறட்டும்'' என்ருன். இதைக் கேட்டதும் தரும புத்திரர், "நல்லது'' என்று நவின்று பகவானைத் தியானித்தார். அப்பொழுது அந்தச் சபைக்குத் திருதராஷ்டிரன், பீஷ்மர், விதுரர் முதலியவர்கள் வந்து அவரவர்க் குரிய ஆசனத் தமர்ந்தனர். தருமபுத்திரர் எல்லோரையும் நோக்கி வந்தனஞ் செய்து, "இதோ இப்பொழுது இங்கு நடக்கப் போகும் சூதாட்டத்திற்கு நான் என்னுடைய அரசு, சொத்து யாவற்றையும் பந்தயமாக வைக்கின்றேன்'' என்ருர். அப்பொழுது சகுனி மகிழ்வுற்று, எல்லோரையும் பார்த்து, "என்னேடு தருமபுத்திரர் ஆடப் போகிருர். இருவரும் பந்தயம் வைத்திருக்கின்றனர். நான் எந்த விருத்தத்தைக் கூறிப் பாய்ச்சிகைகளை உருட்டுகிறேனே அந்த விருத்தம் விழுந்து விட்டால் நான் ஜயித்தவனுவேன். இன்றேல் நான் தோற்றவன். தோற்றவன் வைக்கின்ற பந்தயத்தை வென்றவன் அடைவான். இந்த நிபந்தனையின்படி ஆட்டங்

தொடங்கி யிருக்கிறது'' என்று தெரிவித்து உடனே காய்களை உருட்டினன். சகுனி கூறிய விருத்தங்களே விழுந்தன. உடனே அவன் "இதோ ஜயித்தேன் உமது பந்தயத்தை'' என, தருமபுத்திரர் வேறு சில பந்தயம் வைத்தார். சகுனி மறுபடியும் ஆடி அதை யும் ஜயிக்கவே, மீண்டும் பந்தயம் வைக்க அவரிடம் ஒன்றுமில்லாமையால் தம்முடைய தம்பிமார்களை ஒவ் வொருவராக வைத்தாடினர். அவர்களையும் சகுனி ஜயித்து விட்டான்.

இவ்வாறு தருமபுத்திரர் எல்லாவற்றையுந் தோற் கவே, விதுரர் மிகவும் வருத்தமடைந்து, திருதராஷ்டி ரனை நோக்கி, "என்ன கொடுமையிது! துரியோதனன் பிறந்தபோது நரியைப்போல் ஊளையிட்டா னல்லவா? அப்பொழுதே, அவனைக் காட்டிலெறிந்து விடவேண்டு மென்றும் அவனிருந்தால் குடும்பத்தில் கலகமும் துன் பமும் விளையுமென்றும் சொன்னேன். அதனை நீர் கேட்கவில்லை. பிறகு இப்போது சூதாடுவது கூடாது; இதனல் பல தீமைகள் விளையும் என்று கூறி இதற்கு அநுமதி கொடுக்க வேண்டாமென்று என்னலியன்ற வரையில் எடுத்துரைத்தேன். அதையும் நீர் கேட்க வில்லை. துரியோதனன் புதல்வனல்லன்! குலத்தை யழிக்கத் தோன்றிய கொள்ளிவாய் நரி! அவனிருக்கு மிடம் சுடுகாடாகு மென்பதி லையமில்லை! அவனுக்கிடங் கொடுக்கின்றீர். இதனல் உமக்குப் பாபமும் பழியுமே விளையும்; புகழ்கெடும். அறிவிலியாகிய ஓடக்காரனுடைய ஓடத்தில் ஏறிப்போகிறவனுக்கு ஒப்பாயிருக்கிறீர் நீர்! இந்தப் பொருள் உமக்குக் கொடிய விடமேயாம். இந்தச் சகுனி வஞ்சகன். சூதாட்டத்தில் இவன் சாமர்த்

தியத்தினால் வெற்றி பெறுகிறானென்று எண்ணவேண் டாம். இவன் வல்லமையெல்லாம் ஆடத்தெரியாதவர் களிடமே தவிர தெரிந்தவர்களிடம் பலியா. வஞ்சகர் அரச சபையிலிருப்பதால் நன்மை எவ்வாறுண்டாகும்? இதனை நீர் நினைத்துப் பார்க்கவேயில்லை. எனக்கு மிக வும் வருத்தமாயிருக்கிறது'' என்றார்.

இவற்றைக் கேட்டதும் துரியோதனன் விதுரரை எரிப்பவன் போல் விழித்துப் பார்த்து, ''பிறரைப் புகழ் வதும், நம்மை இகழ்வதும் உமக்கு வழக்கமாய் விட் டது. நீர் என்னைச் சிறுபையலென் றெண்ணிப் பேசு கிறீர் போலும்! நல்லது. உம்முடைய தன்மை தெரிந் தது. நீர் உண்ட வீட்டிற் கிரண்டகம் நினைக்கும் பாவி களைச் சேர்ந்தவர். இப்படி யிருப்பதால் உமது புகழ் கெடும். அவரவர்க்குள்ள அறிவைக்கொண்டு அவரவர் பிழைக்கிறார்கள். நடுவில் நீரேன் வந்து வீணே கத்து கிறீர்! பொறுத்தேன் இதுவரையில். இனி என்னால் பொறுத்தற்காகாது. வீணிலேன் பகையைத் தேடிக் கொண்டு அழிகிறீர்? வேண்டாம்'' என்றான்.

விதுரர், ''துரியோதனா, நீ உண்மையைச் சொன் னாய்! உனக்கு நான் புத்திசொல்ல வந்தது தவறுதான். ஒருவன் தன் தலையினாலே ஒரு பெரிய மலையை முட் டித்தள்ள முயற்சி செய்கிறான். இன்னொருவன் புவி யைத் தன் கைச் சிறுவிரலாலே பெயர்த் தெடுக்கப் பார்க்கிறான். இவர்களுக்குப் புத்தி சொல்பவன் யாவன்? அவர்கள் ஒருவர்க்கொருவர்தான் புத்திசொல் லிக் கொள்ளவேண்டும். சகுனி புவியைச்சிறுவிரலினாலே பேர்க்கப்பார்க்கிறான். நீ மலையை உன் தலையினால் தள்ள

முயற்சிசெய்கிறாய்? இதனிடையில் நான் வந்தது எப்படிப் பொருந்தும்? அப்பனே! நீ என்னைப் பகைவனாய் நினைத்துப் பேசுகிறாயாயினும் நானுன்னை அப்படியெண்ணவில்லை. உன்னுடைய நன்மையைக் கருதி என் கடமையைச் செலுத்த முன்வந்தேன்'' என்றார்.

துரியோதனன், "உம்மிடத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. நீர் இங்கே இருக்கத்தக்கவரல்லர். எங்கேயாவது உமக்கு விருப்பமான இடத்திற்குப் போய்ச் சேரும். நில்லாதேயும்'' என்று சிறிதும் அச்சமின்றிக் கூறினான்.

இதைக் கேட்டதும் விதுரர், "ஓ! இவனை இவனுடைய தீவினை பாதாளத்திலே தள்ளுகிறது. இவன் இனி மீள வழியில்லை. இன்றேல் இவ்வாறு பேசுவானா? கெடுமதி கண்ணுக்குத் தெரியாது'' என்று கருதி அவனை நோக்கிக் "கவலை வேண்டாம்! நீ கூறியபடியே நான் எங்கேயாவது செல்கின்றேன். நலஞ் சொல்லுகிறவனை நேசியாமல் நீ துரத்துகின்றாய்! நல்லது இத்தகைய உன்னுடைய நட்பில்லாமலிருப்பது எனக்கும் நல்லதுதான். நான் உன்மீது பரிதாபங்கொண்டே உனக்கு இதங் கூறினேன். அது உனக்குமட்டுமல்ல; உன் தந்தைக்கும் ஏற்றதாயில்லை. ஏற்றதாயிராது. சாகப்போகிறவனுக்கு மருந்து எப்படி வேண்டியிருக்கும்? ஒன்று கேள்—உலகத்தில் செவிக்கினிமையாய்ப் பேசுகிறவர்கள் அநேகர் கிடைப்பார்கள். உண்மையில் எதற்கு மஞ்சாமல் நன்மைகளையெடுத்துக் கூறுகிறவர்கள் கிடைப்பது அரிது; இதனை நீ கவனியாமலே என்னைத் துரத்துகின்றாய். இனி உன் விருப்பம்போல் நட'' என்று கூறி வேறு பக்கம் திரும்பினார்.

துரியோதனன், அவரைப் பொருட் படுத்தாமல் மறுபடியும் சூதாடச் சகுனிக்குக் கண்ணால் குறிப்பிட்டான். சகுனி மறுபடியும் ஆடத் தொடங்கித் தரும புத்திரரைப்பார்த்து, "உமது நாடு நகரம், செல்வம், தம்பிமார்கள் இவற்றையெல்லாம் நான் ஜயித்துவிட்டேன். இனியென்ன பந்தயம்? இத்தடவை நீர் ஜயமடைவது கூடும்" என்று இறுமாப்புடன் கூறினன். தருமபுத்திரர், அவனுடைய இறுமாப்பையும் வஞ்சகத்தையும் எண்ணி, "ஏ சகுனி! உன் வஞ்சகம் இன்னும் எவ்வளவுண்டு பார்க்கிறேன்! எங்கே? காட்டு. இந்தத் தடவை நானே பந்தயமாக நிற்கின்றேன்" என்று சொல்ல, சகுனி உடனே பாய்ச்சிகையைக் கையிலெடுத்து உருட்டிப் போட்டான். அது அவன் பக்கமாகவே விழுந்தது. உடனே "இதோ உம்மையும் ஜயித்துவிட்டேன்" என்று கொக்கரிப்புடன் கூறினன். தருமபுத்திரர், கிருஷ்ணபகவானைத் தியானஞ்செய்தபடி தலை குனிந்திருந்தார்.

இப்பொழுது சகுனி எழுந்து நின்று சபையோரைப் பார்த்து, "இனிப் பாண்டவர் ஐவரும் எங்களுக்கு ஊழியக்காரரானார்கள்! நாங்கள் அவர்களை ஜயித்துவிட்டோமல்லவா? இதை நீங்களறிந்திருங்கள்" என்று பெரிய ஆரவாரத்துடன் சொல்லிப் பின் உட்கார்ந்து தருமபுத்திரரைப் பார்த்து, "ஏன் தலை குனிந்துகொண்டு உட்கார்ந்திருக்கிறீர்? நீர் தவறிவிட்டீர்! உமக்குள்ள சொத்துக்களையெல்லாம் வைத்து ஆடிய பிறகல்லவா நீர் பந்தயமாக நிற்கவேண்டும்? இதை யறியாமற் போனீரே! உம்முடைய மனைவியாகிய திரௌபதியை யேன் வைத்து ஆடக்கூடாது?

ஆடும். உமக்கு இம்முறை ஜயங் கிடைக்கட்டும்" என்ருன். இவன் இவ்வாறு கூறியது கேட்டுத் துரியோதனுதியர் நகைத்தனர். தருமபுத்திரர், சிறிதுந் தாழாமல், "இதோ திரௌபதியையும் பந்தயம் வைத்தேன்" என்ருர். சகுனி, உடனே "இதோ ஜயித்தேன்" என்று கூறிக் காயை உருட்டினுன். பாய்ச்சிகை அவன் பக்கமே விழுந்தது. அதுகண்டு துரியோதனுதியர் கைகொட்டி நகைத்தார்கள். அங்கிருந்த பீஷ்மர், விதுரர் முதலிய பெரியோர்களும் பீமார்ச்சுனர்களும், பெரிய விசன மடைந்தார்கள். தருமபுத்திரர் "ஊழ் வினையின்படி எல்லாம் நடக்கின்றன! தடுப்பவர் யாவர்?" என்று கூறிப் பகவானைத் தியானித்தார்.

அத்தியாயம்—6

திரௌபதி மானஸம்ரக்ஷணம்

இவ்வாறு தருமபுத்திரர் எல்லோரையும் இழந்து தலை குனிந்ததைக் கண்டு துரியோதனன் கைகொட்டி அட்டகாசஞ் செய்து தன் தம்பிமார்களைப் பார்த்து, "திரௌபதியை இப்பொழுதே நமது அரண்மனைக் கழைத்து வாருங்கள். அவள் இனி நமதரண்மனைப் பணிவிடைப் பெண்களோடிருந்து நமக்குப் பணி செய்யத் தக்கவளேயாவள். அவள் இவ்வாறு அடிமையாக வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்" என்று சிறிதும் மனங் கூசாமற் கூறினுன். விதுரர், இதைக் கேட்டதும் பெருந் துயரத்துடன் துரியோதனனை நோக்கி, "அடே! என்ன அநியாயமிது! இது

வரையில் எவருமே செய்ததில்லை. இப்படிப்பட்ட கொடுமை! அடே, இதைச்செய்ய உன் மனம் எப்படிக் கூசாமலிருக்கிறது ? உன்னுடைய கழுத்தில் யமபாசம் சுற்றிக்கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் இவ்வாறு செய்ய உன் நெஞ்சில் துணிவுபிறவாது. நீ பாண்டவர்களுக்கு இவ்வாறு இடர் புரிவது, மிருகேந்திரனாகிய சிங்கத்தினிடம் அற்பப் பிராணியொன்று குறும்பு செய்வதுபோலிருக்கிறது. பாண்டவர்களுடைய வல்லமையை நீ சிறிதும் அறியவில்லை. அடே! அவர்கள் சினங் கொள்வார்களானல் இவ்வுலகத்தையும் அழித்து விடுவார்கள். ஆதலின் நீ தப்புவதரிது. வீணே யேன் அழிகின்றாய் ? இங்கே பார்; திரௌபதை உனக்கு அடிமையாகவில்லை. தன்னைப் பணயமாக வைத்து ஆடிச் சகுனியினிடம் கட்டுப்பட்ட தருமபுத்திரர் திரௌபதியைப் பணயம் வைப்பதற்கு எவ்வாறு அதிகாரியாவார் ? இதனை யறிந்தும் உன் தந்தை கவனியாமலிருக்கிறார்! நீயும் எந்த ஈனனும் செய்யத் துணியாத செய்கையைச் செய்யத் துணிந்து, தூண்டிலிருக்கும் இறைச்சித் துண்டிற் காசைப்பட்டு உயிரை இழக்கும் ஒரு மீனைப்போல், பாண்டவர்களுடைய செல்வத்திற் காசைப்பட்டு வீணே நாசமடைகிறாய்!—என்ன சொல்வேன்! நாசகாலம் வந்துவிட்டது! குலமழிந்தது! கொடுமை பலத்தது! வருவது வந்துதானே தீரும்—'' என்று கூறிப் பெருமூச்செறிந் தமர்ந்தார்.

துரியோதனன் அவரை முன்போலவே கடிந்து கொண்டு தன் சாரதியை அழைத்து "நீ இக்கணமே விரைந்துசென்று அந்தப்புரத்திலிருக்கும் திரௌபதியை இங்கே அழைத்துவா'' என்று கட்டளையிட்டான்.

சபையிலிருந்த பெரியோர்களனைவரும் மனம் நொந்து, "கடவுள் இதனை எப்படிப் பொறுப்பார்? எவ்வாறு இந்தப் பூமி இதைத் தாங்கும்? இனி அழிந்தான் துரியோதனன்" என்று பேசிக்கொண்டனர். திருதராஷ்டிரன் பழிபூணப் பிறந்தவனானதினாலே, அந்தோ! இவன் கண்களிருண்டதுபோல் மனமும் இருண்டது போலும்! செவியும் அடைந்து பாழ்பட்டதுபோலும்! என்றெண்ணி, "மகா பாவி! பழிகாரன்!" என்று திட்டி, எல்லோரும் ஏசி இகழ்ந்து காரியுமிழ்ந்து காற்கடை கொண்டொதுக்கும்படி பேசாமடைந்தை போலிருந்தான்.

அந்தப்புரத்திற்குச் சென்ற சாரதி திரௌபதியைக் கண்டு வணங்கிச் சூதாட நேர்ந்ததையும் அதனால் விளைந்ததையுங் கூறி, "அம்மணி! இப்பொழுது உம்மை எங்கள் எஜமானர் சபைக்கு அழைத்து வரும்படி என்னை யனுப்பினார். அவர் கட்டளைப்படி நான் வந்தேன்" என்றான். அதைக் கேட்டதும் திரௌபதி "என்னகாலமிது! என்னகொடுமையிது! இதற்கோ இங்கு வந்தது?" என்றெண்ணித் துயரமடைந்து சாரதியைப் பார்த்து, "அப்பா! என்ன சொல்வேன் நான்! மனைவியைப் பந்தயம்வைத்து ஆடுவாருண்டா? இது செய்யத் தகாததென்கிற அறிவில்லாதவரா தருமபுத்திரர்? நீ சபைக்குப்போய் அவரைக்கண்டு "உம்மைப் பந்தயமாக வைத்துத் தோற்றபிறகு என்னைத் தோற்றீரா? என்னை வைத்துத் தோற்றபிறகு உம்மையா? என்று நான் கேட்டதாகக் கேட்டுத் தெரிந்து கொண்டுவா" என்று கூறி அனுப்பிவிட்டு இன்னது செய்வதெனத் தெரியாதவளா யிருந்தாள்.

கற்பிற்கணிகலமாகிய திரௌபதி துயரக்கடலில்

மூழ்கி இவ்வாறு இங்கிருக்கச் சபைக்குச் சென்ற சாரதி ஆங்கேகியதும் தருமபுத்திரரை வணங்கித் திரௌபதி கேட்ட கேள்வியைக் கேட்டு விடைக்காகக் கைகட்டி நின்றான். தருமபுத்திரர் குனிந்த தலைநிமிரவேயில்லை. துரியோதனன் சிறுநகைசெய்து, "ஓ! ஓ! இன்னமும் அவளுக்கு அந்தப்புரமா? நன்று நன்று! அவளுக்கு ஏதாவது பேச வேண்டியதா யிருந்தால் அவள் சபைக்குவந்துபேசட்டும். அழைத்துவா சபைக்கு விரைவில்! போ" என்றான். அப்பொழுது சபை நடுங்கியது. "உலகம் அழிந்தது" என்றனர் பெரியோர்.

இங்ஙனமிருக்கையில் அந்தப்புரத்துக்கேகிய சாரதி திரௌபதியைக் கண்டு அங்கு நடந்தது கூறி அழைத்தான். திரௌபதி, "என்ன வஞ்சனை யிது? அந்தோ! சூதாட்டத்திலும் தருமாதருமம் கிடையாதா? இந்த வஞ்சனைக்குப் பெரியோர்கள் எப்படி இடங் கொடுத்தார்கள்? எவன் தருமத்தை விடாமற் காத்து வருகிறானோ அவனே என்னைக் காப்பான்" என் றெண்ணிக் கண்களிலிருந்து நீர்ததும்ப மனந்தடுமாறி நிற்கையில் ஒருவன் ஆங்குற்று, "அம்மணி வந்தனம்! சபைக்கு வரவேண்டும், தருமபுத்திரர் அழைத்துவர ஆக்ஞாபித்தார்" என, திரௌபதி அவனைப் பார்த்து அவன் தருமபுத்திரருக்கு அநுகூலமானவனா யிருக்கக்கண்டு சபைக்கேகத் துணிந்தாள். திரௌபதி அப்பொழுது வீட்டிற்காகாதவளா யிருந்தபடியால், ஒற்றைத் துகிலோடு நாணத்தினால் அங்கமெல்லாங்கூசத் துக்கத்தினால் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாகப் பெருகப் பெரு மூச்சினால் திணறிக்கொண்டே நடந்து சபைக்குச் சென்று, திருதராஷ்டிரன் முதலியவர்கள்

வீற்றிருந்த இடத்திற்கு அருகே போய்த் தலை குனிந்த படி நின்றாள்.

அவ்வாறு நிற்கும் பதிவிரதா சிரோமணியைச் சிறிதுங் கூசாமல் துரியோதனன், விழித்துப்பார்த்துப் பின் சாரதியை நோக்கி "அவள் ஏன் ஒதுக்குப்புறமாய் நிற்கிறாள்? அவளை இங்கே என் பக்கமாய் இழுத்துவா. அவள் தனக்கு வேண்டியதைத் தன் கணவனிடம் கேட்டுக்கொள்ளட்டும்" என்றான். சாரதி திரௌபதியைத் தொட்டு இழுக்க அஞ்சிச் சிறிது தயங்கினான். அதனையறிந்த துரியோதனன் தன் தம்பி துச்சாதனன் என்கிற கொடியவனை அழைத்து "அடே! சாரதி பீமனுக்கஞ்சி நிற்கின்றானென்று தெரிகிறது. நீ போய் அவளை இங்கே இழுத்துவா" எனத் துச்சாதனன், சடக்கென்றெழுந்து திரௌபதியினிடம் போய் அவளைப் பார்த்து, "நீ எங்களுக்கு அடிமையாய் விட்டாய்! ஆதலால் இவ்வாறு நிற்பது கூடாது. எங்களண்ணா அழைத்த இடத்திற்கு வரவேண்டும். அவர் இப்போது உன்னைத் தமக்கருகே அழைக்கிறார்; வா" என்று புன்னகையுடன் அழைத்துக் கையைப் பிடிக்கப் போனான். திரௌபதி "ஆ! என்ன அநியாயமிது! சை" எனக்கூறி முகங்கடுத்துச் சற்று ஒதுங்கினாள். துச்சாதனன், அவள் ஒதுங்கியது பிறரறியா வண்ணம் அவளை நெருங்கிக் கரத்தைப் பிடித்தான். அவள் தன் கரத்தைத் திமிறிக்கொண்டு "ஐயோ! ஐயோ! கூ! கூ!" எனக் கதறியபடியே அந்தப்புரத்தை நோக்கி யோடினாள். அவள் ஓடவே மகாபாவியாகிய துச்சாதனனும் தொடர்ந்தோடித் திரௌபதியின் கூந்தலைப் பிடித்து அவள் கதறக் கதற

இழுத்துக்கொண்டுசபையை நோக்கிஅழைத்துவந்தான். இந்தப் பரிதாபமான காட்சியைக் கண்ட அந்தப்புர ஸ்திரீகள் அலறினார்கள்; பெரியோர்கள் "என்ன விபரீத காலமிது! அந்தோ!" என வியப்புற்றுப் பிரமித்திருந்தனர். திரௌபதி "அடே பாதகா! நீ நரகத்தை யநுபவிப்பாயடா! என் நாதனாகிய தரும மூர்த்தியின் பொறுமை உங்களை எரிக்காமலா போய்விடும்? தப்பமாட்டீர்கள்; சொன்னேன்! அரசரென்பவர்க் கடுக்குமொரு செய்கையா இது?" என்று கத்தினாள். துச்சாதனன், "நியாயம் அநியாயம் இவற்றை நீ யார் எனக்கெடுத்துக் கூற? கிருஷ்ணனையும் பீமார்ச்சுனர்களையும் இப்போது துணைக்குக் கூப்பிடு பார்க்கலாம். உன்னுடைய கணவர்களெல்லோரும் இதோபார் எங்கட்கு அடிமைகளாய் நாங்கள் காலாலிடும் அலுவல்களைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்! நீ மாத்திரம் எப்படித் தப்புவாய்?" என்று அதட்டிக் கொண்டே சபைக்கழைத்து வந்து நிறுத்தினான்.

திரௌபதி சபையில் தன் இருகண்களையும் கையினால் மூடிக்கொண்டு கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக அழுதபடியே "அந்தோ இந்தச் சபையிலுள்ளவர்க ளெல்லோரும் சாஸ்திர முணர்ந்தவர்க ளல்லவா? மக்களைப் பெறுதவர்களல்லவே?" என்று கேட்டாள். ஒருவரும் பதிற் பேசவில்லை. பீஷ்மர் மாத்திரம், "பெண்ணரசே, நாங்கள் இப்போது நீ கேட்டதற்கு மறுமொழி கூறமாட்டாதவர்களா யிருக்கிறோம். ஏனெனக் கேட்பாயாயின், ஒருமாது தன்கணவனுக்கே உரியவள். ஆதலின் கணவன் ஜயிக்கப்பட்டமையினால் நீயும் ஜயிக்கப்பட்டாய்" என்றார். திரௌபதி உடனே

கோபங்கொண்ட ஸர்ப்பம்போல் பெருமூச் செறிந்து ஒருமுறை சபையை நோக்கிப் பின் "அந்தோ! என் நாதன் தாமே வலிதில் இங்கு வந்து சூதாடினரா? வீட்டிலிருந்தவரை வஞ்சகமாக அழைத்துவந்து சூதாட வைத்து அவரை ஏமாற்றித் தோற்கடித்து இவ்வாறு சதிகாண்பது தகுமா? இந்தச் சபையில் தருமாதருமமும் நியாயமும் அநியாயமும் ஏற்படாமற் போனல் வேறெங்கே ஏற்படும்? சபை யென்பதன் இலக்கணத்தைக் கேளுங்கள். அறிவிலே பெரியவர்கள் எந்தச் சபையிலில்லையோ அது ஒருபோதும் சபையேயல்ல. எந்தப்பெரியவர்கள் தருமத்தை யெடுத்துச் சொல்லவில்லையோ அந்தப்பெரியவர்கள் அறிஞராகார்கள். எதிலே சத்தியமில்லையோ அது தருமமாகாது" —என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே கொடியவனுகிய துச்சாதனன் "சை! வாயை மூடு" என்ருன். இதைக் கேட்டதும் பீமசேனன் தன் அண்ணனை அழைத்து, "நீர் சகலமும் தெரிந்தவராயிருந்தும் எந்த அறிவிலியும் செய்ய அஞ்சும் செய்கையைச் செய்தீர்! கொண்ட மனைவியைப் பந்தயம் வைத்து ஆடுவது எங்கே அடுக்கும்? திரௌபதி ஒரு மகாராஜாவின் பெண்; அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களும் நிகரற்ற பராக்ரமசாலிகளுமாகிய பாண்டவர்களின் மனைவி. இப்படியிருந்தும் அவள், ஈன மதிபடைத்த பெரும் பாவிகளிடம் அகப்பட்டு இவ்வாறு இடர்ப்படுவதெனில் இதனை எவ்வாறு என்போன்ற வீரனெருவன் கண்டு மனம் பொறுத்திருப்பான்? என்ன சொல்வேன்! என்னைப் பராதீனனுக்கி என்னைக்கெடுத்தீர்! எனக்கு என்ன பலமிருந்தும் என்னபயன்?" என்ருன். சகாதே

வன்: "அண்ணு, பதருதே! சினங்கொள்ளாதே! நீ சினங்கொண்டு அண்ணுவைக் கடிந்துகொள்வது பகைவருக்குக் குதூகலம். அண்ணு தருமத்தையும் சத்தியத்தையும் பெரிதா யெண்ணினுர். இஃது இழிவு தராது; பெரிய பெருமையைத்தரும். இச்சமயம் நாமும் நமதண்ணுவை அநுசரித் திருப்பதே முறை யல்லாமல் சினங்கொள்வதாகாது" என்று சமாதானஞ் சொல்லப் பீமன் பெருமூச்சுடன் சபையை ஒரு முறை விழித்துப் பார்த்துவிட்டடங்கினுன்.

இப்படி யிருக்கையில், திருதராஷ்டிரனுடைய மைந்தரில் விகர்ணன் என்பவன் முன்வந்து சபையை நோக்கி, "பெரியோர்களே வந்தனம்! நீங்களேன் இச்சபையில் ஒரு மாதரசிகேட்ட வினுவிற்கு விடை கூறவில்லை. உங்கட்கேனிந்தத் தாக்ஷண்யம்! போகட்டும் இதோ நான் கேட்கிறேன்; இப்போதாவது உங்களுடனிருக்கும் அச்சம், தாக்ஷண்யம், அபிமானம், கோபம்—முதலியவற்றை விட்டு உங்கள் கருத்தை வெளியிடுங்கள்" என்று கத்தினுன். சபையிலிருந்து ஒரு மறுமொழியும் பிறக்கவில்லை. உடனே விகர்ணன் அடக்க முடியாத சினமடைந்து தன் இரு கைகளையும் இடியோசையும் அஞ்சுமாறு அறைந்துகொண்டு, "சிறுவனுகிய நான் தரும நியாயங் கேட்டேன். நீங்கள் வாய்திறக்காம லிருக்கிறீர்கள்! உங்களுக்கு நான் கூறுகிறேன்.—கேட்பீர்களாக!—

மதுவருந்துகிறவனுக்கும் சூதாடுகிறவனுக்கும் தருமமிது அதருமமிது என்பது எப்படி விளங்கும்? இவ்விரண்டில் எப்போதும் வஞ்சகமாகச் சூதாடுவதில் விருப்பமுடையவன் சகுனி. அவனுக்கு எவ்வாறு அற

நெறிபுலப்படும்? அவன், பாண்டவர்களை வலியச் சூதிற் கழைத்தான்; அவர்கள் செல்வங்களை யெல்லாம் கொள்ளைக்காரர்களைப்போல் கொள்ளை கொண்டான்; இம் மட்டோடு நில்லாமல் பெண்பாவத்தையுந் தேடிக் கொள்கிறான். இவன் மக்கள் வகுப்பினிற் சேர்த்துக் கருதத் தக்கவனாவனோ? இருக்கட்டும் இந்தத் தீய செய்கைக்கு இடங்கொடுத்த இந்தச் சபையைப்பற்றி நான் என்ன பேசுவது?—அந்தோ! எந்தக் காலத்தில் இப்படிப்பட்ட கொடுமை நடந்திருக்கிறது!" என்று வெகு கடுகடுப்போடு கூறினான். பெரியவர்க ளெல்லோரும் விகர்ணனைப் புகழ்ந்தார்கள்; சகுனியை இகழ்ந்தார்கள். அப்பொழுது கர்ணன் எழுந்து "அடே விகர்ணா! சிறுபையலாகிய உனக்கு இந்த விசாரணையேன்? சபையிற் பெரியோர்களில்லையா நியாயங் கூற? நீ உன் உடன்பிறந்தவர்கட்கே விரோதமாய் நடக்கின்றாயே? என்ன அறிவிது? தருமபுத்திரர் சூதாடினார். சகுனி முறைப்படி ஜயித்தார். இதிலென்ன தவறு? நீயேன் உளறுகிறாய்? திரௌபதியின் விஷயமாய் அவர்கள் செய்வதும் நியாயமேயாம். உனக்கு ஒன்றுந் தெரியாது. போய் உன் ஆசனத்திரு" என்று கூறி "துச்சாதனா! விகர்ணன் சிறுவன்; அவன் கண்டதைக் கூறுவான். அவன் என்றைக்கு மிப்படித்தான். நீயுன் வேலையைச் செய்" என்றான்.

அப்பால் துச்சாதனன் பாண்டவர்களின் ஆடையைக் களைந்து வைக்கும்படி சொன்னான். அவர்கள் அக்கணமே களைந்தெறிந்து கோவணத் தோடிருந்தனர். திரௌபதி என்ன செய்வாள் பாவம்! அவளையும் ஆடையைக் களைந்துபோடும்படி நிர்ப்பந்தித்தான்.

அவள், "ஆ! என்ன அநியாயம்! அந்தோ! தெய்வமே" என்று கூறியபடியே கூசியொருபுறம் போய் நின்ருள். துச்சாதனன், கடுஞ்சினங்கொண்டு "வெள்ளாட்டிக்கு வெட்கமென்ன வந்தது?" என்று கூறிக்கொண்டே அவள் துகிலை உரியத் தொடங்கினுன். அப்பொழுது திரௌபதை, தன் ஆடையை இறுகப் பிடித்துக்கொண்டு பெருந்துயரத்தோடு சபையைப் பார்த்து, "எத்தகைய ஆபத்து நேரிடினும் பாமகருணாநிதியும் பக்தவத்ஸலனுமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானை நினைத்தால் அந்த ஆபத்து ஆதவன்முன் பனிபோல் விலகுமெனப் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்த உபதேசம் இப்போதென் நினைவுக்கு வருகிறது; ஆகையினுல் இப்பொழுது என் கணவன்மார்களையும் மற்றும் என் உறவினரையும் இங்குள்ள பெரியோரையும் மறந்து அவர்களாலாவதொன்றுமில்லை யென்று துறந்து, எங்கும் நிறைந்தவனும் எல்லாம் வல்லவனுமாகிய அந்த ஜகத்பதியைச் சரணமடைந்து துணை புரியுமாறு வேண்டுகின்றேன்" என்று உரக்கக் கூறி "ஸ்ரீ கிருஷ்ணு! வாசுதேவா! நாராயணு! கேசவா! முகுந்தா! அச்சுதா!" என்றலறிக் கதறினுள். இச்சமயம் துச்சாதனன் அவள் பிடித்திருந்த, ஆடையைப் பிடித்திழுத்தான். சபை கலங்கி நின்றது! பாண்டவர்கள் மரமாய் விட்டார்கள். துரியோதனன் குதூகலங் கொண்டிருக்கிருனுதலால் அவனும் தன்னை மறந்திருக்கிருன். ஆகையினுல் அவனுக்கு நியாயம் அநியாயம் புலப்படவில்லை. திரௌபதி கூறுவதும் அழுவதும் பகவானுக்கே கேட்டபடியால், அடியார்க்கு இரங்கும் அமலமூர்த்தியாகிய கிருஷ்ணபகவான், அவ

ளிடங் கருணைகொண்டு அவளிடையிலிருந்த ஆடையை வளரும்படி செய்தார். அது திரௌபதிக்கு அந்த ஜகதீசனுடைய கருணையினால் தெரிந்தது. தெரியவே தன் கையை மெதுவாய்த் தளர்த்திவிட, துச்சாதனன் தான் வலித்திழுத்து விட்டதாகக் கருதி வேகமாய் உரிந்தான். அவன் உரிய-உரிய ஆடை வளர்ந்து வந்தது. இதைக் கண்ட எல்லோரும் வியப்படைந்தனர். சிறிது நேரத்திற்குள் துச்சாதனன் அநேக ஆடைகளை உரிந்து குவித்து விட்டான். அவன் எவ்வளவு முயன்றும் அவள் இடையில் புதுப்புது ஆடை விதவிதமான நிறமுடையதாய் வளர்ந்துகொண்டே யிருந்தது. என்ன செய்வான் துச்சாதனன்! பெரு வியப்புடனும் ஆத்திரத்தோடும் இடைவிடாமல் துகிலை உரிந்து - உரிந்து மலைமலையாய்க் குவித்துக்கொண்டே வந்து வெகு நேரத்திற்கப்பால் கை ஓய்ந்துபோகவே மூர்ச்சித்து வெட்டுண்ட பெரிய மரம்போல் கீழே விழுந்துவிட்டான்.

இதைக் கண்டதும் பெரியோர்களெல்லோரும் பெரு வியப்பும் மகிழ்ச்சியு மடைந்து துரியோதனனை இகழ்ந்து திரௌபதியின் பக்தியையும் கற்பையும் புகழ்ந்து பேசினார்கள். இந்தப் பெண்பாவம் கொடிய பாவிகளாகிய துரியோதனாதியரைச் சும்மாவிடாதெனவும் கூறினார்கள்; "திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்பதுங் கண்டோம்" என்றும் "தெய்வ பலமே பலம்" என்றும் ஆரவாரித்தனர்.

இந்தப் பெரிய ஆரவாரமடங்கியவுடன் பீமசேனன் சபையை நோக்கிப் "பெரியோர்களே! இதுகாறும் ஒருவரும் செய்யாததும் சொல்லாததுமாகிய ஒரு சபதஞ் செய்யப் போகிறேன். இந்தப்

பாவி துச்சாதனன், சிறிதும் அஞ்சாமலும் நாண மில்லாமலும் இந்தப் பெரிய சபையில் ஒரு மாதை அஞ் சாமல் இழுத்துவந்து பலவாறாக உபத்திரவித்தானல் லவா? இந்தக் கொடியவனுடைய மார்பை என் கதை யினால் பிளந்து, அதிலிருந்து பெருகும் இரத்தத்தைக் குடிப்பேன். இதனைத் தவறாமல் ஸத்தியமாய் நிறை வேற்றுவேன். இவ்வாறு நான் செய்யாதொழியின், இதுகாறும் இந்த வம்சத்திலுதித்த புண்யாத்மாக்கள் அடைந்த நற்கதியை யடையாமல் நரகத்தையே அடை யக்கடவேன்'' என்று சூளுறைந்தான்.

இவ்வாறு சூளுரை கூறியதைக் கேட்டுச் சபை யோர்கள், ''நன்றாய்ச் சொன்னான் பீமசேனன்! வீர னல்லவா?'' என்று புகழ்ந்து மகிழ்ந்தார்கள். இதற்குள் துச்சாதனன் மூர்ச்சை தெளிந்தெழுந்தான். கர்ணன் அவனை நோக்கி, ''இனிச் சிறிதுந் தாமதியாமல் நம தடிமையாகிய திரௌபதியை அரண்மனைக் கழைத் துக் கொண்டு போ'' என்றான். அது கேட்ட துச்சா தனன், மீண்டும் அவளைப் பிடித்திழுக்கப் போனான். திரௌபதி விலகி நின்று சபையோரை யழைத்து, ''என்னைச் சுயம்வர மண்டபத்திற் பார்த்திருப்பீர்களே யல்லாமல் மற்றக்காலத்தில் சூரியனும் வாயுவுங்கூட என் னைக் கண்டிருக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட நான் இவ் வாறு அலங்கோலப் படுத்தப்படுவதும் ஒரு காலகதி தான்! ஆயினும் அந்தப்புரத்து மாதை அம்பலத்துக் கிழுத்த அரசர்பால் அறமென்பது எவ்வாறிருக்கும்? அந்தோ! தேர்ப்பாகனுடைய மகனாகிய கர்ணன் அடிக் கடி என்னைத் தாசியென்று இகழ்ந்து பேசுகின்றான்! இவனுடைய காலகதியை என்னென்பது?'' என, பீஷ்

மர், "பெண்ணரசே, கவலைப்படாதே! உன்னை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாது. குலைக்கிறவர்கள் குலைக்கட்டும். உன் பழி தேடிக்கொள்ளுகிறவர்களெல்லோரும் நாசமடைவார்கள்" என்றார். துரியோதனன், திரௌபதியைப் பார்த்து, "நீ தாசியோ அல்லவோ என்பதுபற்றி உன் கணவன்மார்களையே கேள். இவ் விஷயமாய்ச் சபையார் யாது கூறுவார்கள்? அவர்கள் இதனை விரித்துரைப்பார்களாயின் அஃது உன் கணவன்மார்கட்கே தீமையாய் முடியும். ஆகையினால் அஞ்சுகின்றனர்; மௌனமா யிருக்கின்றனர்" என்றான்.

இதைக் கேட்ட பீமசேனன், "அண்ணா தாம் ஜயிக்கப்பட்டதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். எங்கள் உயிருக்கும் உடலிற்கும் தலைவராகிய அவர் ஜயிக்கப்பட்ட போதே நாங்களும் ஜயிக்கப்பட்டோம். ஆகையினாலே தான், திரௌபதியின் கூந்தலைப் பிடித்திழுத்த பாவி இன்னும் உயிரோடிருக்கிறான். இன்றேல்"—என்று கூறி உதட்டை மடித்துக் கண்கள் சிவக்க விழித்து அங்கே அட்டகாசத்துடனிருந்த கர்ணனையும் எரித்து விடுபவனைப்போல் நோக்கினான். சபையோர் அவன் சினந்தணியச் சமாதானஞ் சொன்னார்கள். துரியோதனன், தான் செய்த கொடுமையும் பேசிய பேச்சும் போதாவென நினைத்துத் தன் தொடையைக் காட்டி அதன் மேல் வந்து திரௌபதியை உட்காரும்படி அழைத்தான். உடனே பீமசேனன், வெகுண்டு, "இந்தப் பாவி காட்டிய தொடையைப் போர் புரியுங் காலத்தில் என் கதையால் மரத்தைப் பிளப்பதுபோல் பிளந்து எனது துயர் தீர்வேன். இன்றேல் நான் நரகத்தில் விழக்கடவேன்" என்று சூளுரை கூறி வீர கர்ச்சனை செய்தான்.

சபை நடுங்கியது! பெரியோர்கள் "இது தருமான பேச்சு!" என்று கூறினர். விதுரர், "அந்தோ! திரௌபதியை வென்றதாக நினைப்பது எப்படிப் பொருந்தும்? இது கனவிற் கண்ட வொன்றைத் தனதென்றெண்ணி மகிழும் ஒரு பேதையின் செய்கையாயிருக்கிறது. என்ன சொல்வேன். தருமபுத்திரர் தம்மைத் தோற்றபின் திரௌபதியை வைத்தாடுவது எப்படி? உரிமையேது? ஆதலின் திரௌபதியை வென்றதாகக் கூறுவது உண்மையாக மாட்டாது" என்றார்.

யார் எந்த நியாயமெடுத்துக் கூறியும் துரியோதனன் அதனை ஒப்புக்கொள்ளவில்லை; துச்சாதனனை ஏவ அவன் மீண்டும் திரௌபதியை இழுக்கப் போனான். அவள் "அந்தோ! என்ன செய்வேன்" என்று கூறி அழுதாள். விதுரர், "நான் என்ன செய்வேன். ஒருவரும் வாய் திறக்கவில்லையே! இருந்தாலும், உனக்குத் தீங்கு செய்தவர்களைக் கடவுள் தண்டிப்பார்?" என்று கூறி மறுபடியும் பாவி துரியோதனனுக்கு நல்லது சொல்லிப்பார்த்தார்; குருடன் திருதராஷ்டிரனையும் அழைத்து, "இந்தக் கொடுமைக்கு இடந்தராதேயும். குலநாச முண்டாகும்" என்றார். அந்தக் குருடனும் வாய்பேசவில்லை. இச்சமயத்தில் துரியோதனன் மறுபடியும் தன் தொடையைக் காட்டி அதில் வந்து உட்காரும்படி திரௌபதியை அழைத்தான். இதைக் கண்டதும் பீமசேனன், பூமியில் தன் கைக் கதையால் சபையார் நடுங்கும்படி ஒரு குத்துக் குத்திச் சினங்கொண்டெழுந்து, "இவன் தொடையை இந்தக் கதையால் பிளக்கிறேன். இது ஸத்தியம்! தேர்ப்பாகன் மகனை வீரனை பார்த்திபன் நாசஞ்செய்

வான்! வஞ்சகனுகிய சகுனியின் நெஞ்சைச் சகாதேவன் பிளப்பான்! துச்சாதனனுடைய மார்பை நானே பிளந்து இரத்தங்குடிப்பேன்" என்ருர்ப்பரித்தான். அப்பொழுது நகுலன் எழுந்து தன் அண்ணன்மார்களை நோக்கி, "நீங்களெல்லோரும் அலுவல் வைத்துக் கொண்டீர்கள்; எனக்கென்ன தெரியுமா? நான் வஞ்சகனுகிய சகுனியின் பிள்ளையையும், திரௌபதியை இகழ்ந்த துரியோதனனுடைய தம்பிகளையும் கொல்வேன்" என்று கர்ஜித்தான். திரௌபதியுங் கோபங்கொண்டு "எல்லோரும் நாசமடையட்டும்" என்று கையைச் சொடக்கினுள். ஆகாயத்தினின்று புஷ்ப வருஷம் வருஷித்தது. எல்லோரும் திரௌபதியை வாழ்த்தினுர்கள்.

அர்ச்சுனன் சினமடங்காமல் பெருமூச் செறிந்து தன் அண்ணுவாகிய யுதிஷ்டிரரை நோக்கினுன். யுதிஷ்டிரர் "அர்ச்சுன! இந்தக் கோபமேன்? இது நமது புகழுக்குத் தீங்குண்டாக்கும். இது சிறுவருடைய செய்கையாகும். நான் நினைத்தால் இந்தப் பாவிகள் பஞ்சு பஞ்சாய்ப் பறந்து போய்விடமாட்டார்களா? காலம் வரும்; அதற்காகப் பொறுத்திருக்கின்றேன். நீயும் பொறுத்திரு" என அர்ச்சுனன், கோபமடங்கிய ஸர்ப்பம் போலானுன்; அதுகண்டு பெரியவர்க ளெல்லோரும் சந்தோஷ மடைந்தார்கள்.

இவ்வாருகவே, இவையனைத்தையுங் கேட்ட காந்தாரி தன் நாயகனிடம் ஓடிவந்து, "இந்தக் கொடுமையினுல் நாசமே நேரிடும். இதைத் தடுக்காமலிருந்த பாவம் உம்மைச் சூழாதா?" என்று கேட்டாள். திருதராஷ்டிரன் உடனே துரியோதனனை யழைத்து "நீங்

கள் செய்த கொடுமை போதும்! இனியாகிலும் சும்மா விருங்கள்" என்றுகூறித் திரௌபதியை அழைத்து,- "நீ மேலான குணமுடையவள். உன் புகழ் பெரிது. உனக்கு வேண்டும் வரத்தைக்கேள்" என்று சொல்லத் திரௌபதி, "என் நாயகன்மார்கள் அடிமைத் தன்மையினின்றும் நீங்கிச் சுதந்தரம் பெறுதல் வேண்டும்" என்றாள். திருதராஷ்டிரன் "அவ்வாறே கொடுத்தேன்" என்றான். உடனே யுதிஷ்டிரர் திருதராஷ்டிரன் முன்வந்து பணிந்து தம்கைகட்டி நின்று, "உமது கட்டளைப்படி அடியேன் இவ்விடம் வந்து செய்யவேண்டியவற்றைச் செய்தேன். இன்னும் ஏதாவதிருந்து கட்டளையிட்டால் அடியேன் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். திருதராஷ்டிரன் "நான் உன்னுடைய குணத்திற்கு மகிழ்ந்தேன். உனக்குச் சகல நன்மைகளு முண்டாகும். நீ இனி உன் மனைவியுடனும் தம்பியுடனும் உன்பட்டணத்திற்குப் போய்ச் சுகமாயிரு. துரியோதனன் குணந்தான் உனக்குத் தெரியுமே! அதைப் பொருட் படுத்தாதே" என்று சமாதானங் கூறினான். யுதிஷ்டிரர் "நல்லது அவ்வாறே நடப்பேன்" என்று கூறி, அவனை வணங்கித் தமது பரிவாரங்களோடு இந்திரப் பிரஸ்தத்திற்குப் பிரயாணமானார்.

அத்தியாயம்—7

தருமபுத்திரர் மறுபடி சூதாடி வனமேகுவது

பாண்டவர் இவ்வாறு சென்றதும் துச்சாதனன் தன் அண்ணன் துரியோதனனைப் பார்த்து, "தந்தை பெருந்தவறு செய்துவிட்டார்; பாண்டவர்களை இப்

படி அனுப்பலாமா? அவர்கள் நமக்கு ஜன்மப் பகைவர்களாயிற்றே? பகைவர்கட்கு இடங்கொடுத்தால் அது நோய்க்கிடங் கொடுப்பது போலல்லவா ஆகும்? இதனை நீரும் கவனிக்கவில்லையே" என்றான். துரியோதனன் உடனே இதைப்பற்றிச் சகுனி கர்ணன் முதலியவர்களிடத்திலே ஆலோசித்துத் தன் தந்தையினிடம் போய், "நாம் பாண்டவர்களை விடுவித்தது பெரிய தவறு. அஃது இப்பொழுது தான் தெரிந்தது. பகைவர்க்கு இடங் கொடுப்பது பாம்பிற்குப் பால்வார்ப்பது போலல்லவா? இனி நாங்கள் அழிந்தோம். இதில் சிறிதுமையமில்லை. அவர்களில் அர்ச்சுனன் ஒருவன் போதும் எங்களை யொழிக்க. அவன் சும்மாவிருக்கமாட்டான். அவன் வல்லமையை நினைத்தால் மனமஞ்சுகிறது. நம்மவர்களாகிய பீஷ்மர் முதலிய எல்லோரும் சேர்ந்து எதிர்த்தாலும் அவனை வெல்வதரிது. அவன் அரிய பெரிய செய்கைகளை யெல்லாம் செய்திருக்கிறான். அவன் பாண்டவர்களாகிய உடலுக்கு உயிர். அவனுக்குக் கொஞ்சம் இடமகப்பட்டாற் போதும்! மடத்தைப் பிடுங்குவான்! இப்பொழுது அவன் அரசுக்குரியவனாய் விட்டபடியினால் இனி ஒரு கணமும் சும்மாவிருக்கவே மாட்டான். ஆதலின் அவர்களை ஊரைவிட்டே ஓட்டிவிட வேண்டும். இதற்காக நான் கர்ணன், சகுனி இவர்களிடம் ஆலோசித்து ஒரு தீர்மானஞ் செய்திருக்கிறேன். அதற்குத் தாங்கள் விடைதர வேண்டும். விடை தரவில்லையாயின் நாங்கள் அழிந்தோம்" என்றான். திருதராஷ்டிரனுடைய மனம் இப்பொழுது பேதித்தது. மகனிடம் இரக்கங்கொண்டு, "அப்பா மகனே, அந்தத் தீர்மானம்

யாது?" எனத் துரியோதனன் "பாண்டவர்களை மறுபடியும் சூதாட வரவழைத்து இப்பொழுது செய்தது போல் வஞ்சனையால் அவர்களுடைய அரசுமுதலிய யாவற்றையுங் கவர்ந்துகொண்டு அவர்களை அடிமையாக்கிப் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒரு வருஷம் அஞ்ஞாத வாசமும் செய்து மீண்டு வரும்படி துரத்திவிட வேண்டும். இவ்வாறு செய்தாலன்றி நமது மனோரதம் நிறைவேற வழியில்லை" என்றான்.

இப்படிக் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த துரியோதனனுடைய அன்னை காந்தாரி என்கிற புத்திசாலி தன் நாயகனிடம் வந்து, "துரியோதனனுடைய இந்தத் தீர்மானத்தினால் பழிப்பும் பாவமுமே பயனாய் முடியும். துரியோதனன் பிறந்த அக்காலத்திலேயே பல தீய சகுனங்களுண்டாயின. அவற்றைக்கண்ட பெரியவர்கள் அதனால் குலத்திற்கு நாசமுண்டாகு மென்று கூறினார்கள். அதுவீண் போகாது போலிருக்கிறது. அவன் பழிப்பிற்கேதுவான சூதாடிப் பலதீமைகளைப் பாண்டவர்களுக்கு உண்டாக்கி நமக்குத் தீராத பழியையும் பாவத்தையும் தந்தான். இதற்கும் நீர் இடந்தந்தால் உலகம் உம்மைப் பழிக்காமலும் வசைகூறாமலு மிருக்குமா? இந்த ஓர் அவமானம் ஏழேழு பிறவிக்கும் போதுமானதாயிருக்க மறுபடியும் சூதாட அவன் அழையென்றால் நீர் உடன்படுவதா? நீர் சகல தருமசாஸ்திரங்களையும் பெரியோர்களிடத்திற் கேட்டுப் பயின்றிருந்தும் இந்தக் கொடுமைக்கேன் இடந்தருகின்றீர்? உமக்கு இங்கே ஒருவருடைய தண்டனையும் ஏற்படாது. ஆயினும் யமதண்டனை கூடவா இல்லாமற் போகும்? அஃது இல்லாமற் போகாது. ஆத

வின் இந்த முயற்சி வேண்டாம். உமது மகனுக்கு நல்ல புத்திசொல்லித் தடுத்துவிடும்'' என்று கூறினாள். திருதராஷ்டிரன், "நானென்ன செய்வேன். குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பாய் வந்து பிறந்திருக்கும் இவனால் இன்னும் என்னென்ன அவமானங்களும் பழிபாவங்களும் வந்து சேரவேண்டுமோ அவை யாவும் வந்து சேரட்டும். என்னால் அவனைத் தடுக்க முடியாது'' என்று கூறிப் பாண்டவர்களை மறுபடியும் சூதிற் கழைத்துவர ஆளை அனுப்பினான்.

பாண்டவர்கள் அத்தினாபுரம் விட்டுப் புறப்பட்டு நெடுந்தூரம் போய் விட்டனர். அவர்களை வழியில் தூதன் மடக்கிக்கொண்டு திருதராஷ்டிரனுடைய கட்டளையைச் சொல்லி அழைத்தான். தருமபுத்திரர், "கால கதியினால் எது நடக்கவேண்டுமோ அது நடந்தே தீரும். ஆதலால் நான் தந்தையினுடைய இந்தக் கட்டளைப்படி நடக்கவே தீர்மானிக்கிறேன். திரும்புங்கள் தாமதியாமல்'' என்றார். பீமனும் அர்ச்சுனனும் பல நியாயங்கள் கூறித் தடுத்தார்கள். தருமபுத்திரர் கேட்காமல் பிடிவாதமாய்ப் புறப்பட்டு எல்லோருடனும் அத்தினாபுரம்வந்து சபையிலே பிரவேசித்துத் தந்தையாகிய குருடனைப் பணிந்து கைகட்டி நின்றார். இப்படி நிற்கும் தருமரைக் கண்டு எல்லோரும் துக்கப்பட்டார்கள்; துரியோதனனை இகழ்ந்தார்கள். திருதராஷ்டிரன் "வந்தாயா!'' என்று கூறிவிட்டுச் சும்மா விருந்து விட்டான். அப்போது சகுனி வந்து, சூதாட அழைத்தான். தருமபுத்திரர் அதற் கிணங்கிச் சூதாடத்தொடங்கினார். சகுனி "இம்முறை பந்தயம் என்ன தெரியுமா ?—தோற்றவர்கள் தங்களரசை விட்டுத் தவக்

கோலம் பூண்டு வனத்திற்கு ஏகி அங்கே பன்னிரண்டு வருஷகாலம் வசித்தல் வேண்டும். பின்னும் ஒரு வருஷகாலம் வரையில் இன்னவிடத்தில் இன்னபடி இருக்கிறார்களென்பது தெரியாமல் அஞ்ஞாதவாசம் செய்தல் வேண்டும். இதுதான் பந்தயம். உமக்குச் சம்மதமா?" என்று கேட்டான். தருமபுத்திரர் அதற்கொப்பினர். பீஷ்மர் துரோணர் முதலிய பெரியவர்கள் அப்பொழுது தருமபுத்திரரைத் தடுத்தார்கள். தருமபுத்திரர் "வந்தது வரட்டும்" என்று கூறிச் சூதாட இணங்கினர். சகுனி ஆடத்தொடங்கிக் கையிலே காயெடுத்துருட்டினன். வெற்றி அவன்பங்கே உண்டாயிற்று. அது கண்டு துரியோதனுதியர் கைகொட்டி நகைத்துச் சகுனி மாமாவைப் புகழ்ந்தார்கள். பாண்டவர்கள் முகவாட்ட மடைந்தனர். இக்கோலங் கண்டு பெரியவர்களெல்லோரும் வருந்தினர்கள்; 'என்னவோ கேடுகாலம் நேரவிருக்கிறது' என்றும் பேசிக் கொண்டார்கள். இப்படியிருக்கையில் பாண்டவர்கள் தங்கள் ஆடையாபரணங்களைக் களைந்துவிட்டுத் தவக்கோலம் பூண்டு வனத்திற்கேகச் சித்தமானர்கள். இச்சமயத்தில் கொடியவனுகிய துச்சாதனன் சில ஏவலாளர்களை யேவி, "இவர்களின் ஆடையைக் களைந்து மரவுரி கொடுங்கள்" என்று கட்டளையிட்டுப் பின் சபையோரைப்பார்த்து "பாண்டவர்கள் தங்களுடைய சகல சம்பத்துக்களையும் இழந்தார்கள். அண்ணு துரியோதன பூபதி ஏக சக்ராதிபதியானர்" என்று கூறித் திரௌபதியை நோக்கி "அடியே, நீயேன் வனத்திற்கிவர்களுடன் சென்று தொந்தரவடைகின்றாய்! இங்கேயே என் அண்ணுவுக்கு இனியவளாக இருந்து கொண்டிரு" என்றான்.

இதைக் கேட்டதும் பீமசேனன் துச்சாதனனை விழித்துப் பார்த்து "அடே மூடா! வஞ்சனையினால் வெல்வது ஒரு சாமர்த்தியமா? இதில் ஒரு வீரப் பேச்சா? ஏன் கத்துகிறாய் மண்டூகம்போல்? நாங்கள் தருமத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறோம். இஃது உங்கட்கு வெற்றிக் கேதுவாயிருக்கிறது. அடே பாவி! நானுன்னைக் கொல்லும்போது நீ சொன்ன கொடிய சொற்களை யெல்லாம் சொல்லிச் சொல்லிக் காட்டிக் கொல்லுகிறேன்" என, துச்சாதனன் "அடே மாமிசப் பிண்டமே, சும்மாவிரு" என்றான். பின் துரியோதனனும் பரிகசித்தான்.

இவற்றிற்கெல்லாம் ஒன்றும் பேசாமலிருந்து யுதிஷ்டிரர் தம்பிமார்களுடனும் திரௌபதியுடனும் தந்தையிடம் சென்று வணங்கி, "உமது இஷ்டப்படி வனஞ் செல்கின்றோம்" என்று கூறிப் பீஷ்மர் முதலிய பெரியோரிடமும் விடை கொண்டார். அவர்களெல்லோரும் ஒன்றும் பேசாமல் மனதில் கடவுளைத் தியானித்து ஆசிர்வாதஞ் செய்தனர். விதுரர் மாத்திரம் தருமபுத்திரரைப் பார்த்து, "நீர் தருமந் தவறாதவரான படியினால் உமது மனைவியோடும் உடன்பிறந்தவர்களோடும் வனத்திற்கேகுவது நியாயமே. உமது அன்னையாகிய குந்திதேவி வனத்திற்கு ஏன் வரவேண்டும்? அவள் பிறந்ததுமுதல் பெருஞ்செல்வ மநுபவித்தவளாகையால் அவள் என் மனையிலேயே சுகமாயிருக்கட்டும். உங்களுக்கு எங்கும் குறைவேற்படாது. நீர் தரும இரகசியங்களை உணர்ந்தவர். பகைவர்களை அழிக்கும் இரகசியத்தைப் பீமசேனன் அறிவான்; அர்ச்சுனன் போரின் நுட்பங்களெல்லாம் உணர்ந்தவன்;

நகுலன் பொருள்தேடும் உபாயந் தெரிந்தவன்; சகா தேவன் தத்துவ நிச்சய முணர்ந்தவன்; புரோகித ராகிய தௌமியர் எல்லா முணர்ந்தவர்; திரௌபதி மகா புத்திசாலி. இந்த வல்லமைகளெல்லாம் உங்கட்குத் துணைகளாய்க் கூடவருகின்றன. ஆகையினால் உங்களுக் கொரு குறைவும் வராது. அஞ்சாமற் போய் வாருங் கள்" என்று ஆசீர்வதித்தார்.

தருமபுத்திரர் இவ்வாறு பெரியோருடைய ஆசீர் வாதமாகிய பெரிய துணையைத் தேடிக்கொண்டு காட் டிற்குப் புறப்பட்டார்; பாண்டவர்கள் இராஜகோலங் களைக் களைந்துவிட்டுத் தவக்கோலம் பூண்டு செல்வ தைக் கண்ட நகரத்து ஜனங்களெல்லோரும் மிகுந்த பரிதாபமும் துக்கமுமடைந்து, "அந்தோ! அருள் பொறை, கல்வி, அறிவு, வல்லமை, ஸத்தியம் முதலிய உத்தம குணங்களுக்கு இருப்பிடமாக விளங்கும் இந்த மகாநுபாவர்களை வஞ்சித்துப் பலவகையிலும் துன்பப் படுத்திக் காட்டிற்கோட்டிய பாதகர்களும் அரசர்க ளாவார்களோ? கொடிய பாவிகள்! இவர்களிருந்து வரும் நாட்டில் நாமெப்படி யிருப்பது? வேரற்ற பிறகு மரத்தின் கிளைகளும் இலைகளும் மலர்களும் வாடாம லிருக்குமா? தருமபுத்திரர் வேர்; நாமெல்லோரும் கிளைகள். இதனையன்றிப், பாண்டவர் நீர் நிரம்பிய ஒரு மடுவுக்கு நிகராவார்கள்; நாம் அம்மடுவிலே வசிக்கும் மீன்கள். நீர் வற்றிய பின் மீன்கள் எவ்வாறு பிழைத் திருக்கும்? ஆதலால், நாமும் பாண்டவர்கள் செல்லு மிடத்திற்கே போவோம். நமக்கு வீடும் வேண்டாம்; வாசலும் வேண்டாம்; நிலமும் வேண்டாம்; நலமும் வேண்டாம். நாமிருங்கிருந்தால் நமக்கு நரகந்தான்

கிடைக்கும். நாம் போய் விடுவோம். இந்த நகரம் காடாகட்டும். பாண்டவர்கள் செல்லும் காடு நாடா கட்டும். இங்கு நாயும், நரியும், கழுகும் பேயும் வசிக்கட்டும்''—என்று பேசிக்கொண்டு பாண்டவர்களைப் பின்றொடரத் துணிந்தார்கள். ஒற்றைத் துணியோடு மகா பதிவிரதா சிரோமணியாகிய திரௌபதி செல்வதைக் கண்ட மாதர்கள் பரிதாபமும் துக்கமு மடைந்து துரியோதனாதியரைத் திட்டினார்கள். குந்திதேவி அழுது கொண்டே பின்றொடர்ந்து வந்து, கண்ணுங் கண்ணீரு மாய்த் திரௌபதியைப் பார்த்து, "அம்மணி; நீ சகல நீதிகளும் தருமங்களும் உணர்ந்தவள்; கற்புக்கரசி. எங்கிருந்தாலும் உனக்கு ஒரு குறைவும் வராது. உன் குணத்தினால் நீ புகுந்த குலம் பிறந்த குலம் இரண்டும் விளக்கமுற்றன. உன்னுடைய பொறுமையினால் உன்னை அவமானஞ் செய்த பாவிகள் தப்பினார்கள். இல்லா விட்டால் சாம்பராய்ப் போயிருக்க மாட்டார்களா? உன் பொறுமை வீண்போகுமா? பாவிகளுக்குக் கேடும் உங்களுக்கு நன்மையும் உண்டாகும்? துயரப் படாதே!''—என்று கூறி மறுபடியும், "அம்மா! சகாதேவனைக் கவனித்துக்கொள். அவன் பாலகன். அவனுக்கு நீதான் அன்னை'' என்று தெரிவித்து மருமகளைக் கட்டிக் கொண்டு கண்ணீருகுத்தாள். திரௌபதியும் துக்கத்துடன் தன் மாமியாரை வலம் வந்து பணிந்து விடைகொண்டாள். பிறகு, குந்தி தன் புதல்வரை நோக்கிக் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக நின்று, "ஆ—என்ன சொல்வேன்! என் மக்கள் இவ்வாறு தாழவும், தருமத்தைப் பகைக்குந் தீயர்கள் மேன்மையடையவும் காலம் வந்ததே! ஓ இஃது இவர்

களுடைய விதியுமல்ல; தெய்வத்தின் கொடுமையுமல்ல. நான் செய்த தீவினைதான். என் தீவினையில்லையானால் நானும் என் புருஷனைப் போலவும் என்னுடைய சக களத்தி மாத்திரை போலவும் அந்தக் காலத்திலேயே இந்த உலகத்தைவிட்டுப் போயிருக்க மாட்டேனா?"— என்று இன்னும் இவைபோல்வன பலகூறிக் கதறி மூர்ச்சித்தாள். மூர்ச்சித்த அன்னையைப் பாண்டவர்கள் தூக்கி யெடுத்து உட்கார வைத்து மூர்ச்சை தெளிவித்துப் பலவாறாய்ச் சமாதானஞ் சொன்னார்கள். அப்பொழுது விதுரர் அங்குவந்து குந்திதேவியைச் சமாதானஞ் செய்து மெதுவாய் வீட்டிற்கனுப்பினார்.

இவ்வாறாகவே, ஆடவர்களும், மாதர்களுமாக அநேகம்பேர் பாண்டவர்களைப் பின்றொடர்ந்தார்கள். அவர்களைக் கண்ட தருமபுத்திரர், எல்லோரையும் தத்தம் வீட்டிற்குத் திரும்பிப் போகும்படி வேண்டிக் கொண்டார். அவர்கள் கேட்காமல் பின்றொடர்ந்து பாண்டவர்களுடைய குணவிசேஷங்களைப் புகழ்ந்து கொண்டும் துரியோதனாதியர்களை இகழ்ந்து கொண்டும் சென்றார்கள். தருமபுத்திரர் அவர்களை நோக்கி, "நீங்களெல்லோரும் உங்கள் வீட்டிற்குத் திரும்புங்கள். மனிதர்களாகப் பிறந்தவர்களுக்கு உலகத்தில் அறமே அருந்துணை. அதனைப் பரிபாலிப்பதே அறிவுடையவரின் கடமை. தந்தையிட்ட கட்டளைப்படி நாங்கள் நடக்கிறோம். இதிலேன் துக்கம்? போங்கள். நாங்கள் விரைவில் வந்து சேருகிறோம்" என்று சமாதானஞ் சொல்லியனுப்பினர்.

இவற்றையெல்லாங் கண்டு துரியோதனாதியர் பரிகசித்துக்கொண்டு இறுமாப்புடனிருந்தனர். பெரி

யோர்கள் ஒன்றும் வாய்திறந்து பேசமாட்டாமல் மௌனமாயிருந்தனர். தாக்ஷண்யம் அவர்களைத் தடுத்தது. ஆனால் துக்கம் ஒரு பக்கம் பாதித்தது. இவர்கள் இவ்வாறிருந்த போதிலும் பிராமணர்கள் துரியோதனனுடைய கொடுமையையும் வஞ்சனையையும் இகழ்ந்து பேசி, "இந்தப் பாவிகளுக்கு நரகங்கிடைப்பது திண்ணம். கொடிய துஷ்டர்களாகிய தம் மக்களுக்கு இடங்கொடுத்த திருதராஷ்டிர பூபதி வெளிக்குக் குருடராயிருப்பதுபோல் உள்ளத்தினுள்ளும் குருடரானபடியினாலே இவர்க்கு விரைவில் பெருந்துயர முண்டாகும். இந்தக் கொடுமைகளைக் கண்ணாலே பார்த்துக் கொண்டிருந்த பெரியவர்களும் பாபத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டியவர்களே" என்று கூறி வெறுத்தனர்; பாண்டவர்களோடு காட்டுக்கே செல்லத் தீர்மானித்தனர்.

இவ்வாறு எல்லோரும் பெருந்துயரத்திலாழ நகரத்தை விட்டுப் புறப்பட்ட பாண்டவர்கள் நகரங் கடந்து சென்றபின் திருதராஷ்டிரன் விதுரரைத் தனித்தழைத்து பாண்டவர்கள் வனமேகிய வரலாறு கேட்டான். விதுரர், "துஷ்டர்களாகிய உமது மக்களைத் தருமமார்க்கத்திலே செல்லும் தமது கண்களால் பார்த்தால் வீணே எரிந்து போவார்களென்று கருதித் தருமபுத்திரர் கிருஷ்ணஜினத்தினால் தமது முகத்தை மூடிக்கொண்டு சென்றார். தருமபுத்திரருக்குப் பகைவரானவர்களை விரைவில் அழிக்கவேண்டுமென்கிற கருத்தினால் பீமன் வீரமும் அழகும் பொருந்திய கைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு போனான். இந்த மணல் எப்படி நாலாபக்கங்களிலும் பரவிச் சிதறுகிறதோ அப்படியே பகைவருடைய சேனையிலே பாணங்களைப் பிர

யோகித்து இறைப்பேன் என்னுங் கருத்துடனே அர்ச்சுனன் தன் கால்களால் மணலை யிறைத்துக் கொண்டே போனான். தன்னுடலைப் பிறர் கண்டு மயங்காவண்ணம் நகுலன் உடம்பெல்லாம் புழுதி படியப் போனான். தன் முகத்திலே கொதித்தெழும் கோபாக்கினியானது வெளியில் பரவாதிருக்கட்டு மென்கிற எண்ணங்கொண்டு சகாதேவன் முகத்தைத் தன் கையால் மூடிக்கொண்டே போனான். நானெவ்வாறு போகிறேனோ அவ்வாறே இதற்குப் பதினான்காவது வருஷம் துரியோதனாதியரின் மனைவிகளும் போரில் தலைவிரி கோலமாய் நின்று கதறுவார்கள் என்ற கருத்துடன் திரௌபதி பின் தலைமயிரை விரித்துக்கொண்டு ஒற்றையாடையோடு சென்றாள். பதினான்காவது வருஷத்தில் போரில் மடிந்தவர்கட்கு மிகுந்தவர்கள் கிரியை செய்வார்கள் என்று கருதிப் புரோகிதராகிய தௌமியர் கையில் தர்ப்பைகளைப் பிடித்துக்கொண்டு சென்றார். இதனையன்றி அந்தப் புரோகிதர், 'பதினான்காவது வருஷத்தில் கண்ணில்லாத மகாராஜா சந்ததியற்றுப் போவார்' என்றுங் கூறினார்'' என்று சொல்ல, திருதராஷ்டிரன் மிகவும் பயந்து விதுரரை நோக்கி, "விதுரரே! அப்பொழுது ஜனங்கள் என்ன சொன்னார்கள்?" என்று வினவினான். விதுரர், "ஜனங்கள் உமது மக்களை இகழ்ந்தார்கள்; பாண்டவர்களைப் புகழ்ந்தார்கள்; இந்த நகரத்தை விட்டே போய்விட வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள். அன்றியும் நம் நாட்டில் அநேக அபசகுனங்களும் உண்டாயிருக்கின்றன. முன்னாளில் ஸ்ரீராமர் வனம் போகும்போது அயோத்தி எப்படி யிருந்ததோ அப்படியிருக்கிறது நகரம். நான்

என்ன சொல்லப்போகின்றேன். இனி உய்யும் வழியைக் காணேம்'' என்றார். இவ்வாறு இவர் கூறி வாயை மூடியதும் இங்கிருந்து வந்தாரென்று சொல்வதற்கில்லாதபடி நாரதர் அங்கு வந்து திருதராஷ்டிரனை யழைத்து, ''உனது துராலோசனையினுலும், உன் மக்களுடைய கொடுஞ் செயல்களினுலும் இன்றைக்குப் பதினுன்காவதாண்டில் உன் வமிசம் நாசமாய்ப் போய்விடுவது திண்ணம்'' என்று கூறி மறைந்தார்.

இவ்வாறு இவர் கூறியதைக் கேட்டதும் திருதராஷ்டிரனும் அவனைச் சார்ந்தவர்களும் அஞ்சி என்ன செய்வதென்று தெரியாமல் பெருந் துயரத்தில் மூழ்கினர்கள். அப்பொழுது துரியோதனன் துரோணரிடம் போய்ச் சரணமடைந்து, ''சுவாமி! நான் என் அரசை உம்மிடம் ஒப்புவித்தேன். இது பகைவர் கைவசமாகாவண்ணம் நீர் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். துரோணர், ''துரியோதன! பாண்டவர்களை ஒருவராலும் வெல்ல முடியாது. ஆதலால், அவர்களை நான் வெல்வதெப்படி? நீ என்னைச் சரணமாக அடைந்தபடியால் நான் உன்னைக் காக்கக் கடமைப் பட்டவன். ஆதலின் என்னுயிரிருக்கிற வரையில் உன்னைப் பகைவர் வசம் அகப்பட விடாமல் காப்பாற்றுவேன். என் பகைவனுகிய துருபத மகாராஜன் தவத்தினுல் என்னைக் கொல்லத் திஷ்டத்துயும்னன் என்றொரு பிள்ளையைப் பெற்றிருக்கிறுன். அவன் பாண்டவர்களின் பட்சமாயிருக்கிறுன். அவனுல் எனக்கு மரணமுண்டாவது திண்ணம். அது பாண்டவர்கள் உன்னேடு போரிடுங்காலத்தில் நேரிடும். பாண்டவர்கள் பதின்மூன்று வருஷத்தையும் ஒருகணப் பொழு

தாய்க் கழித்துவிட்டு உன்னிடம் வந்து தங்கள் அரசுரிமையைக் கேட்பார்கள். நீ கெடுமதியினால் அரசுகொடுக்க மறுப்பாய். அப்பொழுது போருண்டாகும். அதில் நீங்கள் அழியப் போகிறீர்கள்; தப்பமாட்டீர்கள். ஆகையினால், நீங்கள் இதுவரையில் செய்துள்ள கொடிய பாவங்களெல்லாம் தீரும்படியாய் நல்ல வழியிலே நடந்து கொள்ளுங்கள்'' என்றார்.

அதைக் கேட்டதும் கௌரவர் யாவரும் அஞ்சினர். திருதராஷ்டிரன், ''துரியோதனா! பாண்டவர் கோபம் பொல்லாது. ஆகையினால் நீ இப்போதே விதுரரை அனுப்பி, அவர்களை வனம் போகவிடாமல் அழைத்து வந்து அவர்களோடு சமாதானஞ் செய்துகொள்'' என்று கூறினான். துரியோதனன் கேட்டானில்லை. அப்பொழுது அங்கே சஞ்சயன் என்பவன் வந்து திருதராஷ்டிரனை நோக்கி, அவன் செய்த இழிவான செய்கைகளை மனத்திற்படும்படி நன்றாயெடுத்துக் கூறி இகழ்ந்தான். திருதராஷ்டிரன், ''சஞ்சயா! தெய்வம் எவனைக் கெடுக்க நினைக்கிறதோ அவன் விவேகத்தை முன்னே அது கெடுத்து விடுகிறது. யாரை விருத்திக்குக் கொண்டுவர நினைக்கிறதோ அவனைக் குணசாலியாக்குகிறது'' என்று கூறி வருந்தி, ''சஞ்சயா, துஷ்டப் பிள்ளைகள் என் பேச்சைக் கேட்கவில்லை. அப்பொழுது சூது வேண்டாமென்று சொல்லித் தடுத்தேன். திரௌபதியைச் சபைக்கிழுக்கும்போது காந்தாரி முதலியவர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றும் பயன்படவில்லையே! நானென்ன செய்வேன். அந்தோ! இந்திரனுக் கொப்பான காண்டீவத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்த அர்ச்சுனன் வரு

வான்! காலதண்டம் போன்ற கதையை வீசிக்கொண்டு பீமசேனன் வருவான்! இவர்களை யார் இங்கே தடுக்க வல்லவர்கள்?''—என்று பலவாறாகக் கூறித் துக்கத்தி லாழ்ந்தான்.

அத்தியாயம்—8

கிம்மீரணன்வதை— உறவினரின் வரவு

பாண்டவர்கள் இவ்வாறு ஊராரும், உறவினருங் கதறியழக் கானகஞ் சென்ற செய்தி, அவர்களுடைய படைவீரர்களுக் கெட்டியது. அவர்களெல்லோரும் பெருந்துயரத்தோடு புறப்பட்டுச் சென்று வனமெங் குந் தேடிப் பாண்டவர்களைச் சௌனகர் என்னும் முனி வரிருந்த வனத்திலே கண்டு வணங்கிப் புலம்பியழுத னர். தருமபூபதி அவர்கட்கெல்லாம் இனிய மொழி கூறிச் சமாதானஞ் செய்தார். அவர்கள், "பொறை, வீரம், நீதி இவையில்லாத மன்னனிடத்திலிருந்து அஷ்ட ஐசுவரியங்களையும் பெற்று வாழ்வதினும், அப் பொறை, வீரம், நீதி இவற்றுடன் கூடிய வேந்தனிட மிருந்து அஷ்டதரித்திரத்தை அடைந்தாகிலும் வாழ் வதே சிறந்ததாம். ஆகையினால் தருமமூர்த்தியாகிய தங்களைப் பிரிந்து நாங்களகிலோம்'' என்று ஓலமிட் டனர். அப்போது தருமநந்தனர், "நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்களேன் வருந்துகிறீர்கள்? பொருள் நிலையில்லாதது. 'குடையின் நிழலிலே இருந்து குஞ்சர மூர்ந்து அரசுபுரிந்த மன்னவரும் ஒரு காலத்தில் நடை மெலிந்து ஒரூரைச் சேர்ந்தும் வசிக்கக் காலம் வரும்' என்று கூறுவது கேட்டதில்லையா? அது போல

நாங்கள் ஒருகாரணம்பற்றி வனத்துக்கு வந்தோம். நீங்கள் எங்களைப் பின்பற்றுவது கூடாது. அது பலர்க்கும் அதிருப்தியைக் கொடுத்துவிடும். ஆகையினால் நீங்கள் நகரத்துக்குப் போய் எங்கள் மக்களை எங்களைப் போல் பாவித்து அவர்களுக்குத் துணையாயிருந்து வாருங்கள்'' என்று நியாயங் கூறினர். அவர்கள் தரும பூபதியின் பேச்சுக்கு வேறுபேச மனமில்லாமல் பெரு விசனத்துடன் அவரிடம் விடைகொண்டு பிரியமாட்டாமற் பிரிந்தனர்.

அவர்கள் இவ்வாறு வந்துபோன பிறகு தரும புத்திரர், ''எல்லாம் விதியின் பயன்'' என்று கருதியிருக்கையில், அவரோடு எப்பொழுது மிருந்துவந்த பன்னீராயிரம் அந்தணர் மாத்திரம் தருமரைப் பார்த்து, ''ஜலம் வற்றிய காலத்தில் குளத்தைவிட்டு நீங்கும் பறவையைப் போன்றவராகோம் நாங்கள்; குளத்தில் நீர் நிரம்பி யிருக்கும்போதும் வற்றிய காலத்திலும் அதைவிட்டு நீங்காமலிருந்துவரும் கொட்டியையும் ஆம்பலையும் நெய்தலையும் போல் இருப்பவர்களாதலால் எங்களைக் கைவிடாமலிருக்க உம்மை வேண்டுகின்றோம்'' என்று கூறி மன்றாடினர். தருமராஜா அவர்களிடம் இரக்கங்கொண்டு தம்மோடிருந்துவர அவர்கட்கு அநுமதி தந்தனர்.

அநுமதி தந்தாராயினும் இவர்களனைவர்க்கும் உணவிட்டு இவர்களை இக்காட்டில் எப்படிக் காப்பது என்கிற கவலை மேலிட்டவராய்த் தமது குருவாகிய தௌமியரை வணங்கி இதற்கென்ன செய்வதென வினவினர். அச்சமயம் அங்கு அவ்வன முனிவராகிய சௌனகர் வந்து சேர்ந்தார். அவரைத்

தருமபுத்திரர் வணங்கி வரவேற்றுபசரித்தார். தரும புத்திரர் வனமேகியதன் காரணங் கேட்டறிந்த முனிவர் வருத்தமுற்று அவரை நோக்கி, "தருமநந்தனு! உன்னுடைய நல்ல ஒழுக்கத்தையும் உன்பெயரையும் இங்குற்ற பல முனிவர் கூறக்கேட்டு உன்னைப் பார்க்க வேண்டுமென்கிற அவாமிகவுங் கொண்டிருந்தேன். இன்று உன்னைக்கண்ட என்மனம் சூரியனைக் கண்ட தாமரை போலவும், மேகத்தைக் கண்ட மயில் போலவும் மகிழ்கின்றது. உனக்கு இச்சமயம் சில புத்திமதிகள் கூற விரும்புகின்றேன். நல்ல ஒழுக்கத்தை மேற்கொண்டவனுக்கு நாட்டினும் காடே சிறந்தது. வனமே நல்லொழுக்கத்திற்கு இருப்பிடமாகும். ஆதலால் வனத்திற்கு வந்தது உனக்கு நல்லதேயாம். நீ அப்படிப்பட்ட உயர்ந்த கருத்துடையவனு யிருந்தும் ஏதோ ஒரு காரணம் மனத்திற்கொண்டு வருந்துவதாகத் தெரிகிறதே—ஏன்?" என்று கேட்டார்.

தருமபுத்திரர், "ஸ்வாமி! தாம் கூறியதை ஒப்புக் கொள்கின்றேன். உயிர்கட்கெல்லாம் ஆதாரமாக ஜகதீசனிருந்த போதிலும் ஒருவர் மூலமாகப் பலபேருக்கும், பலபேர் மூலமாக ஒருவருக்கும் ஜீவனம் நடந்து வருகிறதன்றோ? அதுபோல் என்னொருவனால் என்னுடன்பிறந்தோரும், பாஞ்சாலியும் சுகமிழந்தனர். அஃது எனக்கு வருத்தந்தரவில்லை. என்னையடுத்து என்னோடிருக்கவே தீர்மானித்த இந்தப் பன்னீராயிரம் வேதியர்களையும் அவர்கட்குண்டாகும் பசிப்பிணி தீர்த்து இக்கானகத்தில் எவ்வாறு காப்பாற்றுவதென்கிற கவலையே மிகுந்திருக்கிறது. அதற்கொரு வகையறியாமல் நான் மயங்கி வருந்துகின்றேன். அதுபற்றி எமது குருநாதரை இப்

பொழுது கேட்டுக்கொண்டிருந்தேன். தாமும் வந்து சேர்ந்தீர்கள்'' என்றார்.

சௌனகர் தௌமியருடைய திருமுகத்தைப் பார்த்து, "பிறவுயிர் வருந்த மனம்பொறாத குணவான்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மனம் வருந்துவது இயற்கையேயாகும். தாமென்ன உபாயம் ஆலோசித்திருக்கிறீர்?" என, தௌமியர், "சூரிய பகவானே பிராணிகளுக்கு உணவளிப்பவர். ஆகையினால் அவரைக் குறித்துத் தவம் புரிவதே இப்பொழுது செய்யத்தக்கது என்று ஆலோசித்திருக்கிறேன்'' என, சௌனகர், "சாலப் பொருத்தமான உபாயமிது. இதைத்தான் நானும் சிந்தித்தேன். இதற்கு எது மந்திரமோ அதனை உபதேசித்து மாணவனுடைய குறையைத் தீரும். குருவையே அருந்துணையாக நம்பியிருப்பவரன்றோ பாண்டவர்கள்? சந்தோஷம். நான் போய் வருகின்றேன்" என்று கூறிப் பாண்டவர்களை ஆசீர்வதித்துச் சென்றனர்.

அப்பால் தௌமியர் தருமபுத்திரர்க்கு மந்திரோபதேசஞ் செய்வித்துத் தவத்திலிருக்கப் பணித்தார். தருமபுத்திரர் உடனே அவ்வனத்தில் ஓரிடத்திலிருந்து சூரிய பகவானை நோக்கித் தவம் புரிந்தார். சூரியபகவான் அவருடைய தவத்திற்கிரங்கி ஒரு வேதியரைப்போல் வேடம் பூண்டுவந்து "உனக்கு என்னவேண்டும்? கேள்'' எனத் தருமபுத்திரர், அவரைப் பணிந்து தமது குறையைக் கூறினர். சூரிய பகவானாகிய அவ்வந்தணர் அவரிடம் ஓர் அக்ஷய பாத்திரமளித்து, "இஃது ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பப்படி மாதுரியமான உணவைக் கொடுக்கும்.

இதனை நீ வனத்திலிருக்கும் வரையில் வைத்திருந்து நகரத்திற்குப் போகும்போது என்னிடம் கொடுத்து விட்டுப்போ'' என்று கூறி மறைந்தருளினர்.

தருமபுத்திரர் அந்த அக்ஷய பாத்திரத்தினுதவி யால் பிராமணர்களுக்கு உணவிட்டுத் தாமும், தமது சகோதரரும், மனைவியும் கந்தமூல பலாதிகளை யுண்டு அன்றைப்பொழுதை அவ்வனத்திலேயே கழித்து மறு நாள் அங்கிருந்து புறப்பட்டுப் பல வனங்களைக் கடந்து செல்லுகையில் ஒரு வனத்தில் பொழுதுபோனபடியால் அங்கே தங்குவதெனத் தீர்மானித்து அதற்குத் தகுதி யான இடந் தேடிக்கொண்டு சென்றார்.

அந்த வனத்தில் முன் பீமசேனன் கொன்ற பகா சுரனுடைய தம்பி கிம்மீரனான் என்பவனிருந்து வந் தான். இவன் தன் அண்ணனைக் கொன்றவனாகிய பீம சேனனைக் கொல்ல வேண்டுமென்று கருதிச் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இவர்கள் அங்குச் செல்லும் அரவங்கேட்டுத் தானிருந்த இடத்திலிருந்து வெளியே வந்து பார்த்து, "இவர்கள் பாண்டவர்களே இதில் ஐயமில்லை,'' என்று தெரிந்துகொண்டு, சிறிது நேரத்தில் தன் பகைவனாகிய பீமசேனனையுங் கண்டு பிடித்து அவனை எதிர்த்துக் கொன்று தின்பதெனச் சினங்கொண்டான். அப்பொழுது பாண்டவர்களின் நடுவே நிற்கும் திரௌபதியைக் கண்டுவிட்டான். அவன் கொண்ட சினம் உடனே மாறியது. "இவளழ காயிருக்கிறாள்; இவளை நாம் கொண்டு போய்விடுவோம்; வீணே இந்தப் பீமனை எதிர்த்துக் கொல்வதினால் நமக் கென்ன வரப்போகிறது ? இவனை யெதிர்த்து, அமராடி னால் இவன் நம்மைக் கொன்றாலும் கொன்றுவிடுவான்.

இவன் அதிபல பராக்ரமசாலியாய் விளங்கிய பகாசுரனையே கொன்றவனல்லவா? ஆகையினால், இவனை நாம் எதிர்ப்பதைவிட இவ்வணங்கைக் கொண்டுபோவதே இதுசமயம் செய்யத்தக்கது'' என்று தீர்மானித்துத் திடீரென்று பாய்ந்து திரௌபதியைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்திலே கிளம்பிவிட்டான். திரௌபதி, 'கூ கூ!' வென அலறினாள். அப்படி அவள் அலறிய குரல் பாண்டவர்கள் செவியிற் படுமுன்னே பீமசேனன் தன் கதையைக் கீழே யூன்றி உயரத் தாவி அந்த அசுரனை ஓரடி அதனாலடித்தான். அடி விழுந்ததும் அசுரன் 'ஆ!' என்றலறிக்கொண்டு கீழே விழுந்தான். திரௌபதியை, அர்ச்சுனன் கீழே விழவொட்டாமல் ஓடிப்போய்த் தன் தோளிலே தாங்கிக்கொண்டு கீழே இறக்கி ஆச்வாசப்படுத்தினான். பீமசேனன் அவ்வசுரனை விடாமற் பிடித்துக்கொண்டு போராடினான். இருவரும் வெகுநேரம்வரை போர் புரிந்தனர். கடைசியில் பீமசேனன், முன் பகாசுரனுடைய தலையைத் திருகியெறிந்ததுபோல், இவன் தலையையுந் திருகி எறிந்து இவனை விண்ணுலகுக் கனுப்பினான். பீமசேனனுடைய இச்செயல்கண்டு தௌமியரும் தருமபுத்திரரும் மகிழ்ந்தனர். பிறகு பாண்டவர்கள், அன்றிரவு அங்கேயே தங்கியிருந்து மறுநாள் புறப்பட்டுக் காமியவனமென்கிற ஒரு செழிப்பான வனத்திற்குப் போய்ச் சேர்ந்தனர்.

அந்த வனத்தில் எங்கும் சோலைகள் நிறைந்திருந்தன. அங்கங்கு நீர் நிலைகள் காணப்பட்டன. நாற்புறமும் மலையருவிகள் 'ஜோ!' என்னும் ஓசையோடு பெருகிக்கொண்டிருந்தன. ஆதலின், அந்த வனம் அதிமனோகரமாயிருந்தது. அங்கே அவர்கள் மனமகிழ்ச்சி

யோடு தங்கி, அக்ஷய பாத்திரத்தி னுதவியால் பிராமணர்களுக்கு அறுசுவையோடு கூடிய உண்டி யுதவித் தாங்கள் கந்தமூல பலாதிகளை யுண்டு வந்தனர்.

இவர்களிங்கிப்படி யிருந்துவருகையில், இவர்களைப் பார்க்க அநேக தேசத்து அரசர்கள் வந்து சேர்ந்தார்கள். தருமபுத்திரர் சூதாடியதையும், திரௌபதியைத் துச்சாதனன் சபைக்கிழுத்து வந்து அவமானஞ் செய்ததையும், முடிவில் பாண்டவர்கள் வனஞ் சென்றதையும் கேள்விப்பட்ட பாஞ்சாலன் பெருங் கோபமடைந்து படை திரட்டிக்கொண்டு புறப்பட்டுப் பாண்டவர்களை நெடுகலுந் தேடிக்கொண்டே காமியவனம் வந்து சேர்ந்தான். இன்னும் உறவினராகிய குந்திதேவி, சுபத்திரை, அபிமன்னன், இளம் பஞ்சபாண்டவர்கள் ஆகிய இவர்களும் காமியவனம் வந்து சேர்ந்தனர். ஒன்றுந் தெரியாதவர்போல் கிருஷ்ணமூர்த்தியும் துவாரகையிலிருந்து வந்து சேர்ந்தார்.

இவ்வாறு அங்கு வந்த எல்லோரையும் தருமபுத்திரர் அன்போடும் பணிவோடும் வரவேற்று வேண்டிய உபசாரஞ் செய்து, எல்லோருடனும் தாமுமிருந்து, நடந்தவற்றை யெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லிக்கொண்டே வந்தார். அப்போது, அந்த வரலாறு கேட்டுச் சினமடைந்த பாஞ்சாலன், விராடன் முதலிய அரசர்கள், தருமபுத்திரரைப் பார்த்து, "தங்கள் பகைவர்களை வெல்லக் கருதும் அரசர்கள் நால்வகைச் சேனைகளோடு சென்று போர் தொடங்கிப் பகைவர்களை வெல்வது சிறந்தது. அப்படிச் சென்று பகைவரை வெல்ல வல்லமையில்லாதவர்கள் சில அரசருடைய உதவியைக்கொண்டு பகைவர்

களை வெல்வர். இந்த உபாயத்தினால் பகைவர்களை வெல்ல முடியாதவர்கள் நஞ்சிடுதல், படுகுழி பாய்ச்சல், சூதாடல் முதலிய கொடிய பாதகச் செயல்களினாலே பகையை முடித்துக்கொள்வர். துரியோதனன் உங்களை வெல்வதற்குக் கடைசியான இந்த உபாயத்தை மேற்கொண்டிருக்கிறான். இது போகட்டும்; திரௌபதியை எப்படிச் சபைக் கிழுத்துவந்தான் அந்தத் துச்சாதனன்? அதை எப்படி நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? அந்தத் துச்சாதனனையும், படுபாவியாகிய துரியோதனனையும், அவனுக் குதவியாகப் பேசிய கர்ணனையும், வஞ்சகனாகிய சகுனியையும் இக்கணமே அதமாக்குவோம். இதில் நீங்கள் தடைசெய்யாமலிருங்கள்" என்று கூறி ஆர்ப்பரித்தார்கள். இதைக்கண்டு மற்ற அரசர்கள் "போர் தொடங்கிக் கொடியவர்களை ஒழிப்பதே சரி" என்று கூறித் தங்கள் வில்லைக் கீழே ஊன்றி யெழுந்தனர். அச்சமயத்தில் கிருஷ்ணமூர்த்தியும் எழுந்து, "ஆம் அவ்வாறு செய்ய நானும் விரும்புகிறேன்" என்று கூறித் தமக்குப் போர் தொடங்குவதில் விருப்ப மிருப்பதாகப் பாவனை செய்துவிட்டு உடனே அவர்களை நோக்கி, "இதில் கவனிக்க வேண்டியதொன்றுண்டு; கேளுங்கள். தருமராஜா ஒன்றுந் தெரியாதவரல்லர். அவருடைய சகோதரர்கள் அற்பமானவர்களல்லர். அவர்கள் தங்கள் அண்ணனுடைய வாக்குக்கு அடங்கி ஒன்றுஞ் செய்யாமல் வந்திருக்கிறார்கள். தருமராஜா நீதிக்குக் கட்டுப்பட்டவர் என்பதை நாமறிவோம். ஆதலின், இப்போது போருக்குச் செல்வது யுக்தமல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. இந்த வனவாசங் கழிந்தபின் அவர்

கள் தங்கள் வாக்குப்படி நாடு கொடாமற்போனால் அப்பொழுது இந்தக் கோபத்தைக் காட்டி அவர்களை ஒழிப்போம்'' என்றெல்லோரையும் சமாதானஞ்செய்து விட்டுத் தருமபுத்திரரைப் பார்த்து "இளம் பஞ்ச பாண்டவர்களைப் பாஞ்சாலனிடத்திலும், குந்திதேவியை விதுரரிடத்திலும், அபிமன்னனையும் சுபத்திரையை யும் பலராமரிடத்திலும் அனுப்பிவிடலாம். அவர் களுக் கொரு குறைவும் வராது. நீங்கள் பதின்மூன்று வருஷங்களையும் பதின்மூன்று நாட்களாகக் கழித்து விட்டுச் சுகமே திரும்புங்கள். பின்னர்க் கவனிப்போம்'' என்று தேறுதல் கூறினர்.

எல்லோரும் இது சரியான ஆலோசனையென ஒப்புக்கொண்டு தத்தம் நகரத்திற்கேகப் புறப்பட்டுத் தருமபுத்திரர் முதலியவர்களிடம் கண்ணுங் கண்ணீரு மாய்ப் போய்நின்று விடை கொண்டனர். தருமபுத்தி ரர் மிக்க துக்கத்துடன் எல்லோருக்கும் விடை கொடுத் தனுப்பினர். குழந்தைகள் விடை கொள்ளும்போதும், தாயார் விடை கொள்ளும்போதும், சுபத்திரை விடை கொள்ளும்போதும் பாண்டவர்களும் திரௌபதையும் மிகவும் துக்கமடைந்து ஒவ்வொருவருக்கும் தக்கபடி தேறுதல் கூறி விடை கொடுத்தனுப்பினர். கடைசியில் கிருஷ்ண பரமாத்மாவும் விடை கொண்டனர். அவரை எல்லோரும் வணங்கி, "எங்கள்மீது கருணையிருக்க வேண்டும்'' என்று கூறி விடை தந்தனர். அவரும் பிரிய மனமில்லாதவர் போல் பிரிந்தார்.

அத்தியாயம்—9

விதுரரின் வரவு—துரியோதனன் போர்க்கெழுதல்

இவ்வாறு உறவினர் வந்து போனதும் பாண்டவர்கள் அந்த வனத்திலேயே சிலகாலமிருந்துவரத் தீர்மானித்தனர். இவர்களிங்கு இப்படியிருக்கையில்; அத்திணுபுரத்தில் துரியோதனன் ஒருநாள் பெரியவர்களை யெல்லாம் வரவழைத்து ஒரு சபை கூட்டி, "இனி அரசை நடத்த வேண்டியவர்கள் நாமல்லவா? இந்திரப்பிரஸ்தம் அதற்குத் தகுதியான இடமாதலால் நான் அங்கேயிருந்து அரசுசெலுத்தக் கருதுகிறேன்; என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்க, சபையிலிருந்த விதுரர் இந்தப் பாவியை அந்தப் புண்ய பூமிக்குப் போகவிடலாகா தென்றெண்ணித் "துரியோதனு! இந்த அத்திணுபுரமுண்டான காலமுதல் அரசர்களெல்லோரும் இங்கேயே இருந்திருக்கிறுர்கள். அப்படியிருக்க நீ மாத்திரம் அங்கே செல்வது தகுதியன்று. நீ இங்கிருந்து அரசு செய். துரோணுசாரியாரை அவ்விடத்துக்கு உன் பிரதிநிதியாக அனுப்பிவைத்து இராஜ காரியங்களை நடத்து" என, அவன் அவ்வாறே செய்தான்.

இவ்வாருன பிறகு ஒரு நாள் திருதராஷ்டிரன் பாண்டவர்கள் கூறிப்போன சபதத்தை யெண்ணித் திகிலடைந்து விதுரரை வரவழைத்துப் "பாண்டவர்கள் நாட்டிற்கு வருவார்களா? இல்லை காட்டிலேயே மடிந்து போவார்களா?" என்று கேட்டான். விதுரர்,

"அவர்கள் ஒருகாலும் மடியமாட்டார்கள். பதின் மூன்று வருஷகாலத்தையும் வெகு சுகமாகக் கழித்து விட்டு நாட்டிற்கு வந்து அரசு கேட்பார்கள். உமது பிள்ளைகள் கொடுக்க மறுப்பார்கள். அப்பொழுது பீமன் தான் செய்த சபதப்படி உமது நூறு பிள்ளைகளையுங் கொல்வான். அர்ச்சுனன் கர்ணனையும், நகுலன் சவுபலனையும், சகாதேவன் சகுனியையும் கொல்வார்கள். பின்பே திரௌபதி தன் கூந்தலை முடிப்பாள்" என்றார்.

"இப்படிப்பட்ட தீங்கு நேரிடாதிருக்க இனி நாம் என்ன செய்யலாம்" என்று திருதராஷ்டிரன் கேட்க, விதுரர், "காட்டிற்குச் சென்று பாண்டவர்களை வேண்டி இங்கழைத்து வந்து அவர்களுடைய நாட்டை அவர்களிடம் கொடுத்துச் சமாதானஞ் செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் உன்னுடைய மூத்த பிள்ளையாகிய துரியோதனனைக் கொல்ல வேண்டும். இப்படிச் செய்தாலல்லது இதைத் தடுத்தற்காகாது" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் திருதராஷ்டிரன் சினமடைந்து "நல்ல ஆலோசனை சொன்னாய்! சை—என் முன் நில்லாதே! அடே பாவி! பெற்ற பிள்ளையைக் கொல்லச் சொல்லுகிறாயே! உன் நெஞ்சின் திடத்தை என்னென்று கூறுவது? போ. நீ இங்கிருக்கத் தக்கவனல்லன்" என்றான். விதுரர் உடனே அவ்விடத்தை விட்டு விலகித் தன் அரண்மனை வந்து பிரயாணப்பட்டுப் பாண்டவரிருக்கும் காமியவனத்தைச் சேர்ந்தார். அங்குப் பாண்டவரைக் கண்டு அவர்களிடம் திருதராஷ்டிரனுக்குந் தமக்கும் நடந்த சம்பாஷணை

களை விவரமாய்க் கூறி, "அங்கிருப்பதினும் இங்கு இந்தக் கானகத்தில் வசித்தல் நலமென்றெண்ணி இங்கே வந்தேன்" என்றார். தருமபுத்திரர், விதுரர் கொண்டிருந்த சினத்தை மாற்றிச் சில நீதி வசனங்கள் கூறிச் சமாதானஞ் செய்து அவரைத் தம்மோடு வைத்துக்கொண்டார்.

பின் திருதராஷ்டிரனுக்கு விதுரர் மீதிருந்த சினமும் தணிந்தது. அப்பால் அவன் தன் மந்திரிகளிலொருவனாகிய சஞ்சயனை வரவழைத்துத் தன் மனத்திதுள்ளதைத் தெரிவித்து, "காட்டிற்கேகி விதுரரை அழைத்து வா" என்றனுப்பினான். சஞ்சயன் அவ்வாறே சென்று பாண்டவர்களினிடையே விதுரரைக் கண்டு சொல்லவேண்டியவற்றைச் சொல்லி அழைத்தான். தருமபுத்திரர் விதுரருக்குப் போதியபடி சமாதானஞ்சொல்லி அரசனிடம் போய்ச் சேரும்படி விநயமாய்க் கூறினார்.

விதுரர் பெரிய அறிவாளி யாகையினால் சினந் தணிந்து உடனே புறப்பட்டுச் சஞ்சயனுடன் அத்தினாபுரம் வந்து திருதராஷ்டிரனைப் பணிந்து நின்றார். திருதராஷ்டிரன் விதுரரின் வரவறிந்ததும் அவரை அழைத்து அருகே வீற்றிருக்கப்பணித்து, "நீ இவ்வாறு செய்யலாமா? அரசன் வியர்வை சிந்திய விடத்தில் தங்கள் இரத்தத்தைச் சிந்திக் காக்கும் கடமை பூண்டவர்களல்லவா மந்திரிகள்? அரசன் கெட்ட வழியிலே சென்றால் அவனை நல்ல வழியில் எப்பாடு பட்டாவது திருப்ப வேண்டியவர்களும் அவர்களேயன்றோ? இந்த நியாயங்களெல்லாம் நீ அறியாதவனா? கோபத்தினால் நான் தெரிந்தும் தெரியாமலும் இகழ்ந்தால் அதற்காக

என்னை நீ வெறுப்பதா? எல்லாந் தெரிந்த உனக்கு நான் சொல்ல வேண்டியது முண்டோ?'' என விதுரர் சினந்தணிந்து அரசனைப் பணிந்து அவனுடனிருந்து வர ஒப்புக்கொண்டார்.

இவ்வாறு விதுரர் காமியவனம் போய்வந்தசெய்தியைத் துரியோதனன் அறிந்ததும், கடுஞ்சினமடைந்து ஒரு சபைகூட்டி, விதுரர் செய்ததைக் கூறி, "இவரைப் பற்றி என்ன தீர்ப்புச் செய்கிறீர்கள்? இவர் என் சோற்றையுண்டு எனக்கே கெடுதி தேடுகிறவரா யிருக்கிறார். இவர் என்பகைவரிருக்கு மிடத்துக்குப் போய் அவர்களுடன் கலந்து பேசிக்கொண்டு எனக்குத் தீங்கு செய்ய ஏதோ சூழ்ச்சி தேடியிருக்கிறார். இது நிச்சயம்'' என்றான். சபையோர் இதைக் கேட்டதும் மனம் வருந்தி இன்னது சொல்வதெனத் தெரியாம லிருந்தார்கள். அச்சமயம் அங்கு அயித்திரி என்கிற ஒரு முனிவர் வந்தார். அவரைக் கண்டதும் துரியோதனன் வணங்கி மரியாதையாக வரவேற்று வீற்றிருக்கச் செய்து, வந்த செய்தி யாதென வினவினான். அம்முனிவர், "வேந்தே! பாண்டவர்கள் வனமேகியதற்குக் காரணம் நீங்களே எனத் தெரிந்தது. இப்படிப் பட்ட இழிவான செய்கை செய்வது தருமந்தவறாத அரசர்களுக்கு அடுத்ததாகுமா? பாண்டவரிடம் பகை கொள்ள அவர்கள் செய்த தவறு என்ன? அவர்கள் தருமத்திற்குக் கட்டுப்பட்டவர்களன்றோ? அவர்கள் மானிடரேயாயினும் தேவாம்ச முடையவர்கள். அவர்கள் பகை ஒருவருக்கும் ஆகாது. ஆதலின், இப்பொழுதே அவர்களை மீண்டும் நகரத்திற் கழைத்து வர ஏற்பாடுசெய்வதே இவ்விடத்து முதற்செய்கையா

யிருக்கவேண்டும். இதனைக் கூறவே நான் வந்தேன்'' என்றார்.

துரியோதனன் இதைக்கேட்டதும் முனிவடைந்து சபையை நோக்கி, "முற்றத்துறந்த முனிவருக்கு இவற்றிலெல்லாம் ஏன் கவலை? எங்கள் பகையினால் இவர்க்கு நேரிட்ட நஷ்டமென்ன? எங்கள் சமாதானத்தால் இவர் அடையப் போகும் இலாபமென்ன? பெரியோர்களே! இது விதுரனுடைய சூழ்ச்சியா யிருக்குமென்பதி லையமில்லை. இப்படி யனுப்பினால் என் மனத்தைப் பேதித்து விடலாமென்கிற எண்ணம் போலும். நல்லது. முனிவரே! உம்மை நான் இப்படிப் பட்டவரென்று முன்பே அறிந்திருந்தால் இங்கு உட்கார வொட்டேன். உமது புத்திமதிபோதும்! போமெழுந்து சிறிதுந் தாமதியாமல்'' என்றான். முனிவர் கோபமடைந்து, "வேந்தே! வேண்டாம். கல்வியும் பொருளும் வீரமுமுடைய ஒருவனுக்கு அடக்கம் வேண்டும். அடக்க மில்லையானால், எந்தச் செல்வமும் பயன்படாது. அம்மூன்று செல்வமும் ஒருங்கமைந் திருப்பதினால் இறுமாப்புக் கொண்டு பேசும் பேச்சும் செய்யும் செய்கையும் பின்னே பேரிடர் தரும் என்பது திண்ணம்'' என்று கூறி யெழுந்து போய்விட்டார்.

அப்பால் துரியோதனன், "இனி இந்த ஐவரை உயிரோடிருக்க விடேன். ஒருவரும் தடுக்காமலிருக்க வேண்டுகின்றேன்'' என்றுகூறிச் சபையைக் கலைத்து விட்டுப் பெரும்படை திரட்டிக்கொண்டு பாண்டவர்களை எதிர்க்கப் புறப்பட்டுச் சென்றான். அவர்கள் போகும்போது வழியில் வியாஸர் எதிர்தோன்றி "இப்போது பாண்டவர்மீது போருக்குச் செல்லுதல் தகுதி

யன்று. இப்படிச் செய்தால் உன்னை அரசர்கள் மதிப்பார்களா ?" என்றுகூறித் தடுத்தார். அவரை மீறி நடந்தால், சாபமுண்டாகு மென்றஞ்சித் துரியோதனன் சேனைகளைத் திருப்பிக்கொண்டு நகரம் போய்ச் சேர்ந்தான்.

அத்தியாயம்—10

வியாஸர் தரிசனம்—அர்ச்சுனன் தவம்

அப்பால் வியாஸர் பாண்டவரிருக்கும் காமிய வனம் போய் அவர்களைக் கண்டார். பாண்டவர்கள் பெரியவராகிய அவரை வணங்கி வரவேற்றுபசரித்து ஆசிகள் பெற்று அதுவரையில் நடந்தவற்றை யெல்லாங் கூறி வருந்தினர். வியாஸர், தருமபுத்திரரைப் பார்த்து, "தருமநந்தன ! கடந்துபோனதை யெண்ணி வருந்துகிறவனும் இனிவருவதைக் கருதி மகிழ்வோனும் மனிதருள் பதர் என்று எண். இப்பொழுது அநுபவிப்பது சஞ்சலமே யாயினும் இதனையும் நன்மையென்றே நினை. இதுதான் ஆண் தன்மைக்கு அழகு. இப்படி யெண்ணுகிறவன் மக்களில் தேவனென மதிக்கப் படுவான். உனக்குத் தெரியாத நியாயமா ?—கேள். முற்காலத்தில் புஷ்கரனோடு சூதாடி நாடு நகரமிழந்து காடேகிய நளச்சக்கிரவர்த்தியின் சரித்திரத்தை நீ கேட்டதில்லையா ? இந்தச் சந்திர வம்சத்தில் உங்கள் தலைமுறைவரையில் கொலை, களவு, காமம், சூது முதலியன கிடையா. இந்தத் துரியோதனன்றான் அவைகட்கெல்லாம் பாத்திரமாய் விளங்குகிறான். இனி நடக்கப் போகும் விபரீதங்களைக் கேள். என் சொல்லுக்குக்

கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள் சுகப்படுவீர்கள்'' என்று கூறினர். தருமபுத்திரர், "தெய்வாதீனத்தையே நம்பி யிருக்கும் நாங்கள் எங்கள் குலதெய்வமாகிய தங்கள் திருவாக்கையுங் கடப்போமா ? தாங்கள் கிருபை கூர்ந்து இனி நடக்கப் போவதையும் நாங்கள் நடந்துகொள்ள வேண்டியதையும் கூறியருள வேண்டும்'' என்று வேண்ட வியாஸர் கூறுகிறார்.—

"தருமநந்தன! பதின்மூன்று வருஷங் கடந்த பின்னர் நீங்கள் நாட்டுக்குச் சென்று துரியோதனனை அரசு கேட்டாலும் அவன் கொடான். அவன் ஸத்தியங்கெட்ட வஞ்சகன். ஆனல், அவன் போர்முனையில் தன் உயிரைக் கொடுப்பானென்பது திண்ணம். இருப்பினும் அவனை நீங்கள் எளியவனுகக் கருதுவது கூடாது. அவனுக்குத் தன் வன்மை இருப்பதுடன் அவனை அண்டி யிருப்பவருடைய வன்மையு மிருக்கின்றது. அவனைவெல்ல ஒருவழி சொல்லுகிறேன். நீங்கள் சிவ பெருமானிடமிருந்து பாசுபதம் என்கிற திவ்ய அஸ்திரத்தைப் பெறுதல் வேண்டும். அந்த அஸ்திரத்தைப் பெறத்தக்கவன் உங்களில் அர்ச்சுனனே யாவன். ஆகையினல், அவன் பரமசிவனைக் குறித்துத் தவம் புரிந்து அவ்வஸ்திரத்தை அடையட்டும்.''

இவ்வாறு கூறியவளவில் அர்ச்சுனன் மிகமகிழ்ச்சியோடெழுந்து வணங்கி நின்று, "சுவாமி! தங்களுடைய திருவாக்கால் என்னைத் தவத்திற் கருகனெனக் கூறியருளியதே எனக்குச் சகல சித்திகளையுந் தருவதாம். ஆக்ஞைப்படி இப்பொழுதே தவத்திற்குச் சென்று அவ்வஸ்திரத்தைப் பெற்றுத் திரும்புகின்றேன். ஆசிகூறி விடையளித் தருளுவீராக !'' என்று

கூறினான். வியாஸர் அர்ச்சுனனிடம் மகிழ்ச்சியடைந்து, அவனை நீராடி வரச்செய்து அவனுக்கு ஒரு மந்திரம் உபதேசித்து, "நீ சுகமே போய்த் தவஞ்செய்து காரிய சித்தி பெற்றுவரக் கடவாய்" என வாழ்த்தி அனுப்பினார். அர்ச்சுனன் எல்லோரையும் முறைப்படி வணங்கி விடைகொண்டான். வியாஸரும் தருமபுத்திரர் முதலியவர்களுக்குத் தேறுதல் கூறித் தம்மிடத்திற் கேகினார்.

பெரியவராகிய வியாஸருடைய ஆசியின் துணைகொண்டு புறப்பட்ட அர்ச்சுனன் வடதிசை நோக்கிப் பல வனங்களைக்கடந்து சென்று, இமயமலைக்குப் போய் அதன் அழகையும் வளப்பத்தையும் கண்டு மகிழ்ந்து, அப்பால் மகா மேருவையும் கடந்து சென்று, பரமசிவன் வசிக்கும் கைலையங்கிரிக் கேகி, அங்கொரு சார்பில் தவச்சூழலொன்று ஏற்படுத்திக் கொண்டு, முறைப்படி தவக்கோலம் பூண்டு, சகல லோக கர்த்தாவாகிய சிவபெருமானை மனத்தில் தியானித்து மந்திரமுச்சரித்துத் தவம் புரியலானான்.

அர்ச்சுனன் மகா உக்கிரமாகத் தவஞ்செய்தபடியினால் அதனை இந்திரனுணர்ந்து அவனுடைய தவநிலையைப் பரிசோதிக்கத் திருவுளங்கொண்டு அப்ஸர ஸ்திரீகளை ஏவினான். அப்ஸர ஸ்திரீகள் அர்ச்சுனன் முன் வந்து நாட்டியங்களாலும் சங்கீதங்களாலும் அவனுடைய தவத்தைக் கலைக்க முயற்சி செய்தனர். அர்ச்சுனன் சிறிதுஞ் சித்தம் சிதையாம லிருந்தமையினால் மனம் வெட்கி மீண்டும் அவர்கள் இந்திரனிடம் போய் "அர்ச்சுனனுடைய தவவுறுதியைக் கெடுக்க எங்களாலாகாது" என்று கூறினர். இந்திரன், பெரிதும் வியப்படைந்து, தானே ஓர் அந்தணனாக வேடம் பூண்டு

அர்ச்சுனன் முன் தோன்றி நின்றான். வேதியன் வந்திருப்பதை உணர்ந்த அர்ச்சுனன் மனத்தைச் சிவபெருமானிடம் வைத்துக் கொண்டே அவனை வணங்கினான். பகவானாகிய வேதியன், "நீ இவ்வளவு காலமாய்த் தவம்புரிவதன் நோக்கமென்ன?" என்று கேட்டான். அர்ச்சுனன், "அகிலலோக நாதனாகிய சிவபெருமானைத் தரிசிக்க" என்று கூற, அந்தணன் நகைத்து, "நீயோ அந்தப் பரம்பொருளைக் காண்பவன்? ஏன் வீணே உடலை வருத்திக் கொள்கின்றாய்? முற்றத் துறந்த முனிவருங் காணவொண்ணாத பரமனை நீ யெப்படிக் காணப் போகிறாய்?" என்று கேட்டான்.

அர்ச்சுனன், "ஸ்வாமி! எண்ணுமெவ் வெண்ணமும் விடாமுயற்சியினால் கைகூடுமென்று வேதங்கள் முறையிடுகின்றன வன்றோ? ஆதலின் என் எண்ணம் கைகூடும் வரையில் நான் இந்தத் தவ நிலையிலிருந்து விலகேன். எப்படிப்பட்ட சங்கடம் வரினும் வருக" என்று சொன்னான். சொல்லவே இந்திரன், "ஓ இவன் தான் கொண்ட உறுதியைக் கைவிடான்" என்றெண்ணி மகிழ்ந்து அவனுக்குத் தன் உண்மை உருவக் காட்சி தந்து அவனைப் புகழ்ந்து ஆசீர்வதித்துத் தன் உலகஞ் சென்றான். இவ்வாறு இந்திரன் சென்றபின் அர்ச்சுனன் மீண்டும் முன்னிலும் அதிகமான உறுதிமேற் கொண்டு தவம் புரிந்து வந்தான்.

இங்குஇவனிவ்வாறிருக்கையில் துரியோதனனுடைய சபைக்கு ஒருநாள் நாரதர் விஜயமானார். அவரைத் துரியோதனன் முறைப்படி உபசரித்தானாயினும், "ஸ்வாமி! தங்களைப் போன்ற மகா முனிவர்கட் கெல்லாம் பூஷணமாக விளங்கிய தருமபுத்திரரையும் அவர் சகோ

தரரையும் பற்றித் தங்களுக் கேதாவது தெரியுமா?" என்று இறுமாப்புடன் கேட்டான். இவ்வாறு கேட்டதும் முனிவர் அவன் இறுமாப்பையறிந்து கொண்டு, "வேந்தே! அவர்களில் அர்ச்சுனனைப் பற்றி மாத்திரந் தான் எனக்குத் தெரியும். மற்றவர்களைப் பற்றி யொன்றுந் தெரியாது. அர்ச்சுனன் கைலையங்கிரிச் சாரலில் பரமசிவனிடம் பாசுபதாஸ்திரம் பெறத் தவம்புரிகின்றான்" என்று கூறி, அவ்வஸ்திரத்தின் பெருமையையும், திறத்தையும், அதனால் அவனுக்கு விளையவிருப்பதையுந் தெரிவித்து உடனே அவ்விடம் விட்டகன்றார்.

அப்பால் துரியோதனன் பெருந் துயரமுற்று உடனே தனித்த ஓரிடத்திற்குச் சென்று இதற்கென்ன செய்வதென நெடுநேரம் ஆலோசித்துப் பார்த்துப் பின், தன் மனத்தில் மூகாசுரன் என்னுமோர் அசுரனைச் சிந்தித்தான். அவன் அக்கணமே அவன் எதிர்தோன்றி நின்றான். அவனை அவன் அன்போடு துதித்து, "நண்பனே! என்னைக் கொல்லுவதற்காக ஓர் அஸ்திரம்பெறும் பொருட்டு அர்ச்சுனன் கைலமலையிலே தவம்புரிகின்றானும். நீ ஒரு காட்டுப் பன்றியுருக்கொண்டு அங்கே சென்று அவனைக் கொன்றுவிட்டு வரவேண்டும். இந்த உபகாரத்தை நான் என்றும் மறவேன்" என்றான். அவ்வசுரன் அவனுடைய வேண்டுகோட் குடன்பட்டு, எப்படிப்பட்ட வீரனும் தீரனும் அஞ்சும்படியான ஆகிருதியுடைய ஒரு பன்றி யுருக்கொண்டு சென்றான்.

அத்தியாயம்—11

அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுவது

இங்கு இவனிவ்வாறுசூழ்ச்சிசெய்தனுப்பப் பக்த பராதீனனுகிய பரமசிவன், இதனையுணர்ந்து உமாதேவி யாரை அழைத்துச் செய்தி தெரிவித்து, அவ்வம்மை யாரை வேடுவமாதாக வேடங்கொள்ளப் பணித்துத் தாம் வேடுவ வேடம் பூண்டார்; தம்மோடு வரச் சிவ கணங்களையும் வேடுவர்களாகும்படி கட்டளையிட்டு, நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கி உடன் கொண்டு, அர்ச்சுனன் தவச்சூழலுக் கருகே வந்தார். அப்பொழுது துரியோதனனுல் ஏவப்பட்ட அசுரனு கிய பன்றியும் ஆங்கேகி அவனை நெருங்கியது. அவன் அது தன்னைநோக்கி வருவதைக்கண்டு உடனே தன் வில்லாகிய காண்டீவத்தை யெடுத்து நாணேற்றி அம்பு பூட்டி எய்தான். அது பன்றியின் நெற்றியிலே பாய்ந்து பின்னுலுருவிச் சென்றது. அதே சமயத்தில் சிவ பெருமானுகிய வேடனும் பின்புறமாகப் பன்றியின் மேலோர் அம்பெய்தமையினுல் அது அதனுடைய பின் புறம் பாய்ந்து நெற்றியின் வழியாக முன்னே வந்தது. இப்படியாகவே, பன்றி உடனே கீழே விழுந்து உயிர் துறந்தது. அர்ச்சுனன் வந்த இடையூறு தீர்ந்ததென்று கருதி முன்போல் ஈசுவரத்தியானத்தி லமர்ந்தான். வேடுவராய்வந்த சிவகணங்கள் அர்ச்சுனனைச் சூழ்ந்து கொண்டு "எங்கள் எஜமானன் அடித்த பன்றியை நீ ரெவ்வாறு அடித்தீர்?" என்று கேட்டார்கள். அர்ச்சு

னன் "அப்பன்றி என் தவத்திற் கிடையூருக வந்தமையினுல் நான் அடித்தேன். அந்தப் பன்றி இங்கே யாருக்கு வேண்டும்? நீங்கள் கொண்டு போங்கள். வீணே தொந்தரவு செய்வீர்களானுல் நீங்களும் என்கை வில்லிற் கிரையாவீர்கள்" என்று மறுமொழி புகன்ருன்.

அப்பொழுது சிவபெருமாணுகிய வேடுவராஜன் அவன் முன்தோன்றி உற்றுநோக்கி, "அவர்கள் கேட்டால் நீ என்ன இவ்வாறு இறுமாப்போடு பேசுகின்ருய்? நீ யாரென்று முதலிலே சொல்" எனவே இருவருக்கும் வாக்குவாத முண்டாயிற்று. பிறகு அர்ச்சுனன் சிறிதும் அஞ்சாமல் முன்போலவே அவரை நோக்கி, "அடேவேடா! என்னை யாரென்று நீ கேட்கின்ருய்? கூறுகிறேன் கேள்" என்று தன்வரலாற்றை விவரமாய்த் தெரிவித்தான்.

அதைக் கேட்டதும் சிவபெருமான் நகைத்து, "நல்லது, தெரிந்து கொண்டேன்; தெரிந்துகொண்டேன்; உங்கள் மனைவியாகிய திரௌபதியைத் துரியோதனன் சபைக்கிழுத்துப் போனபோதே உங்களுடைய வீரம் விளங்கியது. ஆதலின், உன்னை ஒரு பொருட்டா யெண்ணி நான் உன்னேடு அமர்புரிவது தகுதியல்ல வாயினும் உன்மீது சில குற்றங்க ளிருக்கின்றன. முன் துரோணுசாரியரின் உருவத்தையே குருவா யெண்ணி வில்வித்தை பயின்றவனுகிய எங்கள் குலத்தவனெருவனைக் குருதக்ஷிணைக்காக அவன் கைவிரலை அறுத்துக் கொடுக்கும்படி நீ செய்திருக்கிருய்! அன்றியும் இன்னெரு சமயம் பிராமணர்களின் பொருட்டுச் சிலவேடர்களை நீ கொன்றிருக்கிருய்? இப்பொழுது

இறுமாப்புக் கொண்டு நிற்கிருய்; உன் வில்வல்லமை பெரிதெனக் கருதுகின்ருய் போலும்! அதனைப் பார்க்கின்றேன் சற்றுநேரத்தில்!'' என்றுகூறிப் போரிடச் சித்தமானுர்.

இதைக் கண்ட அர்ச்சுனன், "சரியான பேச்சுப் பேசினுய்! நல்ல காரணங்கள் காட்டினுய்! வா ஒருகை பார்ப்போம்'' என்று கூறி வில்லை யெடுத்து வளைத்து அதில் ஓர் அம்புபூட்டி எய்தான். சிவபெருமான் தமது கையிலிருந்த வில்லிலே ஒருபாணத்தைத் தொடுத்து அதனையெய்து அர்ச்சுனனுடைய அம்பைத் துண்டித் தெறிந்தார். அர்ச்சுனன் உடனே சில அஸ்திரங்களைத் தொடுத்துவிட அவற்றையும் சிவபெருமான் துண்டித் தெறிந்தார். இவ்வாறு செய்யவே அர்ச்சுனன் "ஓ! இவன் வில்வல்லமை பெரிது. இனி இவனுக்குத் தக்கபடி பாணங்களை யெய்தல் வேண்டும்'' என்றெண்ணித் திடங்கொண்டு இரண்டு அஸ்திரங்களைவிட்டு அவற்றைப் பரமசிவன் பொடியாக்குவதற்குள் இன்னுமிரண்டஸ்திரங்களை விடுத்தான். அவை அவருடைய மார்பிலே போய்ப் பாய்ந்தன. என்ன சொல்வதினி! எல்லாம்வல்ல இறைவனை இந்தப் பாணங்கள் என்ன செய்யும்? அவை யொருபாறையின் மேலே பாய்ந்தவைபோலாயின. ஆகையினுல் பரமசிவன் அர்ச்சுனனை நோக்கி "அடே உன் பாணங்கள் என்னை என்ன செய்யும் என்று நினைத்தாய்? ஒன்றும் செய்யா. இதோ பார் உன்னை என்ன செய்கிறேன்!'' என்று அர்ச்சுனன் துணுக்குறுமாறு பேசி இரண்டஸ்திரங்களைப் பிரயோகித்தார். அவை தாக்கவே கலங்கா நெஞ்சினனுகிய அர்ச்சுனன் கலங்கித் தன் மனத்திலிருக்கும் சிவபெரு

மானை நினைந்து, "என்னகால கதியிது! இப்படியு மிவ் வேழையைக் கைவிடலாமா? இது தகுமா உனக்கு?" என்று கூறியவாறே தவநிலை கலைந்து அப்பால்வந்து, அப்படியே தியானபரனாக நின்றான்.

அப்பொழுது பரமசிவனுக்கருகே வேடுவமாதாக நிற்கும் உமாதேவியார் சிவபெருமானைப் பார்த்து அர்ச்சுனன் மீது கிருபைபாலிக்கும்படி வேண்டினாள். பரமசிவன் உடனே இரக்கங் கொண்டவரைப் போல் அபி நயித்து அர்ச்சுனனுக்கு மனத்திட முண்டாகும்படி திருவருள் புரிந்தார். உடனே அர்ச்சுனன் விழித்துப் பார்த்து வீர அட்டகாசஞ் செய்து அநேக பாணங் களைப் பரமசிவன்மீது விட்டான். பரமசிவன், "அடே! என்ன துள்ளுகின்றாய் நீ? உன்கையில் அறுத நாணி ருக்கிறதென்கிற நெஞ்சத் திடங்கொண்டோ போலும்! இதோ காட்டுகின்றேன் பார் அதன் பெருமையை" என்றுரைத்து, அவன் கை வில்லின் நாணறும்படி சில பாணங்களை யெய்தார். நாணறவே அர்ச்சுனன் கை வில்லானது ஒரு கோல்போல் நிமிர்ந்தது. என்ன செய்வானினி அவன்! "இஃதென்ன மாயம்! இந்தக் காண்டீவத்தின் நாணை அறுத்த இவன் வேடனோ!— அன்றி இன்னும் எவனேனும் வேடுவ வேடம் பூண்டு வந்திருக்கிறானோ!—தெரியவில்லையே!" என்றெண்ணிச் சற்றுக் கலங்கியது போலிருந்து பின் அக்கணமே திடங் கொண்டு அந்தக் கோலால் பரமசிவனுடைய முடிமேற் புடைத்தான்.

சர்வலோக சரண்யனும் சர்வாந்தர்யாமியுமாகிய பரமசிவன்மீது அடி விழுந்ததும் முப்புவனங்களும் கிடுகிடென்றசைந்தன. பரமசிவன் இதனால் வெகுண்

டவர்போல் அவனை வெறித்துப் பார்த்து, "அடே வில்லற்றவனுன யல்லவா? வா, மல்யுத்தஞ் செய்வோம்" என்றுரைத்துத் தன் கரத்திலிருந்த வில்லை யெறிந்து விட்டுத் தொடை தட்டிக்கொண்டு அவனை நெருங்கினுர். அர்ச்சுனனும் உடனே மல்யுத்தத்திற்குச் சித்தமாய்ச் சிவபெருமானை எதிர்த்தான். இருவரும் எல்லோரும் அஞ்சும்படி மல்யுத்தம் செய்தனர். சிவபெருமான் இனிப் போதுமிந்த விளையாட்டென வெண்ணி அர்ச்சுனனைத் தமது காற் பெருவிரலால் எற்றினுர். அவன் ஆகாயத்தில் வெகுதூரம் போய் விட்டான். அதுகண்ட உமாதேவியார், பரமசிவனை நோக்கி, "அன்பனுக்கு யாதொரு தீங்கும் நேராமற் காப்பாற்ற வேண்டும். போதும் சோதனை" என்று தாயார்க்கு மக்கண்மீதுண்டாகும் பேரன்பைக் காட்டினுள். பகவானுடைய கருணையினுல் அர்ச்சுனன் யாதொரு தீங்குமடையாமல் பூமியில் விழுந்தான்; விழுந்த சற்று நேரத்திற்கெல்லாம் திடுக்கிட்டெழுந்து பார்த்தான். அவன்முன்னே நின்ற வேடராஜனையும் வேடமாதையும் மற்ற வேடுவர்களையும் காணும். அவர்கள் மறைந்து போயினர். ஆகவே அர்ச்சுனன் "என்ன மாயம்! என்ன விந்தையிது!" என்றெண்ணித் திகைத்து நிற்கையில், பரமகருணுநிதியாகிய ஜகதீசன் விடையின்மீது அர்ச்சுனனுக்குக் காட்சி யருளினுர்.

மகாபக்த சிரோமணியாகிய அர்ச்சுனன் அற்புதமான ஜகதீசனுடைய அக் காட்சியைக் கண்டதும் புளகாங்கிதனுய்த் தன்வசமற்றுக் கீழே விழுந்து பணிந்து எழுந்து கரங்குவித்துத் தொழுது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகநின்று அவரைத் துதித்

தான். கருணையங் கடலாகிய சிவபெருமான் விடை மீதிருந்திறங்கி அவனைத் தழுவிக்கொடுத்தார். அதனல் அர்ச்சுனன் பசி, தாகம், சோகம் முதலியன நீங்கியவனாய்ப் பரமானந்தமடைந்து கைகுவித்தபடியே நின்முன்.

சிவபெருமான் அவனைக் கருணையோடு நோக்கி, "அன்பனே! உகந்தோம் உன் தவத்திற்கு; உன் மனோதிடம் இணையற்றது" என்று சொல்லித் துரியோதனன் அசுரனைப் பன்றியாக அனுப்பிய விவர மறிவித்து "அர்ச்சுனா! இனி ஒன்றுக்கு மஞ்சாதே! உனக்கு வேண்டுவதென்ன? கேள்" என அர்ச்சுனன் வேடனாக வந்தது இறைவனென் றறிந்தானுதலின் மனம் வருந்தி "ஸ்வாமி! அறிவிலியும் சிறுவனுமாகிய நான் தங்களை வேடனென நினைத்துப் பாணங்களை யெய்தும் நீண்ட தடிகொண்டு புடைத்தும் கையினாலே குத்தியும் உதைத்தும் பலபடியாகப் பேசியும் வருத்தினேன். இந்த என் குற்றங்களைக் கருணாகர மூர்த்தியாகிய தாம் முதலில் மன்னிக்க வேண்டும்" என்று கூறிக் கண்களை இருகரங்களாலும் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதான்.

அருட்பெருஞ் சோதியாகிய சிவபெருமான் அர்ச்சுனனுடைய அன்பைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து,

அப்பா அர்ச்சுனா! நீ திட்டியவை யெல்லாம் நமக்கு மிகப்பிரியமான சாமவேதத்திற்குச் சமானமாம். நீ விடுத்த பாணங்களெல்லாம் திவ்ய புஷ்பங்கள்; உன் வில்லடியானது எமக்கு வில்வமாலையாதும்—

என்று பகர்ந்து "நீ வேண்டும் வரமென்ன? கேள்" என்றார்.

அர்ச்சுனன் உடனே "உய்ந்தேன்" என்று கூறிப் பணிந்தெழுந்து, "ஸ்வாமி! உமது திருவிளையாட்டின் பெருமையை யாரே யறியவல்லவர்? உமது திருவடி மலரைக் கண்ணாலே காணும் பாக்கியம் பெற்றவனொருவன் விரும்பத்தக்க பொருளும் இன்னொன்றுண்டோ இந்த உலகத்தில்?" என்று விநயமொழி கூறிப் பின் தான் விரும்பி வந்தபடி பாசுபதாஸ்திரம் கேட்டான்.

மங்கை பங்காளனாகிய சிவபெருமானும் உமாதேவியாரும் மனமகிழ்ந்து, அர்ச்சுனனுக்கு, ஒடியாத வில், அறாத நாண், குறையாத அம்புறை, கவசம், வச்சிர முடி, பாசுபதாஸ்திரம் இவை யாவற்றையும் கொடுத்து "அப்பனே! உனக்கு நிகரற்ற புயபலமும் தந்தோம்" என வாக்களித்து மந்திரோபதேசஞ் செய்து "அர்ச்சுனா! இந்தப் பாசுபதாஸ்திரத்தை அற்ப மனிதர்கள்மீது விடாதே! தேவர், அசுரர் முதலிய பலாட்டியர் மீது இதனை விடுவாயாக" என்றறிவித்து உடனே அந்தர்த்தானமாயினர்.

இவ்வாறு வரமளித்து அவர்களேகிய அக்கணமே இந்திரன் அங்கு வந்து, அர்ச்சுனனைத் தழுவிக்கொண்டு மிக மகிழ்ச்சியுடன் அவனை வாழ்த்தினான்; பின் அவனைத் தன் இரதத்திலேற்றி வைத்துக்கொண்டு தன் உலகத்துக்குக் கொண்டு போனான்.

அத்தியாயம்—12

நிவாதகவசரின் வதம்

சகல ஸம்பத்துக்களும் நிறைந்தது ஸ்வர்க்கலோகம். அதற்குப் புண்ணிய லோகமென்றும், பொன்னுலகமென்றும், வானுடென்றும், விண்ணுலகென்றும் பெயர். அங்கே தேவர்களே வசிப்பார்கள். ஆதலால் தேவலோகமென்றும் அதற்குப் பெயருண்டு. தேவ ராஜாவாகிய இந்திரன் என்பவனே அதற்கரசன். பூலோகத்தில் நூறு அசுவமேத யாகஞ் செய்த அரசனே தேவேந்திரனுவான். இதனுலேதான் தேவேந்திரனுக்கு மகபதி யென்கிற ஒரு பெயர் விளங்குகிறது. அர்ச்சுனன் இந்திரனுடைய அநுக்கிரகத்தினுலே அவனுடைய அம்சமாகப் பிறந்தவன். ஆகையினுல், அவனை இந்திர குமாரனென்கிருர்கள். இப்பொழுது இந்திரன் தன் மைந்தனைத் தன்னுலகுக்கு அழைத்துப் போயிருக்கிருன். இந்த உலகத்துக்கு மானிடர் இவ்வாறு மகா பராக்ரமசாலிகளாயும் புண்ய புருஷராயும் தேவாநுக்கிரகம் பெற்றவராயு மிருந்தாலன்றிப் போவதற்காகாது.

இப்படிப்பட்ட உலகத்துக்குச் சென்ற அர்ச்சுனனுடைய பெருமையை யென்னென்பது! அர்ச்சுனனுக்கு அங்கே இந்திரனுடைய கட்டளையினுல் தெய்வ புருஷனுக்கு நடக்கும் மரியாதைகளெல்லாம் நடந்தன. சர்வலோக கர்த்தாவாகிய சிவபெருமானுடைய திருவருட் செல்வம் பெற்றவனென்று அங்குமிவன் புகழ் பரவியது. பல பேசுவானேன்? இவன் உருவத்

தில் மானிடனேயல்லது மற்றெவ்விதத்திலும் அங்கு இவன் மானிடனு யிருக்கவில்லை. இந்திரன் தனக்கருகே ஆசனங் கொடுத்து இவனைப் பெருமை படுத்தி வந்தான்; இவனோடிருந்து உணவருந்துவான். இப்படி எந்த மானிடனும் இக்தவுலகத்திற் பெருமையடைந்தது கிடையாதென அவ்வுலகத்தவர் வியப்புறுமாறு அர்ச்சுனன் அங்குச் சகல போகங்களையும் அநுபவித்தான்.

இவ்வாறிருக்கையில், ஒருநாளிரவு அர்ச்சுனன் இந்திரபவனத்தில் ஒரு பூள்ளியறையில் சயனித்துக் கொண்டிருக்கையில், அவ்வறைக்கு ஊர்வசி யென்கிற தேவதாசி சென்றுள். ஊர்வசி யென்பவள் தாசியாயினும் அவளுக்குச் சிறந்த மரியாதையுண்டு. ஆகையினுல், அர்ச்சுனன் தானிருந்த அறைக்கு அந்நேரத்தில் வந்த அவளைக் கண்டதுமெழுந்து "தாயே! எங்கள் மூதாதையாகிய ஆயு என்பவர்க்கு மனைவியாயிருந்த தாம் இந்நேரத்தில் இங்குற்ற காரணமென்ன? அம்மா! என்னுலாக வேண்டியதேதேனு முண்டோ?" என்று மிகப் பணிவாய்த் தாய்க்குரிய மரியாதை கொடுத்துப் பேசினுன். சந்திரவம்சத்து அரசருள் ஒருவனுகிய ஆயு என்பவன் புண்யவசத்தினுல் முன் இந்த உலகத்திற்கு வந்து சகல போகங்களையும் அநுபவித்தான். அப்பொழுது ஊர்வசி அவனுக்கு நாயகியாயிருந்தாள். ஆதலின், அர்ச்சுனன் தாய்முறைகாட்டி அவளை வரவேற்றுன். தேவதாசிகள் எப்போதும் இளமை மாருமலே யிருப்பார்கள். அன்றி அவர்களுக்குள் உறவு முறை என்கிற வரன்முறை கிடையாதாகையால் அவள் அப்பொழுது அர்ச்சுனனை விரும்பி வந்தாள். அர்ச்சு

னன் அவள் கருத்திற்கு மாருக உறவு பாராட்டிப் பேசவே அவள் சினங்கொண்டு, "அர்ச்சுனு! உன்னை விரும்பி வந்த என்னை நீ மறுக்கின்றமையால் இன்று முதல் பேடியாகக் கடவாய்" என்று கொடிய சாபந் தந்து அவ்விடத்தை விட்டகன்ருள். அர்ச்சுனன் உடனே பேடி ரூபமடைந்தான். என்ன செய்வான் பாவம்! "அந்தோ! தேவலோகத்துக்கு வந்ததன் பயனு இது?" என்றெண்ணி வருத்தமுற்று "என்ன செய்வது? எவ்வாறு இச்சாபநிவிர்த்தி பெறுவது'? என்னும் சிந்தனையிலாழ்ந்து அங்கே யிருந்து வெளியேவர வெட்கமுற்றவனு யிருந்தான். இவனுடைய இப்படிப் பட்ட பரிதாபமான நிலைமையை மறுநாட் காலையில் அறிந்த தேவதூத ஞெருவன் இந்திரனிடமோடி யுரைத்தான். இந்திரன் பெரிய வருத்தமடைந்து உடனே அர்ச்சுனனிருந்த அறைச்குச்சென்று அங்கு ஊர்வசியை வரவழைத்து அவளுக்குத் தக்க சமாதானங் கூறி அவள் சினத்தைமாற்றி, அர்ச்சுனனுக்கு அநுக்கிரகஞ் செய்யும்படி செய்தான். அவள் அர்ச்சுனன் எப்பொழுது விரும்புகிருனே அப்பொழுது, அந்த உருவமுண்டாகவும் மற்றப்பொழுதில் இல்லாதிருக்கவும் அநுக்கிரகித்துச் சென்ருள்.

பின்னர், இந்திரன் அர்ச்சுனனைத் தன் சபைக்கு ஆடையாபரண அலங்காரத்துடனே அழைத்துப் போய் ஆங்கொரு திவ்யாசனத்தில் வீற்றிருக்கச் செய்து மகரிஷிகளுடைய சம்மதத்தின் பேரில் அவனுக்குத் தன் மகுடத்தைச் சூட்டிக் 'கிரீடி-கிரீடி-கிரீடி' என்று மூன்றுமுறை கூறி மகிழ்ந்தான். தேவர்களும் மகரிஷிகளும் அப்போது அர்ச்சுனனுக்குத்

தேவேந்திர னுக்குரிய மரியாதைகளைச் செய்து மகிழ்ந்தார்கள். அப்பால் அவனுக்குக் கிரீடியென்கிற பெயருண்டாயிற்று.

இவ்வாறு அர்ச்சுனன் பெருமை யடைந்த பிறகு ஒரு நாள் இந்திரன் அவனை நோக்கி, "அர்ச்சுன! உன்னால் நான் பெருஞ்செல்வ மடையவேண்டு மென்றிருக்கிறேன். நீ மனமகிழ்ந்து எனக்கொரு வரந் தரவேண்டும்" என, அர்ச்சுனன் பணிந்து, "என்னால் தங்களுக்குப் பெருஞ்செல்வம் வருமாயின் அதற்கு யாது தடை? ஆஞ்ஞாபிக்கலாம் செய்யவேண்டியதை" என்றான்.

தேவேந்திரன், "அர்ச்சுன! நிவாதகவசவர்கள் என்று மூன்றுகோடி அசுரர்களிருக்கிறார்கள். அவர்கள் மூவுலகத்தி லுள்ளவர்களையும் போர்முகத்தில் கதறிக் கொண்டோடும்படி செய்ய வல்லவர்கள். ஒன்றாலும் கெடாத கவசமுடையவர்கள். அந்தப் பாவிகள் என்னுடைய பகைவர்கள். அவர்கள் என்னை எட்டுணையும் பொருட்படுத்துவதில்லை. அவர்களை அடக்க உன்னையன்றி வேறெவராலும் முடியாது. ஆகையினால், நீ அவர்களை எதிர்த்து வதஞ் செய்வதாக வாக்குக் கொடுக்கவேண்டும்" என்றான்.

போரென்ற சொற் கேட்டாலே உள்ளம் பூரிக்கும் அர்ச்சுனன் இவ்வாறு இந்திரன் சொல்லக் கேட்டதும் புயங்கள் குலுங்க மகிழ்வுற்று இந்திரனை வணங்கித் "தம்து திருவருளுக்குப் பாத்திரமான எனக்குத் தாம் எதைச்செய்ய ஆணையிடினும் அக்கணமே அதனைச் சிறிதும் தடைசெய்யாமல் முடிப்பேன். எதற்கு மஞ்சேன்" என்றான். இந்திரன் மகிழ்ந்து உடனே

போர்க்குரிய இரத கஜ துரகபதாதிகளை வரவழைத்து "அர்ச்சுனா! என் கோரிக்கையை நிறைவேற்று" என, அர்ச்சுனன் "அப்படியே" என்று சிரங்குனிந்து வணங்கி, "தந்தையே! அக் கொடியவர்கள் யாண்டுள்ளார்? அவர்களை நிர்மூலமாக்குகின்றேன்" என்று சொல்லிப் போர்க்கோலம் பூண்டு நின்றான். அவ்வசுரர்கள், மேற்றிசைக் கடலுக்கருகே யிருக்கும் தோயமாபுர மென்கிற நகரத்திலிருப்பதாய்த் தேவேந்திரன் கூற, அர்ச்சுனன் தன்னோடு சித்திரசேனன் என்கிற கந்தர்வனையு மழைத்துக்கொண்டு இரதத்தின் மீதேறிச் சாரதியைப் பார்த்து, "இரதத்தை அந்நகருக்கு விரைவில் நடத்து" என்றான்.

சாரதி மிகுந்த உற்சாகத்துடன் இரதத்தை நடத்தத்தொடங்கி, எவ்வளவு துரிதத்தில் அசுரர்களின் நகரத்திற்குச் செல்லக்கூடுமோ அவ்வளவு துரிதத்தில் தேரைச் செலுத்திக் கொண்டுபோய் அந்நகரத்திற்கருகே நிறுத்தி, "இதுதான் தோயமாபுரம்; இதிலேதான் அந்தப் பாவிகளிருக்கிறார்கள். இவர்கள் மூன்று கோடிப் பேர்கள். இவர்கள் யமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பிறரெவரும் வெல்வதற்கியலாத வரங்கள் பெற்றுத் தங்கள் பகைவர்களாகிய தேவர்களைத் துரத்தி யடிக்கிறார்கள். இவர்கள் பூண்டிருக்கும் கவசத்தில் எவர்களுடைய பாணங்களும் பாயா. ஆகையால், இவர்கள் பிறருடைய பாணங்களால் நாசமடைவதில்லை. இவர்கள் மகா துஷ்டர்கள்" என இவ்வாறு அவர்களின் திறமைகளையும், வஞ்சகங்களையும் புகழ்ந்துபேசக் கேட்ட அர்ச்சுனன் நகைத்து, "நல்லது, இதோ பார்க்கின்றேன் இவர்களின்

திறத்தை'' என்று கூறிச் ''சித்திரசேனு! இந்நகரத்து அசுரர்களுக்கு நாம் போர்புரிய வந்திருக்குஞ் செய்தியைத் தெரிவி'' என்று அவனை அனுப்பிவிட்டுத் தன் கைக் காண்டீவத்தை வளைத்துத் திசைகளெட்டுஞ் செவிடுபட நாணேற்றினன். அந்த ஓசை அவ்வசுரர்களுடைய செவியிலும் பட்டது. அவர்கள் திடுக்கிட்டெழுந்து ஆரவாரித்தனர். அச்சமயம் சித்திரசேனன் அவர்கள் முன்னே சென்று, ''பூலோக அரசர்க்குள் சிறந்தவனுகிய அர்ச்சுன மகாராஜாவின் தூதன் நான். என் பெயர் சித்திரசேனன். அரசர்களையெல்லாம் வென்று எவராலும் முடித்தற்கரிய இராஜஸூய மென்கிற பெரிய வேள்வியைச் செய்து முடித்தவனும், காண்டவ வனத்தை அக்நிபகவானுக்கு உணவாகக் கொடுத்தவனும், தவமிருந்து சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெற்றவனுமாகிய அர்ச்சுனன் உங்களோடு அமர்புரிய வந்திருக்கிருன்; நீங்கள் தேவர்களுக்கு அடிக்கடி இடுக்கண் செய்வதைக் கேட்டு மிகக் கோபங் கொண்டிருக்கிருன். இந்தச் செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கவே என்னைத் தூதனுக அனுப்பினுன்'' என்று கூறினுன்.

இதைக் கேட்டதும் அவ்வசுரர்கள் கக்கடவென நகைத்து, ''ஓ! நாங்களவனை அறிவோம்! என்னே வியப்பிது ? புலிக்கூட்டத்திற் பூனைபுகுந்து போரிட்டு வெற்றி பெறுவேனென்று கூறுவது போலிருக்கிறது இவன் பேச்சு! இவனுடைய வல்லமை துரியோதனனுடைய சபையில் தெரியவில்லையா? மனைவியைச் சபைக்கு இழுத்துவந்து அவமானஞ் செய்தபோது பேடியைப் போலிருந்த இவனுக்குத் தூதன்வேறு?

வெகு நன்று! நீ போய் அவனை உடனே போருக்கழைத்துவா. மும்மூர்த்திகளாலும் வெல்ல முடியாத எங்கள் முன் இந்த நரன் எம்மாத்திரம்? வெகுவிந்தை! அழைத்துவா போருக்கு இக்கணமே'' என்றார்கள்.

சித்திரசேனன் உடனே திரும்பிவந்து அர்ச்சுனனுக்கு அசுரர்களின் வீரப்பேச்சைக் கூறினான். அர்ச்சுனன், ''நல்லது, ஒருகை பார்ப்போமின்று'' என்று கூறித் தேரைப் போர்க்களத்திற்குச் செலுத்தும்படி சாரதிக்குக் கட்டளையிடச் சாரதி தேரிற் கட்டியிருக்கும் மணிகளின் ஓசை விண்ணுலகன்றி மண்ணுலகும் பரவ வெகு விரைவிற் செலுத்திச் சிறிது நேரத்தில் போர்க்களத்துக்குக் கொண்டுபோய் நிறுத்தினான். அவ்விடத்திற்கு அசுரர்களும் போர்க்கோலத்துடன் வந்து காத்திருந்தமையால் உடனே இருவருக்கும் போர் மூண்டது. அர்ச்சுனன் காண்டீவத்தில் அம்புகளைத் தொடுத்து, அசுரர்கள் ''அம்ம! அம்ம! என்ன இது இவ்வாறு புறப்படுகிறது'' என்று வியப்படையும்படி மளமளவென்று ஒன்றன்பின் ஒன்றாகப் பாணத்தை விட்டான். அவர்கள் அவற்றைத் துண்டித்துப் பொடியாக்கும்படியாய் அளவற்ற பாணங்களைப் பொழிந்தார்கள். அந்தோ! ஒருவனெங்கே? மூன்று கோடிப் பேர்களெங்கே? இருப்பினும் அர்ச்சுனனும் அவர்களைக் கொல்லும் வல்லமை வாய்ந்த அஸ்திரங்களைப் பிரயோகித்தான். அவற்றில் கோடிக்கணக்காய் அசுரர்கள் மடிந்தார்கள். ஆனால் அவர்கள் மடிந்த அக்கணமே உயிர்பெற்றெழுந்து மறுபடியும் போர் புரியவந்து கூடிக் கொண்டார்கள். இவ்வாறு பலமுறை நடந்தது. அர்ச்சுனன் பார்த்து, இவ்வாறு உயிர்பெறும் இவர்

களை ஒழிப்பதெப்படி யென்று சற்றுத் தயங்கி நின்று, “சாரதி! இப்பொழுது உபாயமொன்று செய்யவேண்டியதா யிருக்கின்றது. இன்றேல் இவர்களை மாய்ப்ப தரிது. நீ இரதத்தை முன்னுக்கோட்டுவது போல் நடத்திப் பின்னுக்கு நடத்தவேண்டும். அப்பொழுது ஒரு வேலை செய்து இவர்களை அதமாக்குகின்றேன்” என்றான். சாரதி அவ்வாறே இரதத்தைச் செலுத்த அதைக்கண்ட அவுணர்கள், “இதோ அர்ச்சுனன் போர்முனையில் நிற்கமாட்டாமல் பின்னடைகிறான் பாருங்கள்” என்று கூவினார்கள். அச்சமயம் அர்ச்சுனன் ஈசனைத் தியானித்து மந்திர முச்சரித்துப் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அது ஒரு நொடியில் போர்க்களத்தில் அசுர ரொருவரில்லாமற் கொன்று அர்ச்சுனனிடம் வந்து சேர்ந்தது. பாசுபதாஸ்திரத்தின் மகிமையைக் கண்டு அர்ச்சுனன் வியந்து சிவபெருமானைச் சிந்தித்து வணங்கி நாற்புறமும் பார்த்தான். போர்க்களத்தில் தன் ஒருவனுடைய இரதமே நிற்கக் கண்டு களிப்புறுகையில், அசுர ஸ்திரீகளெல்லோரும் கூட்டங் கூட்டமாக வந்து தம் தம் கணவனைத் தேடியடைந்து கட்டித் தழுவி அழுது அங்கங்கே உயிர்விடும் கோரமான காட்சியையுங் கண்டான்; உடனே அர்ச்சுனன் “சாரதி! இன்னும் எங்கே பகைவரிருக்கின்றனரோ அங்கே செலுத்து இரதத்தை” என்று கட்டளையிட்டான்.

அத்தியாயம்—13

காலகேயரின் வதம்

சாரதி அர்ச்சுனன் ஆணைப்படி தேரைச் செலுத்திக்கொண்டு போனான். வெகுதூரம் போனபின்பு பொன்மயமான நகர மொன்றை அர்ச்சுனன் கண்டான். கண்டதும் "சாரதி! இந்நகரம் யாருடையது?" எனச் சாரதி உடனே இரதத்தை நிறுத்தி அர்ச்சுனனைப் பார்த்து, "இது காலகேயரென்னும் அசுரருடையது. இவர்கள் அறுபதினாயிரவர்கள்; திதி, அதிதி என்னும் இரண்டு மாதர்களில் அதிதியின் பெண்ணாகிய காளகை என்பவள் புலோமன் என்கிற அசுரனை மணந்து இவர்களைப் பெற்றாள். காளகையும் புலோமனும் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவராலும் மற்றை மூவராலும் பின்னும் யாவராலும் இடையூறெய்தாவண்ணம் பிரமனை நோக்கிக் கடுந்தவமிருந்து அநேக தெய்வஅஸ்திரங்களையும், நினைத்த இடங்களுக்கு ஆகாயவிமானம்போற் செல்லத்தக்க இந்த நகரத்தையும் பெற்று இதிற் குடியேறினார்கள். காளகையின் பிள்ளைகளாகையினால் இவர்களுக்குக் காலகேயரென்ற பெயரேற்பட்டது. காலகேயராகிய இவ்வசுரர்கள் தங்கள் தாய் தந்தையர் தேடிவைத்திருப்பது போதாதென்று கருதி இவர்களும் பிரமனை நோக்கித் தவமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத்தக்க அநேகாயிரம் அஸ்திரங்களைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் செய்யும் கொடுமை சொல்லுந் தரமல்ல. இவர்

கள் தங்கள் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் யாவரும் நடுங்கும்படி அரசு செலுத்துகின்றனர். இவர்களுடைய உடல் பொன்னிறமாயிருக்கும். எப்பொழுதும் இந்தப் பாவிகள் தேவர்களுக்கும் பூசுரர்க்கும் தீங்கு செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்றான்.

அர்ச்சுனன் கேட்டு "அப்படியா! இவர்களை விடுவது கூடாது'' என்று கூறித் தன் காண்டீவத்தை நாணேற்றி டங்கார சப்தம் செய்து அசுரர்களுக்குத் தன் வரவு தெரிவித்தான். அந்த ஓசை கேட்டதும் அவ்வசுரர்கள் உலக முழுதும் அஞ்சுமாறு பெருங் கூச்சலிட்டுக் கொண்டு அர்ச்சுனனை வளைத்துக்கொண்டார்கள். அர்ச்சுனன் அவர்களைப் பார்த்து, "இதோ வந்தேன்!—வந்தேன்!'' என்று கூறி வில்லிற் பாணங்களைப் பூட்டி ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம் என்னுங் கணக்கிலே அடுத்தடுத்துப் பிரயோகித்தான். அவர்கள் "அடபயலே! உன்னை இதோ இந்தக் கணமே பிடித்துக் கட்டிச் சித்திரவதை செய்கிறோம் பார்'' என்று கூறி அவன் விட்ட பாணங்களை யெல்லாம் தங்கள் பாணங்களினாலே துண்டித்துக் கொண்டு அவனை நெருங்கினார்கள். அப்பொழுது அர்ச்சுனன் சினங்கொண்டு தன் வில்லில் அநேக தெய்வ அஸ்திரங்களைப் பூட்டி எய்தான். அவைகள் அந்தரத்திலெழும்பி கோடை யிடிகளைப் போல் ஆர்ப்பரித்துக் கொண்டு பற்பல ஆயுதங்களை மழையைப் போற் சொரிந்து அவுணர்களையும் அவர்கள் பரிவாரங்களையும் அதமாக்கின. அப்பொழுது அவ்வவுணர்களிற் பெரும்பான்மையர் அந்தரத்திலெழும்பி மறைந்து நின்று அர்ச்சுனன்மீது மாயா சம்பந்தமான அநேக

பாணங்களைப் பொழிந்தார்கள். அர்ச்சுனன், "சை, இனி இவர்களை மிஞ்ச விடுவது கூடாது" என்றெண்ணிப் பாசுபதாஸ்திரத்தைப் பூசித்துப் பிரயோகித்தான். அது இந்திரனுடைய வச்சிராயுதத்திற் கொப்பாகிய அநேகாயிரம் ஆயுதங்களாகி வானெங்கும் பரவி அவுணர்களை யெல்லாம் வளைத்துக்கொண்டு கண்டதுண்டமாக்கி எல்லோரையும் புவியில் வீழ்த்தி ஒழித்துக் கூற்றுவனுக் கிரையாக்கி மீண்டும் அர்ச்சுனனுடைய அம்புறையில் வந்து சேர்ந்தது.

இவ்வாறு காலகேயருடைய வதம் நிறைவேறியது கண்ட தேவர்கள் அர்ச்சுனனைப் புகழ்ந்து அவன் மீது மலர்மாரி தூவி "இந்த வீரனுக்கு விஜயன் என்னும் திருப்பெயரிட்டது தகும்-தகும்" என்று கூறி மகிழ்ந்து குதூகலமடைந்து "இடர் நீக்க வந்த ஏந்தலே வாழி! குறை யொழிக்கவந்த கோமானே வாழி! சிதைவில்லா வாழ்வளித்த தீரனே வாழி!" என்று வாழ்த்தினர்.

அப்பால் அர்ச்சுனன் கட்டளைப்படி சாரதி இரதத்தை இந்திர லோகத்திற்குச் செலுத்தினன். அர்ச்சுனன் இவ்வாறு ஜயகோலத்தோடு வருவது இதற்குள் இந்திரனுக்கெட்டியது. இந்திரன் பரமானந்தமடைந்து அநேகாயிரம் தேவர்களுடனும் முனிவர்கள் பலருடனும் புறப்பட்டு அர்ச்சுனனை எதிர்கொண்டு வரவேற்கச் சென்றான். இந்திரன் தன்னை நெருங்கியதும் அர்ச்சுனன் தன் இரதத்தை விட்டிறங்கி அவனை வணங்கினன். இந்திரன் அவனைப் பெரு மகிழ்ச்சியுடன் கட்டியணைத்துப் பல ஆசிகள் கூறி உபசரித்துத் தன் இரதத்திலேற்றிக் கொண்டு பெரிய கோலாசலத்துடன் நகரத்திற்குட் பிரவேசித்து வலமாகப் போந்

தான். எல்லோரும் அர்ச்சுனனை, "இவ்வரசிளங்குமரன் நீடூழி வாழ்க ! ஒப்புயர்வற்ற இவன் புயபலம் குன்று தோங்குக!" எனவாழ்த்தி, "இவன் இந்திரனோடு ஏகா சனத்தில் வீற்றிருக்கத்தக்கவனே!" என்று புகழ்ந்தனர்.

இத்தகைய மரியாதையுடன் அர்ச்சுனன் இந்திர னோடு இந்திர பவனத்திற்குள் பிரவேசித்துச் சுகமா யிருந்தான்.

பின்னர் ஒரு நாள் அர்ச்சுனன், தன் சகோதரர் களிடம் போக அநுமதி தரவேண்டுமென்று இந்திர னைக் கேட்டான். இந்திரன் "அப்பா, நீ எனக்குச் செய்த உபகாரம் பெரிது. ஆதலினால், நான் உன்னை இவ்வுலகத்தை விட்டு அனுப்பாமலே சகல சம்பத்தோ டும் வைத்திருக்கவேண்டும். ஆயினும் அதற்கு இது சமயமல்ல. பின்னொரு சமயம் உனக்குப் பயன்றரத் தக்க ஒரு வித்தையிருக்கிறது. அதனை நீ பயிலவேண் டும். அஃது ஒருநா ளிரண்டு நாளிலே பயிலக் கூடிய தல்ல. சில நாளிங்கிருந்தாகவேண்டும்—கேள். நீங்கள் வனவாசத்தை முடித்தபிறகு ஒருவருஷம் அஞ்ஞாத வாசஞ் செய்ய வேண்டியவர்களல்லவா? அப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் வேறுருவங் கொள்ளவேண்டிய தாயிருக்கும். நீ, உனக்கு ஊர்வசியின் சாபத்தாலேற் பட்ட பேடி ரூபம் கொள்வாய். ரூபங் கொண்டால் மாத்திரம் போதுமா? நடிப்பும் அதற்கேற்றபடி இருக்க வேண்டுமல்லவா ? ஆதலின் உனக்குப் பரத சாஸ்திரங் கற்றுக்கொடுக்க விரும்புகின்றேன். நாரதர் பரத சாஸ் திரத்தில் வல்லவர். அவரிடந்தான் நீ பயிலவேண்டும். அது கற்றுக்கொள்ளுகிறவரையில் நீ இங்கிருக்கவேண் டியவனாகிறபடியால் உன்னுடைய சகோதாருக்கு உன்

க்ஷேமந் தெரிவித்துவர உரோமசன்மரென்கிற முனிவரை யனுப்புகின்றேன்" என்று சொன்னான். அர்ச்சுனன் மிக மகிழ்ச்சியுடனும் வந்தனத்துடனும் சம்மதித்தான். இந்திரன் உடனே உரோமசன்மர் என்பவரைத் தருமபுத்திரரிடம் போய் வரும்படி அனுப்பிவிட்டு அர்ச்சுனனை நாரத மகரிஷியிடம் ஒப்புவித்தான்.

அத்தியாயம்—14

தீர்த்தயாத்திரை

உரோமசன்மர் என்கிற மகரிஷி தருமபுத்திரரிடம் போய், அர்ச்சுனன் தவம் புரிந்து பாசுபதம் பெற்றதையும், அவன் நிவாத கவசர்களையும் காலகேயர்களையும் வதஞ் செய்ததையும் விஸ்தாரமாக அவர் மனந்தேறுதலடையும்படி தெரிவித்து, "அர்ச்சுனன் இப்பொழுது இந்திரனிடமிருந்து பரதசாஸ்திரம் கற்றுக்கொண்டு சுகமாயிருக்கின்றான்" என்று கூறினார். தருமபுத்திரர் இவ்வரலாறு கேட்டும் அர்ச்சுனனுடைய பிரிவாற்றாமைக்கு வருந்தினர். உரோமசன்மர் அவன் வரும்வரையில் தாம் அவரிடமேயிருந்து வருவதாகக் கூறி அவரைச் சமாதானப் படுத்தினர்.

இப்படியிருந்து வருகையில் ஒரு நாள் தருமபுத்திரர் முகவாட்டமுற்று ஒருவிதமாயிருந்தார். இதனையறிந்த உரோமசன்மர், "உமது முகம் சந்திரனைக்கண்ட தாமரைமலர் போல் வாடியிருப்பதேன்? என்ன கவலை?" என்று கேட்டார். தருமபுத்திரர், "சுவாமி, நான் செய்த செய்கையை யெண்ணி வருந்துகிறேன்; விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுந்தவனானேன்.

ஸ்வாமி! சூது கொடிதெனத் தெரிந்திருந்தும் நான் அதற்கிணங்கி ஆடி எல்லாவற்றையுந் தோற்றேனல்லவா? அதை நினைத்தால் என் மனம் என்னையே எரிக்கிறது" என்றார்.

உரோமசன்மர், "நீர் தவறு செய்து விட்டதாயெண்ணி வருந்தவேண்டாம். சூதிலே வாழ்வை இழப்பது உலகத்தில் சகஜம். முன் சந்திர குல திலகனான நளச்சக்கிரவர்த்தி சூதாடி நாடு நகரமிழந்தானென்பதைக் கேட்டதில்லையா" என்று கூறினர். அவர், நளனுடைய சரித்திரத்தை விஸ்தாரமாய்க் கேட்க விரும்பினர். அவர் விரும்பியபடி அச்சரித்திரத்தைக் கூறி, "தருமநந்தனரே, அந்த நளனடைந்த கஷ்டத்தினுமா உமது கஷ்டம் பெரிது? பெரிதல்ல. காலகதியை யாவராலும் தடுத்தற்காகாதாகையினால் விசனிப்பது வீண்" என்று தேறுதல் கூறினர்.

அதைக்கேட்டு மனத் திருப்தியடைந்த தருமர் அவரைப் பணிந்தார். மற்றவர்களும் அவரை வணங்கி ஆசிர்வாதம் பெற்றார்கள்.

அவ்வாறிருக்கையில் ஒருநாள், அவர்களிடம் நாரத முனிவர் வந்தார். அவரைக் கண்டதும் தரும புத்திரர் வந்தன வழிபாடு செய்து வரவேற்று வீற்றிருக்க உபசரித்து, "ஸ்வாமி! இங்கே தமது தரிசனம் கிடைக்கப்பெற்றது எங்கள் பாக்கியமே யாகும். வாடும் பயிர்களுக்கு நல்ல மழை போலாயிற்று எங்கட்குத் தமது தரிசனம். ஸ்வாமி! எங்களுக்குத் தீர்த்த மகிமைகளையும், அதனாலுண்டாகும் பயன்களையும், உணர்த்தி யருள வேண்டும். தங்களிடம் இதைப் பற்றிக் கேட்க அவாவுடையவனாயிருந்தேன். நல்ல தருணத்திற்கு வந்து

சேர்ந்தீர்கள்"—என்றார். நாரதர், சந்தோஷம், நல்ல கேள்வி இது. கூறுகிறேன் கேள்—

உலகத்தில் எழுவகைப் பிறவிகளுண்டு. அவற்றில் ஆறறிவினையுடைய மக்கட் பிறவியே சிறந்தது. மக்கட் பிறப்பில் கூன் குருடு செவிடு முடம் என்பனவில்லாமற் பிறந்து, கல்வி கேள்விகளிலே தேர்ந்து, நற்குண நற் செய்கைகளுடன் விளங்கிச் செல்வப் பொருளிற்சிறந்து, அறநெறி தவறாதிருப்பவன் சிறந்தவனாவான். இவ் வாறே யாவரும் வாழ்வெய்துவது அருமையாதலினாலே குறையுடையவர்களு முண்டு. அவர்களுக்குற்ற குறை நீக்குவன மூன்றுண்டு. அவை மூர்த்தி, தலம், தீர்த் தம் என்பனவாம். ஐம்புலன்களையும் சிதற விடாமல் நல்ல வழியிலே செலுத்தி இல்லற தருமம் தவறாமல் நடந்து சுக துக்கங்களைச் சமமாகப் பாராட்டி உண்மை கடைப்பிடித்துக் கடவுளிடத்தில் கருத்தை நிறுத்துகிற வனே உலகத்தில் சிறப்படைவான். இப்படிப்பட்ட தூய ஒழுக்கங்களிலே தவறுகிறவன் தன் பாவந்தீரத் தானதருமங்களைச் செய்து தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து மூர்த்திகளைத் தரிசித்து ஸ்தலங்களில் வசித்து வருவானானால் அந்தத் தோஷம் நீங்கி அவன் சுகம் பெறுவான். தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலங்களைப் பொருட் படுத்தாமலிருப்பவனே வறுமைக்குள்ளாய் நலங்கெட்டு இகபர சுகங்களை இழப்பான். ஒரு தீர்த்த ஸ்நானமானது அநேக யாகபலன்களையும் கொடுக்கும்.

பிரபஞ்சத்தின்கண் அளவற்ற தீர்த்தங்களுண்டு. அவற்றையெல்லாஞ் சொல்வது அசாத்தியம். புலஸ்தி யர் மூன்று கோடி தீர்த்தமுண்டென்று ஒரு சமயம் கூறியிருக்கிறார். தீர்த்தாடனஞ் செய்பவர் சாந்தி,

விசாரம், சந்தோஷம், சாது சங்கம் என்னும் நான்கையு மடைந்து மகத்துக்களாவார்கள். பல சொல்வானேன். மண்கலந்து கலங்கிய நீரைத் தேத்தாங்கொட்டை தெளியச் செய்வது போல், தீர்த்தாடனம் சுத்த மூடரையும் அறிவுடையவராக்கும்'' என்று கூறினர். தருமபுத்திரர் முதல் எல்லோருமிதைக் கேட்டு மகிழ்வுற்று நாரதரைப் பணிந்து, "இன்று என்றுமடையாத பெறும் பயன் பெற்றோம்'' என்று வணங்க, நாரதர் அவர்களெல்லோரையும் ஆசீர்வதித்து விடை கொண்டு சென்றார்.

அப்பால் தருமபுத்திரர் தீர்த்த யாத்திரை போய் வர விரும்பினர். உரோமசன்மர், "அவ்வாறே செய்வோம். யாத்திரை செய்துகொண்டு நாம் கந்தமாதனம் போவோம். அதற்குள் அங்கு அர்ச்சுனன் வந்து சேருவான்'' என, உடனே தருமர் தமது குருவை முன்னிட்டுக்கொண்டு எல்லோருடனும் யாத்திரை புறப்பட்டார்.

எல்லோரும் புறப்பட்டுப் போகையில் வழியில் ஓரிடத்தில் ஒரு சோலை தெரிந்தது. "இதோ இங்கே தெரிகிறதே இச்சோலை யாருடையது? இதன் தோற்றம் மனோகரமாயிருக்கிறது'' என்று தருமபுத்திரர் உரோமன்சன்மரைக் கேட்டார். உரோமசன்மர், "இச்சோலையில் முன் அகஸ்தியர் வசித்து வந்தனர். அதனால் இது மகிமை பெற்றது''எனத், தருமபுத்திரர், "அகஸ்தியர் இங்கு வசித்த வரலாறு கேட்க விரும்புகிறேன்'' என்றார். உரோமசன்மர், "அகஸ்தியர் பிரமசரியாசிரமத்திலிருந்து தவம்புரிந்து கொண்டிருக்கையில் ஒரு வனத்தில் ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தில் சிலர் தலை

கீழாக வெள்வாலைப் போல் தொங்கிக் கொண்டிருக்கக் கண்டார். கண்டதும் இப்படியுமொரு தவ முண்டோ என்றெண்ணி அவர்களை விசாரிக்கையில் அவர்கள், "அப்பனே! இது தவமல்ல; இது எங்களுக்கு எமதர்ம ராஜாவால் ஏற்பட்ட தண்டனை!" என்றனர். அகஸ்தியர் "இப்படிப்பட்ட தண்டனை உங்கட்குண்டாவானேன்?" என்று கேட்க, அவர்கள், 'எங்கள் குலத்தில் அகஸ்தியன் என்றொருவன் பிறந்திருக்கிறுனும். அவன் இல்லறநெறியை மேற்கொள்ளாமல் பிரமசரியாகவே இருக்கின்றமையால் எங்கள் சந்ததி விளங்காதொழிந்தது. அந்தக் குற்றத்திற்காகத் தென்றிசைக் கடவுள் எங்களுக்கு இத்தண்டனை விதித்திருக்கிறூர்' என, இதைக் கேட்டதும் அகஸ்தியர் பயந்து அவர்களை வணங்கி, "நான்தான் அகஸ்தியனென்பவன்! இனி உங்களுக்கு இந்த அவஸ்தை வேண்டாம். நான் விரைவில் இல்லற மேற்கொண்டு சந்ததி விளங்க வழி தேடுகிறேன்" என்று கூறி அவர்களிடம் விடைகொண்டு நாட்டகம் போய் விதர்ப்பதேசத் தரசன் குமாரத்தி லோபா முத்திரை என்பவளை மணந்து கொண்டு இந்த வனத்திற்கு வந்து இல்லறம் நடத்தி வந்தார். அவருக்குத் திரதிசீ என்றொரு புதல்வன் பிறந்தான். அவனுல் பிதிர்க்களெல்லோரும் நற்கதியடைந்தார்கள்"—என்று கூறினுர்.

இதைக்கேட்டதும் தருமபுத்திரர், அகஸ்தியருடைய மகிமையைப் பின்னுங் கேட்க விரும்பினுர். உரோமசன்மர், "அவரது மகிமை பெரிது! கேட்கத் தக்கது. அவர் ஒரு சமயம் தமது மனைவியைத் திருப்தி செய்விப்பதன் பொருட்டுப் பொருளுக்காக இரண்டு

அரசனிடம் போனார். அவர் விரும்பிக்கேட்ட பொருள் அவ்வரசரிட மில்லாமையினால் அவர் இல்வலனென்னும் அசுரனிடம் சென்றார். அவன் அவரை வஞ்சனையில் கொல்லக் கருதித் தன் தம்பி வாதாபி என்பவனை ஓர் ஆடாக்கி அந்த ஆட்டைக் கறிசமைத்து அவருக் குண விட்டான். அகஸ்தியர் அவ்வுணவை யுண்டதும் வாதாபி அவர் வயிற்றிலிருந்து வெளிக்கிளம்பி அவரைக் கொல் லப்பார்த்தான். இந்த வஞ்சகத்தை யுணர்ந்த முனிவர் "வாதாபி ஜீரணோபவா!" என்று கூறி அவனை ஜீரணஞ் செய்துகொண்டார். இதைக் கண்ட அவனுடைய அண் ணனாகிய இல்வலன் தனக்கும் அக்கதி நேரிடுமோவென அஞ்சி அகஸ்தியரைச் சரணமடைந்தான். அகஸ்தியர், தமக்கு வேண்டிய பொருளை அவனிடமிருந்து பெற்றுக் கொண்டு அவனை உயிர் தப்பும்படி விட்டார்.

அப்பால் ஒரு சமயம், அகஸ்தியர், இந்திரனுடைய வேண்டுகோளின்படி கடலைத் தமது அங்கையில் வர வழைத்துக் குடித்து அதில் ஒளிந்துகொண்டிருந்த அவ னுடைய பகைவனாகிய விருத்திராசுரனை வெளிப்படுத் தினார். இந்திரன் அவனைக் கொன்று தன் பகையை முடித்துக்கொண்டான். பிறகு அந்தக் கடல் சகர சக்ர வர்த்தியின் குமாரர்களாலே தோண்டப்பட்டது " என்று கூறினார்.

தருமபுத்திரர் அதன் வரலாறு கேட்கவே, உரோ மசன்மர், "சகர சக்ரவர்த்திக்கு இரண்டு மனைவிகள். மூத்தவளுக்கு ஒரு புத்திரனும் இளையவளுக்கு அறு பதினாயிரம் புத்திரர்களும் பிறந்தனர். இவர்களுள் அறு பதினாயிரம்பேர்களும் மிகவும்துன்மார்க்கர்களாய்த் திரிந் தார்கள்; தேவர்களுக் கிடுக்கண் செய்துவந்தார்கள். ஆகை

யினல் அவர்கள்மீதுஇந்திரன் பகைகொண்டான். சகரன் ஒரு சமயம் அசுவமேத யாகஞ்செய்யத் தொடங்கிப் பூப் பிரதட்சணத்திற்கு ஓர் அசுவத்தை அனுப்பினன்.இந்திரன் அதனைப் பாதளத்தில் தவஞ் செய்துவந்த கபில முனிவரிடம் போகும்படி செய்துவிட்டான். சகரர்கள் எல்லோரும் அதைக் கண்டுபிடித்துக் கொண்டுவரும் பொருட்டுப் பாதாள பரியந்தம் பூமியை வெட்டி அங்கிருந்த கபில முனிவரை எதிர்த்தார்கள். அவர் சினங் கொண்டு அவர்க ளெல்லோரையும் நோக்கி நீறுக்கிவிட்டார். இதில் சகரனுடைய மூத்தமனைவியின் பிள்ளையாகிய குணவானு மகப்பட்டு நீறுனன்.

புதல்வர்கள் அவ்வாறுன செய்தி கேட்ட சகரன் பாதாளம் போய்க் கபிலமுனிவரை வணங்கிக் கேட்டு அசுவத்தைப் பெற்றுக்கொண்டுவந்து யாகத்தைமுடித்தான். அவனுடைய பேரன்மகன் திலீபனென்றொருவனிருந்தான். அவனே சகரனுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தான். அவனுக்குப் பகீரதன் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அவன் கபிலரால் நீறுன தன் பிதிர்க்களைக் கரையேற்ற எண்ணி அருந்தவம் புரிந்து கங்கையை வரவழைத்து அவர்கள் நீறுன இடத்தில் அதைப் பெருகும்படி செய்தான். அதனுல் அவர்களெல்லோரும் பாபரகிதர்களாகிப் புண்ய உலகமடைந்தனர். சகரர் தோண்டியபடியால் சமுத்திரத்திற்குச் சாகர மென்கிற பெயரேற்பட்டது. பகீரதன் பூமிக்கு வரவழைத்தமையினுல் கங்கைக்குப் பாகீரதி யென்கிற பெயர் ஏற்பட்டது'' என்று கூறினர்.

தருமபுத்திரர் இச் சரிதங் கேட்டு மகிழ்ந்து அப்பால் அந்த அகஸ்திய வனத்திலிருந்து புறப்பட்டுச் சென்று கவுசிக நதியை அடைந்தார். அங்கே எல்லோ

ரும் ஸ்நானஞ்செய்து கந்தமூல பலம் புசித்தனர். அங்கு ஓர் ஆசிரம மிருக்கக்கண்டு அது யாருடைய தென்று விசாரித்தார். உரோமசன்மர், "இது கலைக்கோட்டு மகா முனிவருடையது. இவர் சரித்திரம் விஸ்தாரமானது. இவர் மான்வயிற்றிலிருந்து தலையிலொரு கொம்புடன் பிறந்தவர்; தவத்திற் சிறந்தவர். வெகுகாலந் தவத்தி லிருந்துவந்தார். இவர்க்குச்சிறிதும் உலகவிஷயமே தெரியாது. அக்காலத்தில் லோமபாதன் என்றொரு வேந்த னிருந்தான். அவனுக்கு நேர்ந்த ஒரு பெரியவருடைய சாபத்தினால் அவனுடைய இராஜ்யத்தில் மழையற்றுப் போய் விளைவு குன்றி எல்லோரும் பஞ்சத்தினால் வருந்தினர். அப்பால் அந்த அரசன் அதற்கு யாது செய் வதெனத் தன் குலகுருவினிடம் யோசிக்கையில் அவர், "அப்பனே! கலைக்கோட்டு முனிவர் என்றொரு தபோத னர் இருக்கிறார். அவர் இந்நாட்டை வந்து மிதிப்பாரா னால் மழை பெய்யும்" என்று கூறி அவரிருக்குமிடமுந் தெரிவித்தார். அரசன் குருவை வணங்கி "நல்லது அப்படி யே செய்கிறேன்" என்று உடனே அவரை இந்நாட் டிற்கு அழைத்து வருபவர்க்கு ஏராளமான பொருள் கொடுக்கிறே னென்று பறையறை வித்தான். அதைக் கேட்ட இரண்டு கணிகைமாதர் தாங்கள்போய்அழைத்து வருவதாக முன்வந்து அரசனுடைய அநுமதி பெற்றுக் காடுகாடாகத்தேடிக்கொண்டுஅம்முனிவரிருக்கும் ஆசிர மத்திற் கருகேபோய் ஒரு தவச்சாலை யேற்படுத்திக் கொண்டு அங்குத் தபோதனர்போல் சில காலமிருந்து வந்தனர். அப்போது அவர்கள் அம்முனிவரிடம் அடிக் கடி போய்வருவதுண்டு. ஒரு நாள் அவரைத் தங்க ளாசிரமத்திற் கழைத்து வந்து நாட்டுக் காய்கனிகளை

யுண்பித்தார்கள். முனிவர் அவற்றை யுண்டதும், ' இவை யெங்கே இருக்கின்றன ?' என்று மிக ஆவலோடு வினவ, அதைக்கேட்ட கணிகைமாதர் இதுதான் இவரை அழைத்தேகத் தருணமென் றறிந்து, 'ஸ்வாமி ! வாருங்கள்; இக்கனிக ளிருக்குமிடங் காட்டுகின்றோம்' என்று கூறி, மெதுவா யழைத்துக்கொண்டு லோமபாதனுடைய நகரம்வந்து, அவனிடம் அவரை ஒப்புவித்துப் பணம் பெற்றுக் கொண்டு போய்விட்டனர்.

அந்தப் பெரியவர் அந்நகரத்தில் கால் வைத்ததும் மழை அபரிமிதமாகப் பொழிந்தது. அரசன் அந்தத் தபோதனரைத் தெய்வமாகக் கருதி உபசரித்துத் தன் புத்திரியை அவருக்கு மணஞ்செய்து கொடுத்து, அவரை வரவழைக்கத் தான் கணிகையரை அனுப்பியதைக்கூறி, 'அவர்கள் பொய்த் தவவேடம் பூண்டதற்காக அவர்களை மன்னிக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டு, அவரை அவருடைய ஆசிரமத்திற்கு அனுப்பி, அவருக்கு அங்குச் சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்துப் பெரியார் மகிமையுணர்ந்து அன்று முதல் பெரியார் துணையையே பெருந்தனமாகக் கருதி வாழ்ந்து வந்தான்''—என்று கூறினர்.

இதைக் கேட்ட தருமபுத்திரர் மகிழ்ச்சி யடைந்து "பெரியோரே தெய்வம் ; பெரியோரின் சேவையே தெய்வ சேவை" என்று கூறி, அங்கிருந்து எல்லோருடனும் புறப்பட்டுக் கொஞ்சதூரம் போனர். அங்கே ஒரு திவ்ய வனமிருந்தது. அதைக் கண்டு, "இது யாருடையது?" என்று கேட்டார். உரோமசன்மர், "இது பரசுராமருடைய ஆசிரமம். நாமிங்குத் தங்குவோம். அவர் தரிசனம் கிடைக்கும். அது நமக்குப் பெரும்

பாக்கியமாகும். வேந்தே! இவருடைய சரித்திரமும் நீர் கேட்க வேண்டும்.—

இவர் ஜமதக்நி யென்னும் முனிவரின் புதல்வர். இவருடன் பிறந்தவர்கள் நான்கு பேர்கள். இவர்கள் முனிவருடைய ஆசிரமத்திலிருந்து வருகையில், இவர்களன்னை ஆற்றுக்கு ஜலந்திரட்டப் போய் வெகு நேரம் வரையில் வரவில்லை. இவர் தந்தை அதனால் கோபங்கொண்டு தம் மனைவி வந்ததும் புதல்வர்களை அழைத்து 'இவளை இக்கணமே சிறிதுந் தாழாமல் உங்களில் என்னிடத்தில் அன்புடையவன் எவனேனும் முன் வந்து வெட்டவேண்டும்' என்றார். பரசுராமர் உடனே முன் வந்து தாயென்று கவனியாமல் தந்தையின் கட்டளையை நிறைவேற்றித் தந்தையை மகிழ்வித்து அவர்முன் சிரங்குனிந்து நின்றார். அவரைக் கண்டு மகிழ்ந்த ஜமதக்நி முனிவர் 'அப்பா! உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டார். பரசுராமர் தம்முடைய அன்னையைப் பிழைப்பிக்க வேண்டுமென்று வரங் கேட்டார். முனிவர் அவ்வாறே வரந் தந்து அவருடைய அன்னையைப் பிழைப்பித்தார். அன்னை யெழுந்ததும், பரசுராமர் அவளுடைய திருவடியில் விழுந்து பணிந்து தம்மை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டு அவளுடைய ஆசீர்வாதமும்பெற்று, 'தந்தையின் கட்டளையை நிறைவேற்றினன் பரசுராமன்' என்னும் பெரும்புகழ் பெற்றார். மற்றையர் தந்தையின் கடுமையான சாபத்திற்காளாயினர்.

அப்பால் ஒருநாள் பரசுராமர் தனியே வெளியே சென்றிருக்கையில் கார்த்தவீரியார்ச்சுனன் என்னும் அரசனொருவனுடைய புதல்வர்கள் இந்த ஆசிரமம் வந்து, ஜமதக்நி முனிவரை வெட்டிக் கொன்று விட்

டனர். அதனைப் பிறகறிந்த பரசுராமர் சினங்கொண்டு க்ஷத்திரிய வம்சத்தை இருபத்தொருதடவை வேரறுத்துத் தமது தந்தைக்கு அந்த இரத்தத்திலே தர்ப்பணஞ் செய்தார். தாம் வென்ற புவியைக் கடைசியில் காசியபர் என்பவர்க்குத் தானம் செய்துவிட்டு இப்பொழுது இங்குத் தவம் புரிந்து கொண்டிருக்கிறார். இது மஹேந்திர பர்வதச்சாரல்''—என்று கூறினர்.

தருமபுத்திரர் இதைக் கேட்டதும் பரமாநந்தமடைந்து பரசுராமரைத் தரிசிக்க அவா மேலிட்டவராயிருக்கையில் அங்குப் பரசுராமர் அப்பொழுதே அவர்க்குக் காட்சிதந்தார். அவரை எல்லோரும் தரிசித்து அவருடைய ஆசீர்வாத மடைந்து அங்கிருந்து புறப்பட்டுப் பல வனங்கள் கடந்துசென்று அகஸ்திய தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்களுக்குப் போய் அப்பால் பிரபாஸ தீர்த்தம் வந்து சேர்ந்தார்கள்.

தருமபுத்திரர் அங்கு வந்திருப்பதை யறிந்த கிருஷ்ண பகவானும் பலராமரும் யாதவர்கள் பலபேருடன் வந்து வரவேற்றனர். அறநெறி தவறாத பாண்டவர்களுக்கு இப்படி வனத்திற் கஷ்டப்படக் காலம் வந்ததேயென்றெண்ணி யாதவர்கள் வருந்தினர். தருமபுத்திரர் அவர்கட்கெல்லாம் சமாதானஞ் சொல்லிவந்தார். பின் எல்லோரும் நெடுநேரம் சந்தோஷமாக க்ஷேமலாபங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து பிரியமாட்டாமற் பிரிந்தனர்.

அப்பால் பாண்டவர்கள் நர்மதாநதி தீரஞ் சென்றனர். அங்கொரு ஆசிரமமிருந்தது. உரோமசன்மர், ''இது சியவன ரிஷியினுடையது. இந்த ரிஷி நெடுங்காலந் தவத்திலிருந்தமையினால் இவர்மீது புற்று மூடிக்

கொண்டது. ஒரு நாள் இங்கு சரியாதி என்கிற அரசன் தன் சேனையோடு வந்திறங்கி யிருந்தான். அவனுடைய புத்திரி ஸுகந்யை என்பவள், அப்புற்றை நோக்குகையில் அதன்கண் ஒருபுறம் அம்முனிவருடைய கண்களிரண்டும்தெரிந்தன. அவள்அவற்றை மின்மினிப் பூச்சியென்றெண்ணி ஒரு குச்சியை யெடுத்து அவருடைய கண்களைக் குத்திவிட்டாள். ரிஷி உடனே சினமடைந்து சபிக்க, அரசன் முதல் யாவருக்கும் அந்தச் சாபத்தினால் வயிறூதியது. அதுகண்டஞ்சிய அரசன் அந்த ரிஷியை வணங்கி அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தன் புத்திரி ஸுகந்யையை அவருக்கு மணஞ் செய்து கொடுத்தான்.

ஸுகந்யை மகாபதிவிரதை. அவளுடைய கற்பைப் பரிசோதிக்க வெண்ணி அசுவநீ தேவரும், சியவனரும் ஒரு குளத்திலே மூழ்கி ஒரே மாதிரியான யௌவன புருஷராய் எழுந்திருந்து தம்மில் யார் அவளுடைய கணவன் என்று தெரிவிக்கும்படி சொல்ல, அவள் அந்த க்ஷணத்திலேயே தன் அன்பராகிய ரிஷியைத் தொட்டுக்காட்டித் தன் கற்பை விளக்கினாள். இதனால் மகிழ்ச்சியடைந்த சியவனர், சரியாதி ராஜாவுக்கு ஒரு யாகஞ் செய்வித்து அவனை நற்கதி யடையும்படி செய்தார். அவருடைய ஆசிரமம் இது'—என்று கூறத் தருமபுத்திரர் சந்தோஷமடைந்து எல்லோருடனும் அங்கிருந்து புறப்பட்டுப் போனார்.

வெகு தூரம் பல வனங்கள் கடந்து போனபின் அவர்கள் யமுனா நதிக்கரையை அடைந்தார்கள். அவ்விடத்து விசேஷத்தைத் தருமபுத்திரர் வினவ, உரோமசர் "இது மாந்தாதா யாகஞ் செய்த இடம். மாந்

தாதா யவனுசுவ ராஜாவின் புத்திரன். யவனுசுவன், பிள்ளையை உண்டாக்கும் சக்தியை மந்திரித்து யாகசாலையில் வைத்திருந்த தீர்த்தத்தை இரவில் தனக்குண்டான தாகம் பொறுக்க மாட்டாமல் குடித்து விட்டான். அதனுல் அவன் வயிற்றிற் பிள்ளை யுண்டாய் விலாப்புறத்தின் வழியே அது வெளிப்பட்டது. அப்பிள்ளையே மாந்தாதாவெனப் பிரபலமானுன்" என்று கூறினுர்.

பிறகு தருமபுத்திரர் அந்நதியில் எல்லோருடனும் நீராடி அப்பால் சென்றுர். அங்கே ஓர் ஆசிரமமிருந்தது. அதைக் கண்ட உரோமசன்மர் "தருமரே! இது உசீனரனெனப் பெயர் பெற்ற சிபிச்சக்கரவர்த்தி யாகஞ் செய்த இடம். இவன் மகா தர்மிஷ்டன். இவனைப் பரிசோதிக்கக் கருதி இந்திரன் வேடுவனுனுன். அக்நி பகவான் ஒரு புருவின் உருவங் கொண்டார். வேடன் புருவைத் துரத்த அது சிபிச்சக்கரவர்த்தியினிடம் அடைக்கலம் புகுந்தது. வேடனும் அவ்வரசனை யடைந்து தன்பசி கூறிப் புருவை விடும்படிகேட்டான். அரசன் தன்னிடம் அடைக்கலமாக வந்தடைந்த புருவை விட மறுத்து, 'உனக்கு உன் பசிப்பிணிதீர வேறு எது வேண்டுமானுலும் கேள்; தருகின்றேன்' என்றுன். வேடன் அரசனுடைய இறைச்சியில் புருவினிடைக்குச் சமமாகத் தரும்படி கேட்டான். அரசன் புருவைத் தராசின் ஒருதட்டில் வைத்துத் தன் இறைச்சியிற் கொஞ்சம் அறுத்து மற்றொருதட்டிலேபோட்டான். புருவின் பக்கம் கனத்தது. இவ்வாறு அவன் தன் தசையை அறுத்துப்போட அறுத்துப்போடப் புருவின் பக்கமே கனத்தது. இப்படியாகவே அரசன் வியந்து தானே அத்தட்டின் மீதேறி நின்றுன். தட்டுகள் சமமாயின.

உடனே புரு அக்நிபகவானுயிற்று. வேடன் இந்திரனுஞன். இருவரும் தாம் அவ்வாறு வந்த நோக்கத்தைக் கூறி அரசனை மகிழ்வித்து அவனுக்கு ஆசிகள் கூறி மறைந்தனர். அவ்வரசன் புகழ் இன்றும் விளங்குகிறது''—என்றனர். அப்போது தருமபுத்திரர். "ஓ தருமத்தின் மகிமையே மகிமை! அது பெரிது ?''என்று கூறி மகிழ்ந்தார்.

பிறகு யாவரும் கங்காநதிக் கரைக்குச் சென்று அதில் நீராடினர். உரோமசன்மர் தருமபுத்திரருக்கு அத்தீர்த்த மகிமையைக் •கூறி அப்பால் அரிச்சந்திர தீர்த்தமிதுவென்று அதைக் காட்டுகையில் தருமபுத்திரர் அரிச்சந்திரனுடைய வரலாறுயாதென வினவினுர். உரோமசன்மர், அரிச்சந்திரனுடைய சரித்திரத்தை விஸ்தாரமாகக் கூறி ஸத்தியத்தின் மகிமையை விளக்கினுர். தருமபுத்திரர் அரிச்சந்திரன் சரித்திரங் கேட்டு என்றுமடையாத ஆநந்தமடைந்து "அகோ! ஸத்தியத்தின் மகிமை அளவிடற்கரியது'' என்று கூறிப்பின் அங்கிருந்து எல்லோருடனும் புறப்பட்டு தந்திசைல பர்வதம்போய் அதற்கப்பால் கைலேயங்கிரிச் சாரல் சென்றனர். உரோமசன்மர் ''இதுதான் அர்ச்சுனன் தவம் புரிந்த இடம்'' என்று முன் அர்ச்சுனன் தவம் புரிந்த இடத்தை அங்கே காட்டத் தருமபுத்திரர் அர்ச்சுனனேயே நேரிற் கண்டதுபோல் ஆநந்தமடைந்தார்; பிறகு கந்தமாதன பர்வதம் போனுர். போகும் வழியில் திரௌபதி கஷ்டப்பட்டாள். உடனே அவர்கள் பீமனுக்கு இடும்பியினிடம்பிறந்த கடோற்கஜனைநினைக்க அவன் அங்குவந்து திரௌபதியைத் தூக்கிக்கொண்டு சென்றுன். மற்றும் அவனேடு அநேக இராக்ஷஸர்கள்

வந்திருந்தார்கள். அவர்கள் பாண்டவர்களையும் மற்றவர்களையும் தூக்கிக்கொண்டு சென்றனர்.

அத்தியாயம்—15

பீமசேனன் குபேரபட்டணம் போய்வருதல்

இவ்வாறு எல்லோரும் கந்தமாதன பர்வதத்தை அடைந்து "அங்கே அர்ச்சுனன் வருவான், அவனைக் காணலாம்" என்கிற சந்தோஷத்தோடிருந்தனர். அப்படி யிருக்கையில் ஒருநாள் ஓர் அழகிய மந்தார மலர் திரௌபதியின் முன்வந்து விழுந்தது. அதைப் பார்த்த திரௌபதி தனக்கு அந்தப் புஷ்பம் வேண்டுமென்று பீமசேனனைக் கேட்டாள். அவன் அந்த மலரைக் கையில் வாங்கிக்கொண்டு "இப்படிப்பட்ட புஷ்பம் எங்கிருப்பினும் தேடிக்கொண்டு வருவேன்" என்று கூறி உடனே புறப்பட்டு நெடுகலும் போய்க் காணுமல் அப்பால் குபேரனுடைய பட்டணமாகிய அளகாபுரியை நோக்கிப் போனுன்.

பீமசேனன், பர்வதாகாரமான காத்திர தேகியாதலால், அவன் கால் வீச்சிலும் கைவீச்சிலும் மோதுண்டு மடிந்த இராக்ஷஸர் பலர். விலங்குகளும் பல அவ்வாறே மடிந்தன. ஸ்ரீராம தூதனுகிய மாருதி சீதா தேவியைத் தேடிக்கொண்டு இலங்கை சென்றபோது எப்படிப் பர்வதங்களும் அரக்கர் கூட்டங்களும் அதமாயினவோ அவ்வாறே இவன் செல்லும் வேகத்தினுலுண்டாகும் காற்றுப்பட்டு அநேகம் அதமாயின.

இப்படிச் சென்ற பீமசேனன் காஞ்சன வனத்

தைக் கடந்து கதலிவனம் போய்ச்சேர்ந்தான். அப்பால் அங்கிருந்த இராக்ஷஸர்கள் இவனை வளைத்துக் கொண்டார்கள். பீமசேனன் அவர்களை யெல்லாம் தவிடு பொடியாக அடித்தொழித்துவிட்டு அவ்வனத்தைக் கடந்து வேகமாய்ச் சென்றான். அவன் செல்லும்போது உண்டான வேகத்தினோசை கேட்டு அங்கிருந்த மாருதி அவனெதிரேதோன்றி, "அடே! எந்த வீரனும் எந்தத் தீரனும் எந்தச் சூரனும் வர அஞ்சும் இந்த இடத்திற்கு நீ எப்படியடா வந்தாய்? சை-நில்" என்று கூறி வழி மறித்துக் கொண்டார்.

பீமசேனன் நின்று மாருதியை விழித்துப் பார்த்து "அட குரங்கே! நீ யேன் வழிமறிக்கின்றாய்?" என்று கேட்டான். மாருதி, "ஓ ஓ உன்கையில் வில்லுங் கதையு மிருக்கிறபடியால் இந்த இறுமாப்புக் கொண்டாய் போலும்! எங்கே குறுக்கில் கிடக்கும் என் வாலைத் தொட்டு அசைத்துத் தூக்கி அப்பாலே போடு பார்க்கலாம் உன் வல்லமையை!" என்றார். பீமசேனன், "இஃது என்ன விந்தையாயிருக்கிறது! குரங்கின் பேச்சே என்னைக் கதி கலங்கும்படி செய்கின்றதே!" என்றெண்ணி, "குரங்கே! நீ என்ன பேச்சுப் பேசுகின்றாய்? இராமபிரானுக்குத் தூதனாய் இலங்கை சென்று சீதாபிராட்டியைக் கண்டு அந்நகரை எரித்துவிட்டு அங்கிருந்து மீண்டும் இராமரிடம் வந்து அவருக்குச் சீதையின்கைக் கணையாழி தந்து அவரை மகிழ்வித்த மகா வீரனாகிய மாருதியைப் பார்க்கிலுமா நீ?" என்றுகேட்டான். மாருதி, "சை, நரனாகிய அந்த இராமனைச் சுமந்துகொண்டலைந்த அந்த அநுமானையா நீ அப்படி உயர்த்திப் பேசுகின்றாய்? உன் புத்தியை நான்

என்னென்று சொல்வது? நீ கண்டது அவ்வளவுதான்!'' என, பீமசேனன், ''ஜகத் பிரபுவாகிய ஸ்ரீராமனை நரனென்று இகழ்ந்தும் நிகரற்ற மகா வீரனாகிய அநுமானைக் கேவலமான குரங்கைப் போல் தாழ்த்தியும் பேசுகிறது உன் அறியாமை யென்றே நான் நினைக்கின்றேன்'' என்றான். மாருதி, ''ஸ்ரீராமனையும் அநுமானையும் புகழ்ந்து பேசும் நீ யார்? நீ இங்கே எங்கேவந்தாய்? சற்று உன் வரலாறு கூறு. பிறகு பேசுகின்றேன்'' என்றார்.

பீமசேனன், ''நீதிநெறி தவறாத தருமபுத்திர மகா ராஜாவினுடைய தம்பி நான்; நிகரற்ற வில்லாளியாகிய அர்ச்சுனனுக்குத் தமையன். என் பெயர் பீமன். வாயுபகவான் என் தந்தை'' என்றான். மாருதி, ''நல்லது என் விருத்தாந்தங் கேள்—ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்குத் தூதுசென்ற அந்த அநுமான் தான் நான். என் தாய் அஞ்சனாதேவி. என் தந்தை வாயு பகவான்'' என, பீமசேனன் தேவாமிர்தமுண்டவனைப் போல் ஆநந்தமடைந்து, ஆஞ்சநேயருடைய பாதங்களில் விழுந்து பணிந்தெழுந்து ''அண்ணா!'' என்று கூறி மேலே பேச நாவெழாமல் கைகுவித்து நின்றான். மாருதி, உடனே பீமசேனனைத் தழுவிக்கொண்டு ''நீ கவலைப் படாதே! நீ எங்கே இங்கு வந்தாய்?'' என்று கேட்க, பீமசேனன், ''அண்ணா! எங்கள் பங்காளியாகிய துரியோதனன் எங்களை மாயச் சூதில் தோற்கடித்துக் காட்டிற்கு ஓட்டிவிட்டான்''—என்று தொடங்கி நடந்தவற்றை யெல்லாம் தெரிவித்துத் தான் இப்பொழுது புறப்பட்டு வந்த நோக்கத்தையும் கூறினான்.

மாருதி ''நல்லது, அப்படியா! அந்த மலர் குபேர

னுடைய வீட்டுத் தோட்டத்தில் மஞ்சனவாவிக் கரை யிலே முளைத்திருக்கிறது. தேவர்களுக்கும் அது கிடைப் பதரிது. அங்கே ஜீவகாருண்யமே யில்லாத கிங்கரர் களும் இயக்கர்களும் காவலா யிருக்கின்றனர். நீ ஸத் தியவந்தனுதலால் உன் தபோ பலத்துக்கும், உன் சற் குணத்துக்கும் அது உனக்குக் கிடைக்கக் கூடும். போய் வா'' என்றான். பீமசேனன் "அண்ணு! தங்கள் ஆசீர் வாத பலங்கொண்டு நானெப்படியும் அந்த மலரைக் கொண்டு வருவேன். ஒரு வரம் வேண்டும். நாங்கள் வனவாசங்கழிந்து நாடுபோய்ச் சேர்ந்ததும் தாங்கள் தம்பிஅர்ச்சுனனுடைய தேரின்மீது எழுந்தருளியிருந்து, போர்க் களத்திற் பகைவர்களை நடுங்கும்படி செய்தல் வேண்டும்'' என்றான். மாருதி, "அவ்வாறே செய் வோம். இன்னும் என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்கப் பீமசேனன், "தாம் முன் சீதாதேவிக்குக் காட்டிய விசுவரூப தரிசனம் எனக்குக் காட்ட வேண் டும்'' என்றான். மாருதி, உடனே விசுவரூப மெடுத்துக் கொண்டு நின்றார். பீமசேனன், அந்தத் திவ்ய தரி சனஞ் செய்து பணிந்தெழுந்து துதித்தான். மாருதி உடனே தம் சுயரூபத்தை எடுத்துக்கொண்டார். பீம சேனன் அவரை வணங்கி அவரிடம் விடைகொண்டு அளகாபுரியை நோக்கிச் சென்றான்.

இப்படிப் புறப்பட்ட பீமசேனன் வித்தியாதர ருடைய நாடு சென்று அப்பால் சக்கர நாக மலையைத் தாண்டித் திவாகரபர்வத மார்க்கமாய்ப் போனான். போகும் வழியிலே, தன்னை யெதிர்த்த புண்டரீகன் என்னும் இராக்ஷஸனோடு கடும்போர் புரிந்து அவனைக் கொன்று சந்திரசைலத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

சந்திரசைலம் அளகாபுரிக் கருகே யுள்ளது. ஆகையினால் பீமசேனன் அதன்மேலேறி அந்நகரத்தின் அமைப்பைக் கவனித்தான்; மஞ்சனவாவி இருக்கு மிடத்தைக் கண்டுகொண்டு அளவற்ற மகிழ்ச்சி யடைந்தான்; உடனே அச்சைலத்திலிருந் திறங்கி நடந்து அளகாபுரியிற் பிரவேசித்துப் புஷ்ப மிருக்கு மிடத்தை நோக்கிப் போய் அதை நெருங்கிப் பார்க்கையில் அங்கிருந்த காவலர்கள் இவனைக் கண்டதும் அட்டகாசத்தோடு ஆர்ப்பரித்துக் கைகொட்டி நகைத்து "அடா நரனே! வா! வா! இந்திராதி தேவர்களும் கண்ணெடுத்துப் பார்க்க அஞ்சும் இந்தப் புஷ்ப வனத்துக்கு நீ எப்படி வரத் துணிந்தாய்? அடே, நீ தப்பிப்போவதில்லை இன்று" என்று கூறி அங்குள்ள யாவும் நடுங்கும்படி புயங்கொட்டி மீசை முறுக்கினார்கள்.

பீமசேனன் இந்த மிரட்டிற் கஞ்சினவனா? அவன் வன்மையை அந்தக் காவலர்கள் எப்படியறிவார்கள்?—பீமசேனன் இவர்களைப்போல் எத்தனையோ வீரர்களையும் வீரர்களுடைய அட்டகாசங்களையும் கண்டும் கேட்டுமிருப்பவனாதலால் அஞ்சாமல் அவ்விடத்திலேயே நின்று புன்னகை புரிந்து அவர்களை நோக்கி, "என்னை நரனென இகழ்ந்தது போதும்! நில்லுங்கள். நான் இவ்விடத்திலுள்ள இந்த மந்தார புஷ்பங்களைப் பறித்துக் கொண்டுபோக வந்தேன். நீங்கள் அதற்கிடந்தராமற் போனால் உங்களெல்லோரையும் நமனுலகுக்கு இக்கணமே அனுப்பி என் எண்ணத்தை முடித்துக்கொள்வேன்!" என்றான்.

இதைக் கேட்டதும் அவ்வரக்கர்கள் சினங்கொண்டு திரண்டு வந்து பீமசேனனைச் சூழ்ந்துகொண்டு பல

ஆயுதங்களை அவன்மீ தெறிந்தார்கள். பீமன் அவர்கள் எறிந்த ஆயுதங்களையெல்லாம் தன் கைக் கதையினலே எற்றித் தட்டிவிட்டு அவர்களுக்கிடையே ஆட்டு மந்தையிற் சிங்கம்போற் புகுந்து ஆலவட்டமாய்ச் சுழன்று சிலரைக் கதையாலடித்து வீழ்த்தினன்; சிலரைக் கையால் குத்திக் குமுக்கினன்; சிலரைக் காலால் உதைத்து உருட்டினன்; சிலரை விண்ணி லெறிந்து கதைகொண்டு தாக்கிக் கொன்முன்; மடிந்தவர்களை வாரி உயிருடனிருப்பவர்மீ தேறிந்து விளையாடினன்.

இவ்வாறு பலவகைகளிலும் அரக்கர்களை அதஞ் செய்யவே சாரணர்களோடி இதனைக் குபேரனுக்குத் தெரிவித்தார்கள். குபேரன் வந்திருப்பவன் தரும ராஜாவின் தம்பியாகிய பீமசேனனென அறிந்ததும் மகிழ்ந்து தன் மைந்தனை அழைத்து, "நீ போய்ப் பீமசேனனைக் கண்டு வேண்டிய மலர்கள் பறித்துத் தருவதாகக் கூறிச் சமாதானஞ்செய்து இங்கே அழைத்து வா" என்றனுப்பினன். அவன் போய்ப் பீமசேனனுக்குச் சொல்லவேண்டியவற்றைச் சொல்லிச் சமாதானஞ் செய்து தந்தையிடம் அழைத்துப் போனன். குபேரன், பீமசேனனைத் தக்க மரியாதையுடன் வரவேற்றுத் தருமபுத்திரரின் க்ஷேமம் விசாரித்துக் களையாற உணவளித்து, "நீ இவ்விடமிருந்து போகும்போது வேண்டிய மலர்களைப் பறித்துக் கொண்டு போ; உனக்கில்லாததா?" என்று கூறினன். பீமசேனன் மகிழ்வுற்று அந்நகரத்தில் குபேரனேடு சில நாள் தங்கியிருந்தான்.

இவனிவ்வாறு புறப்பட்டுவந்த செய்தி தரும புத்திரர் முதலியவர்களுக்குத் தெரியாது. திரௌபதிக்கு

மாத்திரமே தெரியுமாதலால், தருமபுத்திரர் பீமனைக் காணுமென்று தேடுகையில் அவன் மந்தாரமலர் பறித்துவரக் குபேர உலகம் போயிருப்பதைத் திரௌபதி கூறினாள். தருமபுத்திரர்க்குத் தம்பி பீமசேனனைத்தேடிக் கண்டுபிடித்துப் பார்க்கவேண்டுமென்கிற அவாவுண்டாயது. மகாவீரனாகிய அர்ச்சுனனும் பிரிந்திருக்கிறானல்லவா? ஆகையினால் தருமபுத்திரர் அக்கணமே பீமசேனனைத் தேடியடைய வெண்ணிக் கடோற்கஜனை மனத்தி லெண்ணினார். அவன் இரதத்துடன் அங்கு வந்து சேர்ந்தான். அதில் தருமபுத்திரர் ஏறிக்கொண்டு கடோற்கஜ னுதவியால் குபேர பட்டணம் போய்ப் பீமசேனனைக் கண்டு மனக்கவலை நீங்கினார். பீமசேனன் தருமபுத்திரரைப் பணிந்து, மந்தார மலரால் அவருடைய பாதத்தில் அர்ச்சனை செய்து பூசித்து, மகனாகிய கடோற்கஜனைச் சந்தோஷத்துடன் தழுவிக்கொண்டான். மகன் இருவரையும் வணங்கி நின்றான். தருமபுத்திரர், "அப்பா பீமசேனா! ஒரு பெண்பிள்ளை பேச்சைக் கேட்டுக்கொண்டு நீ இப்படிவரலாமா? என்னகாரியஞ் செய்தாய் சிறிதும் யோசியாமல்? ஒரு புஷ்பத்திற்காக எத்தனை பேர்களைக் கொன்றிருக்கிறாய்? இப்படிப்பட்ட செய்கை நமக்கழகாகாது" என்று புத்திமதி கூறினார். பீமசேனன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அப்பால் மூவரும் குபேரனிடம் போய் அவனைக்கண்டு பேசி மகிழ்ந்து விடைகொண்டு கந்தமாதன பர்வதம் வந்து சேர்ந்தனர். பீமசேனன் புறப்படும்போது ஏராளமான மந்தார மலர்கள் பறித்துக்கொண்டு வந்தான். அவற்றைத் திரௌபதி பெற்றுக்கொண்டு பரமாநந்த மடைந்தாள். பிறகு கடோற்கஜன் விடைகொண்டு தன்னிடம் போனான்.

அப்பால் அங்கிருந்து புறப்பட்டு வேறோர் வனம் போய்ச் சில காலம் வசித்திருந்து, பிறகு வேறொரு வனம் போய் அங்கே அஷ்டகோண மகரிஷியின் ஆசிரமத்திலே எல்லோரும் தங்கி யிருந்தனர். அந்த ரிஷி அவர்களை அங்கே வெகுநாள் வரையில் வைத்திருந்தமையினால் வனவாசத்தில் பத்து வருஷகாலங் கழிந்தது.

இப்படி யிருக்கையில் அந்த ஆசிரமத்தின் அருகே ஓடும் நதியில் ஒரு பாரிஜாத புஷ்பம் மிதந்து கொண்டு வந்தது. அதனைத் திரௌபதி யெடுத்துவந்து பீமசேனனிடம் கொடுத்து " இம்மலர் முன் கொண்டு வந்த மலரினும் அழகாயிருக்கிறது. இது போன்ற மலர் வேண்டும்" என, பீமசேனன், "அப்படியா, இதோ போய்க் கொண்டு வருகிறேன்" என்று கூறி முன்போலவே வேறொருவருடனுஞ் சொல்லாமற் புறப்பட்டுக் குபேர பட்டணம் போய்த் திரௌபதி காட்டிய அத்தகைய மலரிருக்கும் வனத்தைத் தேடி யடைந்தான்.

இதனைக் கண்டதும் அங்கிருந்த காவலர்கள் இவனை எதிர்த்துத் தாக்கினர். பீமசேனன் அவர்களோடு பெரும்போர் புரிந்து அநேகரை வதைத்தான். அவர்களுள் மணிமாலன் என்பவனொருவன்; அவன் பிரதான சேனைத்தலைவன். அவனுக்கும் பீமனுக்கும் போர் மூண்டு அகோரமான சண்டை நடந்தது. அச்சண்டையில் மணிமாலனைப் பீமசேனன் வதஞ்செய்து வெற்றி பெற்றான்.

இவனிப்படி யிருக்கையில், தருமபுத்திரர் முன்போல் பீமசேனனைத் தேடிகொண்டு கடோற்கஜன் உதவியால் குபேர பட்டணம் வந்து பீமனைக்கண்டார். தன்

அண்ணு சினங்கொண் டிருப்பாரென் றஞ்சிய பீமன் அவரைப் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பிறகு குபேரன் இவர்களை வரவேற்றுபசரிக்கத் தரும புத்திரர் தன் தம்பியை மன்னிக்கும்படி அவனுக்குச் சொல்லியதுமன்றிப் பீமசேனனையும் அவனைப் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி செய்தார். குபேரன் தருமபுத்திரரிடம் மகிழ்ச்சி யடைந்து, அவர்க்கு வேண்டியவைகளையெல்லாம் கொடுத்து உபசரித்துப் பீமசேனனுக்கும் வேண்டிய மலர்கள் கொடுத்தான். பிறகு மூவரும் அங்கிருந்து புறப்பட்டு அஷ்டகோண மகரிஷியின் ஆசிரமம்வந்து சேர்ந்தனர். திரௌபதி பீமசேனன் கொண்டுவந்த மலர்களைப் பெற்று மனமகிழ்ந்து அங்கிருந்த பெண்களுக் கெல்லாங் கொடுத்துத் தானும் சூடிக்கொண்டாள். பிறகு கடோற்கஜன் விடை கொண்டு தன்னிருப்பிடம் போனன். எல்லோரும் அவ் வனத்திலேயே தங்கியிருந்தனர்.

அத்தியாயம்—16

அர்ச்சுனன் வரவு

இந்திர லோகத்தில் சகல சுகங்களையும் அநுபவித்துக் கொண்டிருந்த அர்ச்சுனன், பரத நாட்டியம் பயின்று தேர்ச்சி பெற்றதும் தன் சகோதரர்களைப் பார்க்க விரும்பி இந்திரனிடம் விடை கேட்டான். இந்திரன், “அப்பனே! சந்தோஷம். இனி நீ இங்குத் தாமதிப்பது கூடாது. தருமன் கவலைப் படுவான்; பீமசேனன் ஒரு தோள் போனவன் போலிருப்பான்; நகுல சகாதேவர்கள் உன் வரவை நாடோறும் எதிர்பார்த்தபடியே

யிருப்பார்கள்; திரௌபதி ஒரு கணநேரத்தை ஒரு யுகமாகக் கழிப்பாள். வந்து நாளாய் விட்டதல்லவா? இதோ நானும் உன்னுடன் புறப்பட்டுவந்து தருமனைக் கண்டு இங்கு நடந்தவைகளை யெல்லாம் விவரமாகக் கூறி உன்னை அவரிடம் ஒப்புவித்துவிட்டு வருகின்றேன்'' என்றான். அர்ச்சுனன், 'அப்படிச் செய்வதே நல்லது; நம்மிருவரையும் பார்க்கும்போது அண்ணா பரமசந்தோஷமடைவர்'' என்றான்.

உடனே சாரதி மாதலி இந்திரனுடைய கட்டளைப்படி இரதங்கொண்டு வந்து நிறுத்தினான். இந்திரனும் அர்ச்சுனனும் அதில் பிரயாணப் பட்டுப் பூலோகத்தில் கந்தமாதன பர்வதத்தில் தருமபுத்திரரிருக்கும் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அர்ச்சுனனையும் இந்திரனையும் கண்ட தருமபுத்திரர் முதலியவர்கள் கவலை நீங்கிப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அர்ச்சுனன் முதலில் குருமார்களையும் பெரியோர்களையும் வணங்கி, அப்பால் தருமபுத்திரரையும் பீமசேனனையும் வணங்கினான். தருமபுத்திரரும் பீமசேனனும் அர்ச்சுனனை மார்போடணைத்து முத்தமிட்டு வாழ்த்தினார்கள்; இந்திரனை வணங்கி ஆசீர்வாதம் பெற்றார்கள். நகுல சகாதேவர்கள் அர்ச்சுனனைக் கண்டதும் தங்கள் தந்தையைக் கண்ட சிறுவர்போ லோடிவந்து பணிந்தார்கள். அர்ச்சுனன் அவர்களைக் கட்டியணைத்து முத்தமிட்டான். திரௌபதி அச்சபையில் மெதுவாய் வணங்கி ஆநந்தமே உருக்கொண்டது போல் நின்றாள்.

இவ்வாறு மரியாதைகள் நடந்தபின் தருமபுத்திரர் எல்லோரையும் வீற்றிருக்கச் செய்து தாமும் அமர்ந்து இந்திரனுக்குச் சொல்லவேண்டிய உபசாரங்களையும்

செய்யவேண்டிய உபசாரங்களையும் செய்தார். இந்திரன் சந்தோஷமடைந்து அர்ச்சுனனால் தானடைந்த பயனை யெடுத்துக்கூறி அவன் பராக்ரமத்தையும் புகழ்ந்து "இனி உங்களுக்கு எந்தக் குறைவும் வாராது. அர்ச்சுனன் தவத்தினால் சிவபெருமானிடம் பெற்றுக்கொண்டு வந்திருக்கும் பாசுபதாஸ்திரத்தின்முன் நிற்க வல்லவர் மூவுலகங்களிலும் கிடையாது"—என்று கூறி எல்லோரையும் வாழ்த்தித் தன் உலகம்போக விடைகொண்டு உரோமசன்மருடன் இரதமேறிச் சென்றான்.

அப்பால் தருமபுத்திரர், அர்ச்சுனனை நோக்கி, "அர்ச்சுனா! உன் பாக்கியமே பாக்கியம்! பூலோகத்தில் நம்மைப்போன்ற அரசர்கள் எவ்வளவோ பேர் தவம் புரிந்திருக்கின்றனர்; ஈசனிடம் வரமும் பெற்றிருக்கின்றனர். தேவர்களிலும் இப்படிப்பட்டவர்கள் அநேகம் பேருண்டு. ஆனால் பரமபதியாகிய அந்தச் சிவபெருமானோடு உன்னைப்போல் கட்டித் தழுவி விளையாடி வரம்பெற்றவர்கள் கிடையாது. அப்பா, நீ தவஞ் செய்ததையும் சிவ்பெருமான் தோன்றி உன்னோடு விளையாடி உனக்குப் பாசுபதாஸ்திரம் தந்ததையும் விஸ்தாரமாகச் சொல்லு. நாங்கள் செவியாரக் கேட்டுச் சந்தோஷ மடைகிறோம்" என்றார்.

அர்ச்சுனன், முகமலர்ச்சியுடன் தருமபுத்திரரை வணங்கித் தான் முன் வியாஸரிடம் உத்தரவு பெற்றுப் புறப்பட்டது முதல் இதுவரையில் நடந்தவைகளையெல்லாம் நடந்தபடி கூறினான். எல்லோரும் கேட்டு என்றுமடையாத மகிழ்ச்சியும் வியப்புமடைந்தார்கள். தருமபுத்திரர், "தம்பி, எனக்கிந்தப் பாக்கியமில்லாமற் போன போதிலும் கங்காதர மூர்த்தியின் தரிசனம் செய்த

உன்னுடைய அழகிய கண்களை இதோ பார்க்கின்றேன். அந்த ஜகதீசனுடைய திருவடியிலே பணிந்த சிரசிது. திரிபுராந்தகனுகிய அந்தப் பரம்பொருள் தன் இரு கரங்களினுலும் கட்டித் தழுவி வாரி யெறிந்து விளையாடிய தேகமிது. காலகாலனுகிய அந்த என் ஆண்டவனை வலம்வந்த பாதங்களிவை'' என அவனுடைய ஒவ்வொரு அவயுவங்களையுங் காத்திணுல் தொட்டு முத்தமிட்டு ஆநந்தமடைந்தார். எல்லோரும் பரமசிவனையே தாங்கள் நேரிற்கண்டு தரிசித்ததுபோல் மனமகிழ்ந்து அர்ச்சுனனைப் புகழ்ந்து வாழ்த்திஞர்கள்.

அத்தியாயம்—17

பீமனை மலைப்பாம்பு விழுங்கியது

பின்னர்க் கொஞ்ச நாளைக்கெல்லாம் தருமபுத்திரர் அந்தப் பர்வதத்தை விட்டுக் கீழே இறங்கிவரப் பிரயாணப்பட்டு அநேக ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு யமுனு நதிக்கரையிலுள்ள ஒரு பெரிய மலையினருகே வந்து சேர்ந்தார்.

அங்கு வரும்போது பீமன் காட்டிற்குள் நுழைந்து இங்குமங்கும் போய் வனவிலங்குகளை வெருட்டி விளையாடிக்கொண்டே வந்தான். அப்பொழுது அவனை ஒரு பெரிய மலைப்பாம்பு காலைப்பிடித்துக் கவ்விக் கொண்டு தன் உடலால் அவனுடலை இங்குமங்குமசைய விடாமற் சுற்றிக் கட்டிக்கொண்டது. பீமசேனன் அந்தப் பாம்பின் கட்டிலிருந்து விடுபடத் தன் முழு பலத்தையும் உபயோகித்துப் பார்த்தான்; முடியவில்லை; என்ன செய்வான்; வருந்துகிறுன்.

இப்படியிருக்கையில் அங்கே தருமபுத்திரர் முதவிய எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். தம்பி இவ்வாறு பாம்பினிடம் அகப்பட்டு வருந்துவதைக் கண்டதும் தருமர், அந்தப் பாம்பைப் பார்த்து, "என் தம்பியை விட்டுவிடு" என்றார். பாம்பு "நீ யார்?" என்று வினவியது. தருமர் தாம் இன்னாரென்பதைக் கூற, அது, "நான் உன்னை ஆத்மஞான விஷயமாய்ச் சில கேள்விகள் கேட்கிறேன். அவற்றிற்கு விடை கொடுத்து உன் தம்பியை நீ மீட்டுக்கொள்" என்றது. தருமபுத்திரர், "கேட்கலாம்" என, பாம்பு, சில கேள்விகள் கேட்டது. அவற்றிற்கெல்லாம் தருமபுத்திரர் விடை பகர்ந்தார். அந்தப் பாம்பு திருப்தியடைந்து பீமசேனனை விட்டுவிட்டு உடனே, ஒரு திவ்ய புருஷரூபம் பெற்று நின்றது. தருமபுத்திரர் அந்த ரூபத்தைக் கண்டு வியப்படைந்து நின்றார். அப்போது அவன் "நான் நகுஷன் என்பவன். நான் புவியில் நூறு யாகம் செய்து இந்திர பதவி பெற்று இந்திரலோகம் போனேன். அங்கு நான் ஒழுக்கந் தவறி நடந்தமையினால் என் பல்லக்கைச் சுமந்து சென்ற சப்தரிஷிகளில் அகஸ்தியர், இப்படி மலைப்பாம்பாகும்படி எனக்குக் கடுஞ்சாபங் கொடுத்தார். பிறகு நான் அவரை வணங்கிப் பிரார்த்தித்தேன். அவர், 'நீ ஒரு மகானிடம் ஆத்மஞானம் கேட்டுத் தெளிவாய். அப்பொழுது உனக்கு இச்சாபம் நீங்கும்' என்றார். அதன்படி நடந்தது. இப்பொழுது நான் திவ்ய தேகம் பெற்று ஸ்வர்க்கம் போகிறேன். ஒரு குலத்தில் ஒரு சற்புத்திரன் பிறந்தால் அவனால் மூவேழு தலைமுறையும் கரையேறும் என்று பெரியோர் கூறுவர். அவ்வாறு நான் உன்னால் நற்கதி பெறுகிறேன்" என்று கூறி உடனே பீம

சேனனைப் பார்த்து, "நான் பாம்பாயிருந்தபோது எனக்கிருந்த பலமெல்லாம் உன்னைச் சேரக்கடவது. பகைவர்களனைவரும் உன்னால் அழிவார்கள்" என்று வாழ்த்திச் சென்றான். பிறகு பாண்டவர்கள் ஒரு திவ்ய வனத்திற்குப் போய் அங்கே வசித்தார்கள்.

அத்தியாயம்—18

மார்க்கண்டேயரின் உபந்நியாசம்

இதுவரையில் வனவாசத்தில் பத்து வருஷகாலங் கழிந்தது. பதினோராவதாண்டின் தொடக்கத்தில் பாண்டவர்கள் மாரிகாலங் கழிந்த பிறகு அவ்விடமிருந்து புறப்பட்டுப் பலவகையான வன விநோதங்களைப் பார்த்துக்கொண்டே ஸரஸ்வதிதீரம் போய்ச் சேர்ந்தனர்; அதில் நீராடி அங்குச் சிலநாள் வசித்து அப்பால் முன்னிருந்த காமிய வனத்திற்கே மீண்டும் வந்து சேர்ந்தனர். அவ்வனத்திலிருக்கையில் கிருஷ்ண பரமாத்மா ஸத்தியபாமை யென்னும் தமது தேவியோடு அங்கு விஜயமாயினர். கிருஷ்ணமூர்த்திக்குப் பாண்டவர்கள் சகல உபசாரங்களையுஞ் செய்தனர். திரௌபதி ஸத்தியபாமைக்குத் தான் செய்யவேண்டிய உபசாரங்களை முறை தவறாமல் செய்து மகிழ்ந்தாள்.

இப்பொழுது தருமபுத்திரர் கிருஷ்ணமூர்த்தியினிடம் பார்த்தன் செய்த செய்கைகளையும் பீமசேனன் செய்த செய்கைகளையும் உரோமசன்மரின் உபதேசப்படி தாங்கள் தீர்த்தாடனஞ் செய்து வந்ததையும் தீர்த்த யாத்திரையில் அங்கங்கு நடந்த விசேஷங்களையும் கூறினார். கிருஷ்ணபகவான் கேட்டுப் பரம சந்தோஷ

மடைந்து பார்த்தனைப் புகழ்ந்து கொண்டிருக்கையில் அங்கே மார்க்கண்டேய முனிவர் வந்து சேர்ந்தார். அவரைத் தருமபுத்திரர் வணங்கி வரவேற்றுபசரித்தார். மார்க்கண்டேயர், பாண்டவர்களை ஆசீர்வதித்து, "கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் எவ்வளவடைந்திருந்தாலும் வினைப்பயனை வெல்வதரிது. அதனை அநுபவித்துத்தான் தீரவேண்டும். பசுவின் கன்று எப்படித் தன்தாயை நாடி அடையுமோ அப்படியே எவன் எந்த வினையைச் செய்தானோ அஃதவனைத் தேடி யடையும். இதுபற்றித் துக்கிக்கவேண்டாம். உங்கட்குச் சர்வலோககர்த்தாவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அரிய துணையிருக்கிறது. ஆகையினால் உங்களுக்கு ஒருகுறையும் வராது. நீங்கள் சகல பாக்கியங்களுக்கு முரியவர்கள். உங்களுடைய பெருமை பெரிது" என்றார். தருமபுத்திரர், "எல்லாம் பெரியவராகிய தம்முடைய ஆசீர்வாத பலமே யன்றி வேறில்லை. எனக்கு ஒரு குறைவுமில்லை. பகையுமில்லை. துரியோதனன், ஒரு மாதைச் சபைக்கிழுத்து வந்து அவமானஞ் செய்தபடியால் என் தம்பிமார்கள் சினங்கொண்டிருக்கிறார்கள். எனக்கு அவனிடத்தில் கோபமே இல்லை. அவன் அவ்வாறு செய்யாவிடில், மனோகரமான இந்தக் கானக வாசமும் தம் போன்ற பெரியவர்களுடைய தரிசனமும் எனக்கு எப்படிக் கிடைக்கும்? இவையெல்லாம் துரியோதனனுடைய தருமம் என்றே நினைக்கின்றேன். ஆனால் தம்பிகளுக்கு இந்த என் கருத்தைக் காட்டமாட்டேன். நடக்குங் காரியம் நடந்தே தீரும். ஸ்வாமி, தங்களுடைய திரு வாக்கால் சில சரித்திரம் கேட்க மனம் அவாவுகிறது இச்சமயம்" என்றார்.

மார்க்கண்டேயர், "தருமநந்தன! எந்த வருணத்திலே சரீர மெடுத்தாலும் அது அழிந்துபோய் மறுபடியும் தோன்றும். இந்தத் தேக மெத்தனை விதமாக மாறினாலும் நல்வினை தீவினைகளின் தொடர்பு மாத்திரம் இருந்துகொண்டே யிருக்கும். அந்த வினைக்குத் தக்கபடி பயனை அநுபவித்தே தீரவேண்டும். நல்லொழுக்கத்திலிருப்பவனே உத்தமமான பிறப்படைவன். அவனுக்கே பிரமஞ்ஞானங் கிட்டும். அவனே உயர்ந்தோன். நெறிகெட்டவனே கடைப்பட்டவன். அவனே பாவி. அவனுக்கு நரகந்தான் கிடைக்கும். இம்மையில் நல்ல வழியில் அதாவது பாபமற்ற வழியில் நடப்பவன் மறுமையிற் சுகம் பெறுவான். இம்மையில் தீய வழியில் அதாவது பாபவழியில் நடப்பவன் மறுமையில் துன்பமடைவான். இதற்கு நீயுந் துரியோதனனுந்தான் சான்றாகிறீர்கள். உனக்குத் தீங்கு செய்த துரியோதனனை உலகம் என்ன சொல்லுகிறது? அதனைப் பொறுத்துக்கொண்டு தருமமே துணையெனவிருக்கும் உன்னைப் பற்றி உலகம் என்ன சொல்லுகிறது. இன்னும் கொஞ்ச நாளில் உன் பகைவர்கள் நாசமடையப் போகிறார்கள்! நீ அரசனாகப் போகிறாய்:—

முன் அயன் என்றொரு வேந்தனிருந்தான். அவன் மகன் ஒருநாள் காட்டில் வேட்டையாடுகையில் மானென்று நினைத்து நிஷ்டையிலிருந்த ஒரு முனிவரின் மேல் அம்பெய்து அவரைக்கொன்று விட்டான். பிறகு அவன் அந்தத் தோஷநிவர்த்திக்காக இன்னொரு முனிவரிடம் போய்த் தன் குறை கூறி வருந்தினான். பெரியவராகிய அம்முனிவர் அவனுக்கிரங்கி அவனை அழைத்துக்கொண்டு இறந்துபோன முனிவரிருக்குமிடம் வந்து

அவரை உயிர்ப்பித்தார். உயிர்பெற்ற அந்த முனிவரை அந்த அரசன் வணங்கித் தன் பிழைபொறுத்துத் தன்னை ஆசீர்வதித் தாதரிக்குமாறு வேண்டினன். முனிவர் பிழை பொறுத்து அவனை ஆசீர்வதித்தார்.

இவ்வாறு ஆசீர்வாதம் பெற்ற அவ்வரசன், இறந்த முனிவரை உயிர்ப்பித்த முனிவரைப் பார்த்து, 'ஸ்வாமி, இறந்தவனைப் பிழைப்பிக்கும்படியான மகத்துவம் எதனல் உண்டாயிற்று? தயைசெய்ய வேண்டும்' என்று வேண்டினன். அவர், 'வேந்தே, தயை ஸத்தியம், தவம், இன்சொல், நிராசை, வேதநெறி தவருதிருத்தல், பிறர்மனம் வருந்த வொன்றையும் செய்யாதிருத்தல், குணவதியான நல்ல மனைவியோடிருந்து இல்லறம் நடத்தல்—இவைகளை மேற்கொண்டு நடப்பவனுக்கு இதுமாத்திரமல்ல; இன்னும் எப்படிப்பட்ட செய்கைகளையும் வெகு சுளுவில் முடிக்கும் சக்தியுண்டு. இது வேதங் கூறுவது' என்றார். அரசன் இந்த உண்மைகேட்டு மகிழ்ந்து முனிவரைப் பணிந்து இராஜ்யத்திற்குச் சென்று மேற்கூறிய நல்ல ஒழுக்கங்களை யெல்லாம் முன்னிலும் மிகுந்த சிரத்தையோடு அநுஷ்டித்து வரலானன். இத்தகைய மனமும் செய்கையுமுடையவனெவனே அவனே உயர்ந்த வருணத்தவன்.

இன்னெரு கதையுண்டு. அதனைக் கேள். அத்திரியென்றெரு பிராமணனிருந்தான். அந்தப் பிராமணன் தன் மனைவியைப் பார்த்து, 'நான் சில நாளைக்கெல்லாம் தவத்திற்குப் போக நிச்சயித்திருக்கிறேன். நீ என்னேடு வருவாயோ; இல்லாவிட்டால் நமது பிள்ளைகளுக்குத் துணையாக வீட்டிலேயே இருப்பாயோ?' என்று கேட்டான். மனைவி தன் கணவனுடைய திருவடி

பணிந்து, 'பிள்ளைகளுக்கு நான் துணையாயிருக்க வேண்டுமென்பதென்ன? அவர்களைப் பிறப்பித்த அந்த இறைவன் அவர்களைக் காப்பாற்றமாட்டானா? நான் தான் தங்களையே கதியாக அடைந்தவள்; தங்களுடைய துணைகொண்டே நற்கதி யடையத் தக்கவள். தங்களுடைய பணிசெய்வதே எனக்குத் தேவாராதனை, தவம், யாவும். ஆதலின் நான் தங்களையே பின்பற்றுவேன்' என்றாள்.

பிராமணன் தன் மனைவியிடம் சந்தோஷமடைந்து 'கற்புடைய மங்கையர்க்கேற்றதே கூறினாய்! நல்லது. நம் மக்களுக்குக் கொஞ்சம் பொருள்தேடி வைத்துவிட்டு நாம் தவத்தை மேற்கொள்வோம்' என, மனைவியும் 'அப்படியே செய்வோம்' என்றாள்.

பிறகு பிராமணன் பொருள் தேடுவதன் பொருட்டு ஓர் அரசனிடம் போய் அவனைக் கடவுளுக்கொப்பிட்டுத் துதித்தான். அங்கிருந்தார் சிலர், 'என்னயிது! நரமனிதனைக் கடவுளுக் கொப்பிடுகின்றாய்? இவ்வாறு ஒப்பிடுதல் தகுமா?' என்று கேட்டனர். அந்தணன், "பிருதிவி பதே விஷ்ணு" என்னும் வாக்கியத்தையெடுத்துக் கூறிச் சமாதானஞ் சொன்னான். அவர்கள் கேட்கவில்லை.

அப்பால் எல்லோருஞ் சேர்ந்து அரசனையுமழைத்துக்கொண்டு சனற்குமார ரென்கிற முனிவரிடம்போய் வழக்குச் சொல்லிக் கொண்டனர். அவர், 'இந்தப் புவியில் குடிகளுக்கு அரணாயிருந்து காப்பவன் அரசனே யன்றோ? நீதியும் நெறியும் தேவாலய கைங்கரியங்களும், வேள்விகளும், பெண்களின் கற்பும் அரசனாலன்றோ நிலை நிற்கின்றன?

'மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகும் பகைத் திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ'

என்று கூறியுள்ளபடி, தன்னாலும், தன் பரிசனத்தாலும் பகைவராலும் கள்வராலும் பிற உயிர்களாலும் நேரிடும் அச்சமைந்தையுந் தீர்த்துத் தருமத்தைப் பரிபாலனஞ் செய்பவனாகையினால், அவன் காக்குங் கடவுளாகிற விஷ்ணு மூர்த்திக்குச் சமானமாகக் கொள்ளத் தக்கவனே' என்று பிராமணனின் வாக்கை உறுதி செய்தார்.

இதனால் அரசன் மகிழ்ச்சியடைந்து அந்தப் பிராமணனுக்குத் தேவையான பொருள் கொடுத்தனுப்பினான். ஆதலால் வேந்தன் தேவனுக்குச் சமானமாவான். அவனுக்கு அடங்கி வாழ்வதே குடிகளுக் கழகு"— என்று கூறினார்.

தருமபுத்திரர் இதைக்கேட்டுச் சந்தோஷமடைந்து, "ஸ்வாமி, ஸ்திரீகளுடைய பதிவிரதா தருமத்தின் மகிமையையும் தாய் தந்தையரைத் தெய்வமாகக் கருதி அவர்களைப் பூசித்தவரின் மகிமையையும் விளக்கக்கூடிய கதை யொன்று கேட்க விரும்புகின்றேன்" என்றார்.

மார்க்கண்டேயர், "தருமநந்தனா, மகிழ்ந்தேன். நல்ல கதை நினைவுக்கு வருகிறது. கேள்—

வசிஷ்டபுரம் என்றொரு பட்டணம். அதில் கௌசிகன் என்றொரு பிராமணனிருந்தான். அவன் வசிஷ்ட மகரிஷியிடம் படித்து வந்தான். அப்பொழுது ஒரு நாள் வெயில்வேளையில் எங்கேயோ போய்வந்த அவன், ஒரு மரத்தின் நிழலிலே போயொதுங்கினான்.

அப்பொழுது அம்மரத்தின் மீதிருந்த ஒரு கொக்கானது எச்சமிட்டது. அது அவன் உடம்பிலே விழுந்தது. அதனால் அவன் கோபங்கொண்டு மரத்தின் மேலே பார்த்தான். பார்த்த மாத்திரத்தில் அந்தக் கொக்கு எரிந்து நீறாய்விட்டது. இதனாலே அவன் தன்னை அரிய பெரிய தபோமகிமை யுடையவனென மதித்து இறுமாப்படைந்து, அந்த நிலையிலேயே அங்கிருந்து புறப்பட்டு ஓர் அக்கிராரத்துக்குப் போய் ஒரு பிராமணன் வீட்டுத் தலைவாயிலில் நின்று 'பிக்ஷாந் தேகி' என்றான். அந்த வீட்டுக்காரி அப்பொழுது தன்னுடைய கணவனுக்கு ஏதோ பணிவிடை செய்து கொண்டிருந்தாளாதலால், அந்தப் பணிவிடையைச் செய்து முடித்துவிட்டு அன்னமெடுத்துவந்தாள். தன்னை இவ்வாறு காக்கவைத்த படியால் அந்தப் பிராமணன் சினங்கொண்டு, 'ஓ! ஓர் அதிதிக்கு உபசாரஞ் செய்வதினும், உன் கணவனுக்குப் பணிவிடை செய்வது பெரிதா?' என்று கேட்டு அந்த மாதை உறுத்துப் பார்த்தான். அம்மாது, அவனுடைய பார்வையைக் கண்டு நகைத்து, 'ஓகோ! கொக்கென்றெண்ணினை போலும்! அந்தண! நீ அறியாதவன்! உனக்குத் தருமத்தின் வழிதெரியாது. இன்னும் நீ பக்குவப் படவில்லை. இதற்குள் நீ எல்லாமுணர்ந்தவனாகவும் தவசித்தி யடைந்துவிட்டதாகவும் எண்ணி இறுமாப்புக் கொண்டுவிட்டாய்! இன்னும் நீ சாஸ்திர விசாரணையும் சாது சங்கப் பழக்கமும் பெறவேண்டும். ஒரு மாது தன்னைக் காத்துக்கொண்டு தன் தலைவனைப் பூசித்தலே அவளுக்குத் தருமம். புருஷனே அவளுக்குத் தெய்வம், தவம், நோன்பு, யாவும் அவனேயாவான்.

இப்படியே வேதம் சொல்லுகிறது. ஆகையினால் ஒரு மாதுக்குக் கணவனுடைய பணிவிடைதான் பெரிது. அச்சமயத்தில் ஜகதீசனே வந்தாலும் அவர்கள் அவனைக் கவனிக்கமாட்டார்கள்' என்று கூறி, 'இந்தத் தரும நியாயந் தெரியாமல் கோபங் கொள்வது அழகல்ல' என்றாள்.

கௌசிகன், 'இது என்ன விநோதம்! நான் கொக்கை நோக்கி எரித்தது இம்மாதுக்கு எப்படித் தெரிந்தது? கற்பின் மகிமையிது போலும்!' என்றெண்ணி அவ்வம்மையிடம் வேறு பேச அஞ்சிப் பணிந்தான். அம்மாது அவனை நோக்கி 'மிதிலையில் தருமவியாதனென்றொரு வேடனிருக்கின்றான். அவனிடஞ் சென்றால் தரும சந்தேகங்களும் நீதிகளும் விளங்கும்' என்றாள். கௌசிகன் உடனே அம்மாதைப் பணிந்து விடை கொண்டு மிதிலாநகரம் போய்த் தருமவியாதனைக்கண்டான். தருமவியாதன் இறைச்சி விற்கும் ஈனத்தொழிலுடையவன். அவன், கௌசிகன் அங்குப் போன அச்சமயம் முகங்கொடுத்துப் பேசாமல் 'சற்று அங்கு வீற்றிரும்; இதோ வருகிறேன்' என்று கூறித் தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு பிறகு கௌசிகனைத் தன்னிடமழைத்து, 'இன்னார் சொல்லியனுப்ப வந்தவரல்லவா நீர்?' என்று கேட்டு, அவனுக்கும் கற்புடையமாதுக்கும் நடந்த வரலாற்றைக் கூறினான்.

இதைக்கேட்டதும் கௌசிகன், மிக வியப்படைந்து, 'இப்படிப்பட்ட உத்தமர்களை நாமெப்படி எளியவர்களென்று நினைப்பது?' என்று கருதி வாய் பொத்தியபடியே சிரங்குனிந்து நின்றான். தருமவியா

தன், ' நீர் இவ்விடம் வந்த நோக்கம் நானறிவேன், புன் தொழிலைச் செய்துவரும் 'நான் நீர் விரும்பும் தரும நியாயத்தை எப்படி யறிவேன் ?' என, கௌசிகன், ' உள்ளும் புறம்பும் அறியவல்ல இப்படிப்பட்ட அறிஞர்களெல்லாம் இவ்வாறு தங்களைத் தாழ்த்திக் கொண்டு மிக வணக்கமாய்ப் பேசுகையில், நான் கொக்கையெரித்ததை ஒருபெரிய செய்கையா யெண்ணி இறுமாப்புக் கொண்டேனல்லவா ? என்னிலும் மூடனுண்டோ ?' என நினைத்து அகங்காரமடங்கித் தலை வணங்கிக் கை கட்டி நின்றான். இதைக்கண்ட அந்தத் தருமவியாதன், ' இவ்வந்தணன் இப்பொழுது தன் குற்ற முணர்ந்திருக்கிறான். இவனுக்குச் சில தரும இரகசியங்கள் சொல்ல வேண்டும் ' என்று கருதி உடனே கௌசிகனைத் தன் வீட்டிற்கழைத்துப் போனான்.

வீட்டில் கௌசிகன் தருமவியாதனை நோக்கித் ' தெய்வ சொரூபமாய் விளங்கும் நீர் இப்படிப்பட்ட ஈனத்தொழில் செய்யத் தலைப்பட்டதெப்படி ?' என்று கேட்டான். தருமவியாதன், முகமலர்ச்சியுடன் ' ஐயா, கௌசிகரே, இது எனது மரபிற்குரிய தொழில் ; அத்தொழில் செய்வது இழிவல்ல, குலத் தொழிலை நடத்தாவிடில் இராஜதண்டனையு முண்டு. நான் இந்தத் தொழில் செய்கிறேனாலும் வருகிற லாபத்தில் ஒரு பங்கு தருமத்துக்கும், ஒருபங்கு என் உறவினர்க்கும் பகிர்ந்து கொடுத்து எஞ்சியதையே நான் உபயோகித்துக் கொள்கின்றேன். என் தாயையும் தந்தையையும் தெய்வமாகவெண்ணி நாடோறும் அவர்கள் விரும்புவன தெரிந்துதவி அவர்கள் ஆசீர்வாதம் பெற்று வருகிறேன். பிறர் பொருளைக் கவராமலும் துஷ்டர்களு

டைய சகவாசஞ் செய்யாமலும் தெய்வ தூஷணம் பெரியோர் நிந்தனை புரியாமலு மிருந்து வருகின்றேன். வேதங் கூறுகிறபடி விரதமநுஷ்டித்து வருகிறேன். எல்லோரிடமும் அன்பு பாராட்டி யாவும் ஈசன் செய லென மதித்திருக்கிறேன். பிரமசரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம்—என்னும் நான்கு ஆசிர மங்களுக்குள் எதை அனுஷ்டித்தாலும் அதற்குரிய வழிதவறாமல் உறுதியாயிருந்து நல்ல கருமங்களைச்செய் பவனே நற்கதிபெறுவான். அவனுக்கு எல்லா உண்மை களும் விளங்கும்'—என்றான்.

கௌசிகன் கேட்டு மனமுவந்து 'இன்றே யென் ஆயுள்நாளில் புண்ய தினமாகும். இனி நான் உய்ந்தேன். அந்தோ! வீண் இறுமாப்பிலாழ்ந்து அழியவிருந்தேன். என்னுடைய எந்தப் புண்ய வசத்தாலோ உங்களைத் தரிசித்து அரிய உபதேசம் பெற்றேன்—' என்றுரைத் தான். தருமவியாதனும் அவனிடம் சந்தோஷமடைந்து வீட்டிற்குட் சென்று தன் தாய் தந்தையர்களுக்கு ஸ்நா னஞ் செய்வித்து அவர்களைப் பூசித்து அன்னபானா திகள் கொடுத்துபசரித்து அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றான்.

கௌசிகன் தருமவியாதனுடைய ஒழுக்கங்களை யெல்லாம் கவனித்துக்கொண்டு தானும் அவ்வாறே நடந்து நற்கதி பெறத் தீர்மானித்து அவனிடம் விடை கொண்டு புறப்பட்டு முதலிற் சந்தித்த பிராமண ஸ்திரீ வசிக்கும் ஊர்போய் அவ்வம்மையைக் கண்டு பணிந்து தான் தருமவியாதனைக் கண்டதையும் அவன் போதித் ததையுங் கூறி விடைகொண்டு தன் ஊருக்குப் போய்ச் சேர்ந்தான்:—என்றுரைத்து, தருமநந்தனரே, மகா

பதிவிரதா சிரோமணியாகிய திரௌபதியினுல் உங்களுக்கு இம்மை மறுமை இரண்டுபேறும் கிடைக்கும்'' என்ருர்.

அப்பால் தருமபுத்திரர், மார்க்கண்டேய முனிவரை நோக்கி, ''ஸ்வாமி, குமாரஸம்பவத்தைப்பற்றிக் கொஞ்சம் கேட்க விரும்புகிறேன்'' என்று கேட்டார்.

மார்க்கண்டேயர் சந்தோஷமடைந்து, இது கேட்கத்தக்கது. இதனுல் பரமபுண்ய முண்டாம். கூறுகிறேன்.—

''தேவர்களுக்கு எப்போதும் அசுரர் பகைவர். பகைவராகிய அவர்கள் மரபிலே சூரபத்மன், தாருகன், சிங்கமுகன் என்னும் மகாபராக்ரம சாலிகளாகிய அசுரர்கள் தோன்றினர். அவர்கள் தவமிருந்து அரியபெரிய வரங்களைப் பெற்றிருந்தனர். வரங்களின் பலத்தால் அவர்கள் தேவர்களுக்கு இடையூறு செய்துகொண்டு நிர்ப்பயமாய் வாழ்ந்து வந்தார்கள். அவர்களை யொழிப்பதன் பொருட்டுத் தேவர்கள் பரமசிவனிடம் போய் முறையிட்டுக் கொண்டார்கள். அவர் தம் நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதிலிருந்து ஒரு பொறி தோன்றியது. அதனை அக்நிதேவன் எடுத்துக்கொண்டு போய்க் கங்கையிலே விட்டான். கங்கை அதனைச் சரவணப் பொய்கையில் ஒதுக்கியது. அந்தப்பொறி சரவணப் பொய்கையிலே ஆறு குழந்தைகளாக உருக்கொண்டு விளையாடியது.

அப்பொழுது அங்குப் பார்வதி தேவியாரும் பரமசிவனும் வந்தார்கள். பொய்கையில் குழந்தைகள் விளையாடுவதைக் கண்ட உமாதேவியார் அக்குழந்தைகளைத் தமது இருகரங்களாலுஞ் சேர்த்து எடுத்தார்.

எடுக்கையில் அக்குழந்தைகள் ஒருடலும் ஆறு தலையுங் கொண்டு ஒரு குழந்தையாகச் சேர்ந்தன. அது கண்ட அம்மையார்மகிழ்ந்து பரமசிவனிடம் அதைக்காட்டிவியந் தனர். பரமசிவன், "இவன் நமது பிள்ளை. இவன் அமரர் சிறைமீட்டு அசுரர்குலத்தை அழிக்கத் தோன்றியவன்" என, தேவியார் அந்தக் குழந்தையை, அங்குத் தவம் புரிந்துகொண்டிருந்த கார்த்திகைப் பெண்கள் அறுவரி டமுங் கொடுத்துப் பாலூட்டி வளர்த்து வரப் பணித்துச் சென்றனர். அவர்கள் அவ்வாறே பாலூட்டிக் குமாரக் கடவுளை வளர்த்து வந்தார்கள்.

அவர், வளர்ந்துவருகையில் அநேகவிதமான திரு விளையாடல்களைச் செய்தார். அந்த விளையாட்டினால் அண்டங்கள் கிடுகிடுத்துப் போயின. அப்படித் தம்முல கம் நடுங்கும்படி செய்வது யாரென்று தேவேந்திரன் விசாரிக்கையில், சில தேவர்கள் ஓடி "அக்நி தேவ னுக்குச் சரவணத்திலே பிறந்த சிறு பிள்ளையானது ஆறு தலைகளுடனும் பன்னிரண்டு கண்களுடனும் கூடி யதாய் இவ்வாறு விளையாடிப் பயத்தை உண்டாக்கு கிறது" என்றார்கள்.

தேவேந்திரன் கேட்டுப் பெரும் படைதிரட்டிக் கொண்டுவந்து ஆறுமுகப் பெருமானையெதிர்த்து அமர் புரிந்து தோல்வி யடைந்தோடித் தன் குருவைப் பணிந்து தான் ஆறுமுகப் பெருமானாகிய பையனுக்குத் தோற்றதைக்கூறி, "இவன் யாவன் இவ்வாறு தோன்றி யிருக்கிறான்?" என்று வினவினான். தேவகுருவாகிய பிரஹஸ்பதி பகவான், "இக்குமரன் நமது குறை நீக் கத் தோன்றியவன்; அசுரர்களை அழிக்க வந்தவன். சிவ பெருமான் முன் வாக்களித்தபடி இந்த ஈசனை நமக்கு

உதவியிருக்கிறார். இவரோடு அமர்புரிவதழகல்ல. அமர் புரிந்தாலும் ஒருகாலும் நாம் இவரை வெல்ல முடியாது; ஆகையினால் நாம் கைலாசபதியாகிய சிவ பெருமானிடம் போய் இதனைச் சொல்லவேண்டும். அவர் விரைவில் அசுரர்களை ஒழித்து நமது இடர் நீக்கும்படி இந்தப் பாலகனுக்குக் கட்டளையிடுவார். இதுதான் நாம் செய்ய வேண்டுவ திச்சமயம்" என்றார்.

உடனே தேவேந்திரன் தேவர்களோடு சிவபெருமானிடம் போய், "பிரபுவே, எங்களைக் காக்கவேண்டும்! காக்கவேண்டும்!" என்று முறையிட்டுப் பணிந்து துதித்தார்கள். சிவபெருமான், "விரைவில் உங்கள் குறையை நீக்குவோம்! நீங்கள் போகலாம்" என்று தேவர்களை அனுப்பிவிட்டுக் குமாரக்கடவுளைத் தமது ஸந்நிதிக்கு வரவழைத்துச் சூரபத்மன் முதலிய அசுரர்களை யொழித்துத் தேவர்சிறை மீட்டருளப் பணித்தார்.

அப்பால் குமாரக்கடவுள், அசுரர்களோடு அமரிடத் தொடங்கி எல்லோரையும் ஒழித்து அசுரர் தலைவனாகிய சூரபத்மனைத் தனக்கு வாகனமாகிய மயிலாகவும் தனக்குக் கொடியாகிய கோழியாகவும் கொண்டார். இவ்வாறு இடர் நீங்கிய தேவேந்திரன் தன் பெண் தேவகுஞ்சரியம்மையைக் குமாரக் கடவுளுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். பரமசிவன், "நம்மைத் துதித்து வணங்கியவர் பெறும் பயன் யாவும் நமது குமாரனாகிய ஆறுமுகப் பெருமானை வணங்கித் துதிப்பவர்கட்கும் கிடைக்கும்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

பிறகு தேவர்களெல்லோரும் குமாரக் கடவுளை வணங்கித் துதித்துப் பூசித்து இஷ்டார்த்த சித்திகளைப்

பெற்று வந்தனர். அக்கினிதேவனால் கங்கையில் விடப்பட்டபடியினால் அவர்க்குக் காங்கேயன் என்று ஒரு பெயர். கார்த்திகைப் பெண்கள் அறுவர் அவர்க்குப் பாலூட்டி வளர்த்தபடியால் அவர் கார்த்திகேயன் என்னுமொரு திருநாமம் பெற்றார்; அப்பால், தினைப் புனத்தில் வள்ளியம்மையை மணந்து கொண்டார். இவர் திருச்செந்தூர் முதலிய திவ்யஸ்தலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கிறார். இவர் மகிமை பெரிது—என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சிவசுப்ரமண்யக் கடவுளின் அவதார வைபவம் கேட்டுப் பரமானந்தமடைந்த தருமபுத்திரர், மார்க்கண்டேயரைப் பணிந்து, "ஸ்வாமி, தமது திருவருளால் ஸ்ரீ குமார ஸம்பவம் கேட்டு மகிழும் பாக்கியம் பெற்றேன்" என்று கூறி இன்னும் பல விஷயங்களைப்பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அத்தியாயம்—19

ஸத்தியபாமைக்கும் திரௌபதிக்கும் ஸம்வாதம்

பாண்டவர்கள் இவ்வாறு தரும விசாரணை செய்து கொண்டிருக்கையில், திரௌபதியும் ஸத்தியபாமையும் பல விஷயங்கள் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், ஸத்தியபாமை திரௌபதியைப் பார்த்து, புன்னகையுடன், "இவ்வுலகத்தில், ஒரு மாது தன் கணவனுடைய மன விருப்பப்படி நடப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது! என்ன உபசாரங்கள் செய்தபோதிலும் கணவன் கோபிக்கிறான். வேறொரு மாதினிடம் இச்சை வைத்துக்கொண்டு தன்

மனைவியைச் சில சமயம் நீக்கியும் விடுகிறான். பெரும்பாலும் உலகம் இந்த விதமாகத்தா னிருக்கிறது. இப்படியிருக்க நீ எந்தவிதமாக உன் கணவன்மாரிடத்தில் அவர்களுடைய மனங்கோணாமல் நடந்து அவர்களை உன்னிடம் அன்பு பாராட்டும்படி செய்கிறாயென்பது எனக்குத் தெரியவில்லை. நான் என்னாலானமட்டும் என் நாதனை வசப்படுத்தப் பார்க்கிறேன்; முடியவில்லை. சில சமயம் நான் அவரை வசப்படுத்தி விட்டதாய் இறுமாப்படைவதுண்டு. அப்படி இறுமாப்படைந்த மறு கணமே அதற்குப் பங்கம் வந்துவிடுகிறதே! இதற்கென்ன செய்வது ?'' என்று கேட்டாள்.

திரௌபதி, "நல்ல கேள்வி கேட்டாய்! உலகத்தில் தோன்றும் உயிர்களிலெல்லாம் ஸ்திரீ ஜன்மம் மகா பாவமுடையது என்று கூறுவதுண்டு. ஆனால் ஸ்திரீ ஜன்மத்துக்கு மேலான புண்ய ஜன்மமுமில்லை. அஃதெப்படியெனில், அக்நி சாட்சியாக மணந்த மணவாளனைத் தனக்குத் தெய்வமாகக் கொண்டு, காலமறிந்து அவனுக்கு உண்டியுதவி, அவன் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாமலிருந்து, அவனோடு ஒற்றுமையாய் வாழ்ந்து வருவாளாகில் அதைவிட அவளுக்கு வேறு புண்ணியங்களில்லை. அப்படி நடப்பதொழிந்து வேறு வழியில் நடப்பதெல்லாம் பாவமேயாம். ஆகையினால், மாதர்கள் தங்கள் கணவன்மாரிடத்தில் மாறாத அன்புடையவர்களாய், அவர்கள் உள்ளக் கருத்தைக் குறிப்பினாலறிந்து பணிவிடை செய்து வீட்டு வேலைகளைச் சரிவரக் கவனித்து வருவார்களானால், அந்நியோந்ய தாம்பத்தியம் ஏற்படாமலிராது. ஒருவர்க்கொருவர் அன்பு பாராட்டுவதென்பது அவரவர் நடந்துகொள்

ளும் தன்மையைப் பொறுத்ததாயிருக்கிறது. அதிலும் ஒரு மாது தன் கணவனுக்கு அடங்கி நடக்கவேண்டியவளாகையினால் அவள் அவ்வாறு நடந்து வருவாளானால் கணவன் எப்படி மாறாக நடப்பான்? இதனை அறியாத சிலர் தங்கள் புருஷனை வசப்படுத்த மருந்து எங்கேனு மிருக்கிறதா? மந்திரம் எவரேனுஞ் செய்வார்களா? என்று தேடுகிறார்கள். சிலர் அணிகலங்களாலும் ஆடைகளாலும் அழகு செய்துகொண்டு மயக்கப் பார்க்கிறார்கள்; சிலர் பிடிவாதத்தினாலும் கோபத்தினாலும் வசப்படுத்தப் பார்க்கிறார்கள். இவையெல்லாம் தீராத துக்கத்திற்கு இடமாகுமே தவிர நன்மையைத் தரா. உனக்கென்ன குறைவு? ஜகத் பிரபுவாகிய கிருஷ்ண பகவானையே நாயகனாகவடைந்த உன்னுடைய பாக்கியம் யாருக்குண்டு? அவருக்குச் சகலமுந் தெரியும். அவர் அன்பு பாராட்டுவதும் கடிந்துகொள்வதும் உன்னுடைய நன்மையின் பொருட்டே யிருக்குமல்லது வேறு விதமாயிராது. கேள்—நான் என் கணவன்மார்களுடைய மனத்துக்கு எந்த விதத்திலும எக்காலத்திலும் வேறாக நடப்பதில்லை. அவர்கள் 'எள்' என்று கூறுவதன் முன் 'எண்ணெய்' என்று வந்து சொல்வேன்; அவர்களுடைய உறவினரையும் நண்பர்களையும் அவர்களைப் போலவே உபசரிப்பேன்; அவர்களுக்கு ஒரு கவலையுங் கொடுக்கமாட்டேன். நானே எல்லாவற்றையும் மேல் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வேண்டியவற்றைக் க்வனித்து வேலைகளை ஒழுங்காய்ச் செய்து வருவேன். ஆடையாபரணங்களை அவர்கள் மகிழ அணிவதுண்டு. அதற்குத் தக்க சமயம் எதுவோ அப்பொழுதே அவற்றை அணிந்துகொண்டு மற்றக் காலங்களில் பணியாள் போலிருப்பேன். இப்படிப்பட்ட செய்

கைகளில் நான் தவறி நடக்கமாட்டேன். இதனாலே தான் அவர்கள் என்னிடம் அன்பு செலுத்துவது"— என்று பதிவிரதா தருமத்தை விளக்கி யருளினாள்.

ஸத்தியபாமை அதைக்கேட்டு, மகிழ்ச்சியடைந்து, "நல்லவர்களைக் காண்பதனாலடையத்தக்க பயனெதுவோ அதனையடைந்தேன்" என்றாள். அப்பொழுது கிருஷ்ண பகவான் பாண்டவர்களிடம் விடைகொண்டார். அதனை யறிந்த ஸத்தியபாமையும் திரௌபதியினிடம் அன்போடு விடைகொண்டு புறப்படச் சித்தமானாள். பிறகு இருவரும் புறப்பட்டுத் துவாரகை சென்றனர். போகும் போது, ஸத்தியபாமை தான் திரௌபதியினிடம் கேட்ட கேள்வியையும் அவள் அதற்கு விடை பகர்ந்ததையுங் கூறினாள். பகவான், அதைக்கேட்டுத் திரௌபதியின் புத்திசாலித் தனத்திற்காக அவளைப் புகழ்ந்து மகிழ்ந்தார்.

அத்தியாயம்—20

பாண்டவர் பெருந்தன்மை

கிருஷ்ண பகவானும் ஸத்தியபாமையும் இவ்வாறு புறப்பட்டுப் போனபிறகு, மார்க்கண்டேயரும் பாண்டவர்களிடம் விடைகொண்டு புறப்பட்டுத் தமதாசிரமத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அப்பால் பாண்டவர்கள் தாங்கள் பெரியவர்களிடம் கேட்ட தருமோபதேசங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கையில், அத்தினபுரத்திலிருந்து ஒரு பிராமணன் அங்கே வந்தான். அவன் பாண்டவர்களைக் கண்டு, க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டு

பிறகு அத்தினபுரம் போய்த் திருதராஷ்டிரனைக் கண்டு, பாண்டவர்களின் கஷ்ட நிலைமையைக் கூறிக் கண்ணீர் விட்டு வருந்தினன். அதைக் கேட்ட திருதராஷ்டிரன், "அந்தோ! இராஜாதி ராஜனயிருந்து ஆளவேண்டிய வனல்லவா தருமபுத்திரன்? அவன் கதி இப்படியா யிற்றே! 'உன் தம்பி மக்கள் காட்டிற் பெருந் துயரப் படுகிறார்கள்' என்றுகூறக் கேட்டும் நான் உயிரைச் சுமந்துகொண்டிருக்கிறேனே" என்று வருந்தினன்.

இவன் இவ்வாறு வருந்தினனெனினும் துரியோத னதியர் பாண்டவர்களின் நிலைமையைக்கேட்டு மிகுந்த சந்தோஷ மடைந்தார்கள். அவ்வளவோ டிருக்கவில்லை. பாண்டவர்களுக்கு இன்னும் பெரிய கஷ்டத்தையும் துக்கத்தையும் உண்டாக்கவேண்டுமென்கிற எண்ணமுங் கொண்டு ஆலோசனை செய்தார்கள். அப்பொழுது கர் ணன் துரியோதனனை நோக்கி, "நீங்களெல்லோரும் உங் களுடைய ஐசுவரியத்திற்கும் அதிகாரத்திற்கும் பெரு மைக்கும் உரிய ஆடம்பரங்களோடு உங்களுடைய மனைவிமார்களுடன் காட்டிற்குப் புறப்பட்டுப் போய் அங்குக் கூடாரங்களடித்துக் கொண்டு, நீர் விளையாடல், சோலைகளில் மலர்கொய்து மகிழல் முதலியவற்றைச் செய்வீர்களாயின், அவர்களில் ஆடவர்கள் உங்களு டைய செல்வத்தையும் நீங்களநுபவிக்கும் சுகத்தை யுங்கண்டு மனம் நொந்து உயிரை விட்டுவிடுவார்கள். திரௌபதி உங்கள் மனைவிமார்களின் ஆடையாபரணங் களைக் கண்டு பெருமூச்செறிந்து தன் நாயகன்மாரிடம் அழுது புலம்புவாள். இல்லையாயின், அவர்கள் அந்தக் காட்டைவிட்டே ஒழிந்து போய்விடுவார்கள். இது திண்ணம். ஒருவேளை பாஞ்சாலி அவர்களை வெறுத்து

உங்களையே சரண்புகுவதுங் கூடும்'' என்றான். துரியோதனாதியர், இந்த ஆலோசனையை மெச்சிக்கொண்டு "இப்படிச் செய்ய மகாராஜா உத்தரவு கொடுக்கமாட்டாரே, அதற்கென்ன செய்வது?'' என, கர்ணன், "காட்டிற்கு வேட்டையாட வேடிக்கையாய்ப் போய் வர விரும்புவதாக உத்தரவு பெறுவோம்'' என்றான்.

துரியோதனன் சந்தோஷமடைந்து தன் தந்தையிடம், காட்டிற்குப் போய் வேட்டையாடி வருவதாக உத்தரவு பெற்று உடனே பெரும்படை திரட்டிக் கொண்டு முன்னர் ஆலோசனை செய்தபடி எல்லோருடனும் ஆடம்பரமாய்ப் புறப்பட்டுப் பாண்டவரிருக்குங் காட்டிற்கருகே போய் விளையாட்டாய்ச் சிறிதுநேரம் வேட்டையாடினான்; பின் அங்கிருந்த ஒரு தடாகக் கரையிலிறங்கத் தீர்மானித்தான். அங்கு அவர்கள் கூடாரங்களை அடித்தார்கள். அப்பொழுது அவர்களைக் கந்தர்வர்கள் சிலர் தடுத்தார்கள். அதன்பேரில் இருவருக்கும் போர்மூண்டது. போரில், கந்தர்வத் தலைவனாகிய சித்திரசேனன் இவர்களோடு கடும்போர் புரிந்து இவர்களை வென்று எல்லோரையும் சிறைபிடித்து விட்டான். ஸ்திரீகளெல்லோரும் மாரிலடித்துக் கொண்டு தலைவிரி கோலமாய்க் கீழே விழுந்து அழுதார்கள்.

இதைப் பாண்டவர்களறிந்தார்கள். தருமபுத்திரர் அவர்கள்மீது கிருபைகூர்ந்து தம்பி பீமசேனனைப் பார்த்து; "அந்தணர், முதியோர், நோயாளிகள், வித்துவான்கள், மாதர்கள், வறிஞர், சிறுவர், படையிளைத்தோர், அடைக்கலம் புகுந்தோர் இவர்களையெல்லாம் உடனே காக்கும்படி விதி யிருக்கிறது. ஆதலால் நீ போய்த் துரியோதனன் முதலியவர்களை மீட்டு வரக்

கட்வாய்'' என்ருர். இதைக் கேட்டதும் பீமசேனன், "அண்ணு, நல்லது நவின்றீர்கள்! என்ன அநியாய மிது! அடாது செய்தவர்கள் படாது படுகிருர்கள்; துஷ்டர்களுக்கு நாம் உதவி செய்வதாவது, என்ன பேச்சிது! நம்மிடம் இவர்களுடைய வஞ்சனை பலித் தது! அது கந்தர்வனிடம் எப்படிப் பலிக்கும்? இது கடவுளுடைய தண்டனையாகையினுல் இதில் நாம் செய் யத்தக்க தொன்றுமில்லை'' என்ருன். தருமபுத்திரர் நகைத்து, "தம்பி, நீ சொல்வது ஒரு பக்கமிருக்கட்டும். இதைக் கேள். இப்பொழுது இந்தத் துரியோதனுதி யர் கந்தர்வனுல் கொல்லப்படுவார்களாயின், பின் நீ யெங்கே உனது சபதத்தை முடிப்பது?'' என்று கூறவே, பீமசேனன் "அண்ணு! ஆம், அது ஒன்றிருக் கிறது. அந்தச் சபதம் தவறக்கூடாது'' என்று கூறித் தன் தம்பிமார் மூவருடனும் புறப்பட்டுப்போய்க் கந்தர் வனை வளைத்துக்கொண்டான்.

கந்தர்வர்களுக்குத் தலைவனுகிய சித்திரசேனன், பீமசேனன் வந்திருப்பதை அறிந்ததும் தன் இரதத்தி னின்றும் கீழே இறங்கிவந்து, "தீ, வஞ்சகனின் மனைவி, பகைவர், பயிரைக் கெடுக்கும் அநியாயக்காரர், அடிமை கள், திருடர் இவர்களுக்கெல்லாம் இடங் கொடுப்பது கூடாது. உடனுக்குடன் தண்டிக்கவேண்டும். அப் படி யிருக்கிறது நீதி. நீங்களேன் இந்தப் பாவிகளுக் காகத் துணை வந்தீர்கள்? இவர்கள் உங்களைவரையும் திரௌபதியையும் அவமானம் பண்ணித் துன்பப் படுத்த வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு இங்கே வந்தார்கள். இவர்களுடைய இந்த ஆலோசனையை அறிந்த இந்திரன் என்னை யனுப்பினுன். அதன்

பொருட்டு நான் வந்து இந்தப்பாவிகளை யெதிர்த்துப் போராடிச் சிறை செய்தேன்'' என்றான்.

இதைக் கேட்டதும் அர்ச்சுனன், சித்திரசேன னைத் தழுவிக்கொண்டு, "தன் மானம் பிறர் மானம் என்று சொல்வதுண்டல்லவா? அதைக் கவனிக்கவேண்டாமா? எங்களுக்கு அவர்கள் பல வழியிலும் பெரிய இடர்கள் செய்திருந்தாலும் நாங்களும் அவர்களும் போராடுவது தகுமேயொழிய பிறரால் துன்பம் நேரிடும்போது பார்த் திருக்கலாமா? எங்களுக்குள் போர் நேரிடுமாயின் அப் பொழுது நாங்கள் ஐந்துபேரும், அவர்கள் நூறுபேர் களுமாகப் பிரியவேண்டியவர்களே யாவோம். பிறர் எங்களை எதிர்க்கும்பொழுது நாங்கள் நூற்றைந்துபேர் களாகத்தா னிருக்கவேண்டும். தருமபுத்திரரின் ஆஞ் ஞைப்படி நாங்கள் வந்தோம்'' என்றான்.

சித்திரசேனன், "தருமபுத்திரரின் எண்ணமப்படி யாயின், நாம் வேறு பேசுவதற்கில்லை'' யென்று கூறி உடனே தருமபுத்திரரிடம் போனான். தருமபுத்திரர் அவனை எதிர்கொண்டு வரவேற்றுபசரித்தார். அவன் மனமகிழ்ச்சியடைந்து சிறைபிடித்த துரியோதனாதி யரை அவரிடம் விட்டுவிட்டுத் தன் பதிக்கேகினான். தம்முன் தலை கவிழ்ந்துகொண்டு நிற்கும் துரியோத னன் முதலியவர்களைப் பார்த்த தருமபுத்திரர் பரிதா பங்கொண்டு அவர்களைக் கட்டவிழ்த்து விடும்படி தம் முடைய தம்பிமார்களுக்கு உத்தரவிட்டார். பிறகு துரி யோதனனை அழைத்து, "நமது குலத்தின் பெருமை யைத் துஷ்டர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு வீணே கெடுத்துவிட்டாய். எத்தனையோ பேர்களைக் கட்டச் சொல்லவும் விடுவிக்கவும் உனக்கு அதிகார

யிருந்தும், இப்போது நீயே கட்டுப்பாட்டாய்! என்ன செய்யலாம்? இவையெல்லாம் விதியின் பயன்!" என்று பல நீதிகள் கூறி நகரத்துக்குப் போகும்படி அனுப்பி விட்டார். கௌரவ ஸ்திரீகளுக்கெல்லாம் திரௌபதை அநேக உபசாரங்களைச் செய்து நீதிகளை யும் எடுத்துப் பலவாறாகக் கூறி அனுப்பினாள்.

இவ்வாறு மானபங்கமடைந்த துரியோதனன் அத்தினபுரம் போனதும் சும்மா விருக்கவில்லை. அவ னெப்படிச் சும்மாவிருப்பான்? தீமை செய்வதற்கும் பழி பூண்பதற்கும் பிறந்தவனல்லவா அவன்? ஆகை யினால் பாண்டவர்களை யெப்படியாவது ஒழித்துவிட வேண்டுமென்றே தன்னைச் சார்ந்தவர்களோடிருந்து தீர்மானித்துக்கொண்டான். அந்தப் பாண்டவர்களுக்கு இந்திரன் சகாயஞ் செய்பவனா யிருக்கிறானாதலால், நாமொரு இராஜஸூய யாகஞ் செய்து அவிர்ப்பாகம் கொடுக்கும்போது அவனை அவமானப் படுத்தவேண்டும் என்று ஒரு தீர்மானங்கொண்டு அந்த வேள்வி செய்யத் தொடங்கினான். தந்தையாவது, தமையனாவது இருக் கும்போது அதைச் செய்ய ஒரு வேந்தனுக் கதிகார மில்லையென்று பெரியோர் கூற, அதைவிடுத்து வைணவ யாகம் என்னும் ஒரு வேள்வியைச் செய்து முடித்தான்; அந்த வேள்விக்குப் பாண்டவர்களை அழைத்தான். தருமபுத்திரர், "இன்னும் எமது வனவாசம் கழிய வில்லை யாதலால் நாங்கள் நாட்டுக்கு வரத்தகாதவர்கள்" என்று கூறி மறுத்துவிட்டார்.

அத்தியாயம்—21

ஈசன் திருவருட் பிரபாவம்

இப்படியிருக்கையில், ஒருநாள் பாண்டவர்களிடம் முன்போல் வியாஸர் வந்தார். அவர் தருமபுத்திரரை நோக்கி "நீ அன்னதானம் செய்து வருகிறுய்; உனக்குக் குறைவு வராது" என்ருர். தருமபுத்திரர், "இந்தக் காட்டில் அலையும் நான் எப்படி அப்படிப்பட்ட புகழ்ச் சிக் குரியவனுவேன்?" என, வியாஸர், அக்ஷய பாத் திரத்தினுதவியால் அநேகருக் கன்னமிடுகிருயல்லவா? அதன் பயன் வீணுகாது. கேள்—முத்கலர் என்ருெரு முனிவரிருந்தார். அவர் தானங்களில் அன்னதானஞ் சிறந்ததென்றுணர்ந்து, பிறர் பொருளைக்கொண்டு எந்த தானமுஞ் செய்வது கூடாதென்று கருதி மலைகளிலும் கழனிகளிலும் உதிர்ந்து கிடக்கும் நெற்களைப் பொறுக்கி வந்து அரிசியாக்கிச் சமைத்துத் தானஞ்செய்தது போக மிகுந்ததைத் தாமுண்டு வந்தார். இப்படியிருக்கும் அவரிடம் தூர்வாஸரென்னும் மகரிஷி வந்து அன்னங் கேட்டார். அவருக்கு அவர் திருப்தியாக அன்னமிட்டார். அப்படி அவரைத் தூர்வாஸர் பலமுறை பரிசோதித்து அவருடைய பொறுமையை வெளியிட்டார். பிறகு அந்த முத்கலமுனிவர் மேலான முத்தியை யடைந்தார். ஆதலின் அன்னதானத்தை விடச் சிறந்ததொரு தானமுமில்லை" என்று கூறி, "விரைவில் நீங்கள் அரசு பெற்றுச் சுகமா யிருப்பீர்கள்" என்று தேறுதல் செய்து விடைகொண்டு தம்மிடம் சென்ருர்.

அதன் பின்பு ஒருநாள் அந்த வனத்திற்குத் தூர்வாஸமகரிஷி தமது சீடர் பலருடன் வந்தார். அப்பொழுது பாண்டவர்கள் பிராமணர்களுக்கு அக்ஷயபாத்திரத்தினுதவியால் அன்னமிட்டுத் தாங்களும் காய்கனிகளுண்டு பல விதமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். தருமபுத்திரர் மகரிஷியைக்கண்டதும் அவருக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து ஆற்றுக்குப் போய் நீராடி வரும்படி அனுப்பினர். மகரிஷி தமது சீடர்களுடன் ஆற்றுக்குப் போனபின் பாண்டவர், "நாம் இன்று எவ்வாறு இந்த அதிதிகளுக்கு அன்னமிடுவது? அக்ஷயபாத்திரத்தினுதவி நாளையதினந்தானே கிடைக்கும்?" என்றெண்ணிக் கவலைகொண்டிருந்தார்கள்.

திரௌபதி, ஆபத்பாந்தவனாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தியானித்தாள். கிருஷ்ணபகவான் உடனே அங்குத் தோன்றி வெகு பசியாயிருக்கிறதென்று கூறித் திரௌபதியினிடம் அன்னங் கேட்டார். அவள் என்ன செய்வாள் பாவம்! மனங்கலங்கித் தங்களுடைய அச்சமயநிலையைச் சொல்லி மனம் வருந்தினள். பகவான் உடனே அக்ஷயபாத்திரத்தைக் கொண்டு வரும்படி சொல்லி, அதைப் பார்த்தார். அதிலொரு சோற்றுப் பருக்கையும் கீரையும் ஒட்டிக் கொண்டிருந்தன. அவற்றையெடுத்துத் தண்ணீரோடு கலந்து "ஸர்வாந்தரியாமியாகிய ஜகதீசன் திருப்தியடையட்டும்" என்று கூறிக் குடித்தார். இவர் இப்படி இதனைக் குடித்த அப்பொழுதே ஆற்றுக்கு நீராடச் சென்றிருந்த ரிஷியும் ரிஷியின் சீடர்களும் வயிறு நிரம்பியவர்களானார்கள். உடனே ரிஷி இப்படி நமக்கு வயிறு நிறைந்திருக்கக் காரணமேதென நினைத்து, "இது கிருஷ்ண பகவானு

டைய திருவிளையாடல்'' என்றறிந்து அங்கிருந்தபடியே தமதிருப்பிடம் போய்விட்டார்.

இவர் ஒரு சமயம் துரியோதனன் வீட்டிற்குப் போய் அவனைப் படாதபாடு படுத்தினார். இவர் கோபக் க்ாரர். ஆகையினால் துரியோதனன் பயந்துகொண்டு மிகவும் பொறுமையாய் இவர் விருப்பப்படி உண்டியுதவி உபசரித்தான். அவனிடம் சந்தோஷமடைந்த ரிஷி "உனக்கென்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டார். துரியோதனன், பாண்டவர்களை அழிக்க வேண்டுமென்கிற எண்ணமுடையுவனாகையினால், அவர்களை இந்த ரிஷியினுடைய கோபத்திற் குள்ளாக்கி அழிக்க வெண்ணி, "ஸ்வாமி, தாம் அவர்களிடம் அதிதியாகப் போகவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். அதன்படி வந்தவர் இவர். பகவானுடைய துணைகொண்டவர்களிடம் ரிஷிகளுடைய கோபமும் தாபமும் துரியோதனன் சூழ்ச்சியும் என்ன செய்யும்?

அத்தியாயம்—22

ஜயத்ரத பங்கம்

ஒரு நாள் பாண்டவர்கள் தங்கள் பர்னசாலையை விட்டு வெளியே போயிருந்தார்கள்; திரௌபதி மாத்திரம் பர்னசாலையில் தனியே இருந்தாள். கௌட தேசத்து அரசனுடைய கன்னிகையின் சுயம்வரத்திற்குப் போயிருந்த ஜயத்ரதன் என்பவன் அவ்வழியே வந்தான். அவன் பாண்டவர்களின் தங்கை துச்சலையின் புருஷன். திரௌபதி அவனை வரவேற்று மரியாதையோடு உபசரித்தாள். ஜயத்ரதன் அவள்மேல்

ஆசைகொண்டு அவளைப் பார்த்துத் தான் கொண்ட ஆசையை உணர்த்தும்படியான சில வார்த்தைகள் பேசினான். திரௌபதி அவற்றைக் கேட்கப் பொறுமல் செவியை இருகரங்களாலும் அடைத்துக்கொண்டு, "அந்தோ! உறவு பாராட்டி உபசரித்ததின் பயனா இது? கிருஷ்ணா கிருஷ்ணா! சிவசிவா!" என்று கத்திக்கொண்டு அருகிலிருந்த தௌமியருடைய பர்னசாலையை நோக்கி இரண்டடி யெடுத்து வைத்தாள். ஜயத்ரதன் உடனே அவளைத் தூக்கியெடுத்துத் தன் இரதத்தில் வைத்துக் கொண்டு இரதத்தைச் செலுத்தச் சாரதிக்கு உத்தர விட்டான். இரதம் நகரவே திரௌபதி போட்ட கூச்சலைக் கேட்டுத் தௌமியர் அங்கு வந்து அவனைத் தடுத்தார். அவன் அவர் பேச்சைக் கேட்காமல் அவரை மீறிக்கொண்டு இரதத்தைச் செலுத்தினான்.

சற்றுநேரத்தில் பாண்டவர்கள் பர்னசாலைக்கு வந்து விட்டார்கள். அவர்களுக்கு இச்செய்தியைத் தௌமியர் கூறவே அவர்களில் பீமனும் அர்ச்சுனனும் புறப்பட்டு வேகமாய்ச் சென்று ஜயத்ரதனை மடக்கிக் கொண்டு போர்புரிந்து அவனை நையப் புடைத்துக் கதறவடித்துத் திரௌபதியை மீட்டார்கள்; ஜயத்ரதனைப் புடைத்ததோடு விடாமல், அவன் தலை மயிரை ஐந்து பிரிவாக்கி முடிபிட்டு முகத்தில் கரியை அப்பித் தழைகளை வைத்துக் கட்டிச் செம்புள்ளி குத்தி, "அடே துரோகி! நீ பிழைக்க வேண்டுமானால் நாங்களிடும் பெயரை நீ மும்முறை இங்கே கூறுவதன்றித் தருமபுத்திரர் முன்பும் கூறவேண்டும்! தெரிந்ததா?" என்று கேட்டார்கள். ஜயத்ரதன் என்ன சொல்வான்! பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடக்கிறானதலால், " அப்படியே

சொல்லுகிறேன்'' என்ருன். பீமசேனன், ''நான் பாண்டவ தாஸன் என்று மூன்று முறை சொல்'' என்ருன். அவன் உடனே 'நான் பாண்டவ தாஸன்' என்று மூன்று முறை சொன்னுன்.

பிறகு அவனை அவர்கள் தருமபுத்திரரிடம் அழைத்துப்போய் அங்கே அவர் முன்னிலையில் நிறுத்தி ''அடே நீயார்?'' என்று பீமசேனன் கேட்டான். ஜயத்ரதன் தலைகவிழ்ந்து கொண்டபடியே ''நான் பாண்டவ தாஸன்'' என்ருன். பீமசேனன் ''அடே! தலையை நிமிர்ந்து தருமநந்தனரைப் பார்த்து, உன்னை எல்லோரும் இன்னுரென்று நன்ருய்த் தெரிந்து கொள்ளும்படி உன் பெயரை உரக்கச் சொல்லு'' என்ருன். ஜயத்ரதன் தலையை நிமிர்ந்துகொண்டு ''நான்தான் பாண்டவ தாஸன்'' என்று உரத்துக் கூறினுன். அதைக்கேட்டுத் திரௌபதி முதலிய மாதர்களெல்லோரும் நகைத்தார்கள். தருமபுத்திரர், ''இவன் மீசை எங்கே?'' என்று கேட்டார். பீமசேனன், ''இவன் மீசையுடைய வீரனுயின் முறை தப்பி நடப்பானு?'' என்ருன். தருமபுத்திரர், ''இவன் தலைமயிர் ஐந்து பங்கானதேன்?'' என, பீமசேனன், ''இவன் குலத்தையும் கோத்திரத்தையுங் கெடுத்த பாவியாகையினுல் ஐந்து குடுமித் தலையனுனுன்'' என்ருன்.

தருமரிவற்றைக் கேட்டு நகைத்து ஜயத்ரதனை நோக்கி, ''அந்தோ! தாய், தந்தை, தமர் என்கிற முறையைக் கவனியாமல் நடந்த உனக்கும் மிருகத்துக்கும் என்ன பேதம்?'' என்று கூறிப் பல நீதிகளை யெடுத்துரைத்து ''உன்நகரம் போய் இனியாகிலும் புத்தியாய்ப் பிழை'' என்றனுப்பினுர். ஜயத்ரதன் தன் சேனையோடு

சேர்வதற்கு வெட்கப்பட்டுக் காட்டில் நெடுந்தூரம் போய்த் தனியே யிருந்து பரமசிவனை நோக்கித் தவ மிருந்தான். பரமசிவன் அவனுக்குக் காட்சி தந்து "நீ விரும்பும் வரம் யாது" என அவன், "நான் பாண்டவர்களை ஜயிக்கும் வல்லமை யுடையவனாக வேண்டும்" என்று கேட்டான். பரமசிவன், "அவர்களை ஒருவராலும் ஜயித்தற்காகாது. ஆயினும், நீ அர்ச்சுனனைத் தவிர மற்ற நால்வரையும் ஒருநாள் ஜயிப்பாய் ?" என்று வரமளித்து மறைந்தார். பிறகு ஜயத்ரதன் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

அத்தியாயம்—23

மார்க்கண்டேயரின் உபந்நியாசம்

பின்னரொருநாள் மார்க்கண்டேய முனிவர் பாண்டவர்க ளிருக்குமிடத்துக்கு வந்தார். தருமபுத்திரர் அவரிடம் பேசிக்கொண் டிருக்கையில், திரௌபதிக்கு ஜயத்ரதனால் நேரிட்ட அவமானத்தைக் கூறி விசனப்பட்டார். மார்கண்டேய முனிவர், "தருமராஜனே ! துஷ்டர்களை உடனே கண்டிப்பது தருமம். உங்களுடைய மைத்துனனெனச் சும்மாவிடாமல் அவனைப் பங்கப் படுத்தி அனுப்பியதே அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கும். அவன் செய்தது பாஞ்சாலிக்குப் பழிப்பாகாது. தெய்வ சங்கற்பப்படி நடக்கவேண்டியது நடந்தது—அயோத்தியாதிபதியாய் விளங்கிய தசரத பூபதிக்கு மைந்தனாய் அவதரித்த ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் திவ்ய சரித்திரத்தைக் கேட்டதில்லையா ?" என்றார்.

தருமபுத்திரர் அச்சரித்திரத்தைக் கேட்க விரும்பினர். மார்க்கண்டேயர் அதனை விஸ்தாரமாகக் கூறி "மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீ ராமமூர்த்தியும் ஸீதாதேவியும் இப்படிப்பட்ட பாடுபட்டிருக்க இந்தத் திரௌபதியும் நீங்களும் பட்டபாடும் அவமானமும் எம்மாத்திரம்?" என்றார்.

தருமபுத்திரர் கேட்டுச் சந்தோஷ மடைந்து, "ஸ்வாமி! நல்லொழுக்கமுள்ள கற்புடைய மனைவியினால் கணவனுக்கு விபத்து நீங்கிச் சம்பத்துண்டாவதுண்டோ?" என்று கேட்டார். மார்க்கண்டேயர், "சாவித்திரி என்னுமொரு மாதரசியால் அவள் கணவன் சகலசுகமும் தீர்க்காயுளும் பெற்றான்" என்று அந்தச் சரித்திரத்தையும் விஸ்தாரமாகக் கூறி, "கேளும் தருமபூபதியே! நல்ல குலத்திலே பிறந்து நற்குண நற்செய்கைகளிலே சிறந்து பழிச் சொல்லில்லாமல் நாயகனே தெய்வமென்றிருக்கிற உத்தமியாகிய ஒரு பதிவிரதையினால், அவளைக் கொண்ட கணவனுக்கேயன்றி சுற்றத்தாருக்கும் க்ஷேமங் கிடைத்திருக்கிற தல்லவா? ஆகையினால் பாஞ்சாலி யென்னும் இந்தக் கற்புக்கரசியினால் உங்களுக்கு க்ஷேமமுண்டாகு மென்பதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ—என்று கூறி "நீங்கள் விரைவில் சுகமடைவீர்கள்" என்றாசீர்வதித்துச் சென்றார்.

அத்தியாயம்—24

கர்ணனுடைய கொடை

அப்பால் தருமபுத்திரர் யாதொரு கவலையுமின்றி இருந்தாராயினும் அவர்க்குக் கர்ணனிடம் சிறிது அச்ச

மிருந்தது. அவன் நிகரற்ற வில்லாளியென்பது மல்லாமல் பலவரங்களையும் பெற்றவன். அவன் மகிமை பொருந்திய கவசகுண்டலம் பூண்டவன். அந்தக் கவசகுண்டலம் பூண்டிருக்கிற வரையில் அவனை ஒருவராலும் வெல்ல முடியாது. ஆனதுபற்றித் தருமபுத்திரர் அவனிடம் சிறிது அச்சமுற்றார். இதனையறிந்த பாண்டவசகாயனாகிய கிருஷ்ண மூர்த்தி, ஒரு சமயம் இந்திரனை ஸ்மரித்தார். இந்திரன் அவர்முன் தோன்றி வணங்கி நின்றான். கிருஷ்ண மூர்த்தி இந்திரனைப் பார்த்து, "கர்ணன் கவசகுண்டலம் பூண்டிருக்கிற வரையில் அவனை ஒருவராலும் வெல்வதற்காகாது. அவன் பின்னர் அர்ச்சுனனை யுத்தத்தில் கொன்றாலும் கொன்றுவிடுவான்! ஆகையினால் நீ ஒரு கிழ அந்தணனாக அவன் முன்னே போய் அவனிடமிருக்கும் அந்தக் கவசகுண்டலத்தைத் தானமாகப் பெற்று வரவேண்டும். கர்ணன் எதைக் கேட்பினும் இல்லையென்று சொல்லாமற் கொடுப்பவனாதலால் நீ அதைக் கேட்டால் யார் வந்து தடுத்தாலும் கொடாதிரான்" என்றார். இந்திரன், "நல்லது! அப்படியே செய்கின்றேன்" என்று கூறி அவரிடம் விடைகொண்டு சென்றான்.

இப்படி இவர்களிருவருக்கும் நடந்த சம்பாஷணையைச் சூரியபகவான் கேட்டுக்கொண் டிருந்தாராதலால் அவர் தமது மைந்தனாகிய கர்ணன்மீ திரக்கங்கொண்டு அவனிடம் ஓர் அந்தண வேடம்பூண்டு சென்று, "மைந்த, அர்ச்சுனனுக் கிதந் தேடுவதன் பொருட்டு இந்திரன் உன்னிடத்திற்கு ஓர் அந்தணனைப்போல் வேடம் பூண்டுவந்து உன்னிடம் கவசகுண்டலத்தைத்

தானமாகப் பெற எண்ணி யிருக்கிறான். அவன் வரு வான்; வந்துகேட்டால் நீ அதைக் கொடாதே. கொடுப்பாயானால் நீ அர்ச்சுனனால் மரண மடைவாய். நான் சூரியன். என் அம்சத்தி லுதித்தவன் நீ. ஆதலால் தந்தையாகிய எனது சொல்லைத் தட்டாதே!'' என்றார்.

கர்ணன், சூரியனைப் பலமுறை வணங்கி, எழுந்து கரங்குவித்து நின்று, ''பிறன் என் உயிரைக் கேட்டாலும் நான் கொடுப்பதைத் தவிர இல்லையென்று சொல்லுவதில்லை யென்கிற விரதங் கொண்டிருப்பவனாதலால், அடியேனுக்குத் தேவரீர் இக்கட்டளை யிடுவதாகாது. இது என் விரதபங்கஞ் செய்வதாகும். இல்லையென்கிற சொல்லை நான் என் பகைவனுக்கும் வழங்கேன். ஈவோனேயன்றி ஈயாதான் இவ்வுலகத்தில் உயிருட னிருப்பவனல்லன். ஈதலறம் என்று வேதம் கூறுகின்றது. இவ்வுலக வாழ்வு அநித்தியம். ஆனால் ஒருவனுக்கு அவன் தேடும் கீர்த்திமாத்திரமே அழியாம லிருப்பது. தந்தையே! இல்லை யென்கிற சொல் என் நாவில் வராம லிருக்க வரமருளல் வேண்டும்'' என்று கூறி வணங்கினான்.

சூரியபகவான், ''ஓ விதியை அநுசரிக்கிறது உன் புத்தி! நான் எவ்வளவு சொல்லியும் நீ கேட்கவில்லை. நான் என்ன செய்யட்டும்'' என்று மனம் நொந்து கொண்டார். கர்ணன், ''தந்தையே! இந்திரனே வந்து என்னை யாசிக்கும்போது நானேன் என் கவச குண்டலத்தைக் கொடுப்பது கூடாது?'' என்று கேட்டான். சூரியபகவான், ''அப்பா! சரி, உன் விருப்பப்படி கவச குண்டலத்தைக் கொடு; ஆனால், அவனிடமிருக்கும்

வேலை நீ கேட்டு வாங்கிக்கொள்'' என்று கூறிச்சென்றார்.

பிறகு கர்ணன் ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை யெல்லாம் முடித்துக்கொண்டு தேவேந்திரனுடைய வரவிற்கு எதிர்பார்த்தவனு யிருந்தான். அப்பொழுது இந்திரன், வில்லைப்போல் வளைந்த உடலும், நடுங்கும் கைகால்களும், அயர்ந்த நடையுமுடைய ஓர் அந்தணனுய் ஒரு கையில் குடையும் ஒரு கையில் கோலும் பிடித்துக்கொண்டு மார்பில் முப்புரி நூலிலகக் கர்ணனுடைய மாளிகையில் நுழைந்து அவனைக் கண்டு ஆசீர்வதித்தான். கர்ணன் எழுந்து வணங்கி முறைப்படி வரவேற்று ஆசனத்திருக்கச் செய்து உபசரித்து, ''தாம் இவ்விடம் வந்த நோக்கம் யாதோ?'' என்று பணிவாய்க் கேட்டான். பிராமணன், ''வேந்தே! தாம் அணிந்துள்ள கவச குண்டலத்தை இவ்வேழை அந்தணனுக்குத் தானமாக அளிக்கவேண்டும்'' என்று கேட்டான். அப்பொழுது அசரீரி ''வந்தவன் தேவேந்திரன்; அந்தணனல்லன்; கவசகுண்டலங் கொடாதே?'' என்று கூறி எச்சரித்தது. கர்ணன், ''ஓ யார் தடுத்தாலும் நான் யாசகர்க்கு இல்லையென்று சொல்லுவதில்லை'' என்று கூறி மனமகிழ்ச்சியோடு அந்தணனிடம் தன் கவச குண்டலத்தைக் கொடுத்து, ''தேவரீர் என் முன் வந்து இருகரங்களையும் நீட்டிக் கேட்டதற்கு நான் கொடுத்த இது பெரிதல்ல'' என்று கூறினான். தேவேந்திரனுக வந்த அந்தணன், புளகாங்கிதனுகி அவனைத் தழுவிக்கொண்டு ''அப்பனே'' உன்னுடைய உறுதி பெரிது! நான் அர்ச்சுனன் பொருட்டே இவ்வாறு உன்னிடம் வந்து இதை யாசித்தேன். நீ அசரீரி தடுத்

தும் இல்லையென்று சொல்லாமற் கொடுத்தாயே. உனக்கு நான் என்ன செய்யப் போகின்றேன்; இருந்தாலும் என்னிடமுள்ள இந்த வேலைக் கொடுக்கிறேன். இதை நீ பெற்றுக்கொள். அர்ச்சுனனொருவனைத் தவிர வேறு எவன்மீது இதனைப் பிரயோகித்தாலும் இது அவனைத் தவருமற் கொல்லும்'' என்று ஆசீர்வதித்து விடைகொண்டு கிருஷ்ணபகவானிடம் போய் அவரிடம் அந்தக் கவசகுண்டலத்தைக் கொடுத்துவிட்டு இந்திரலோகம் போய்ச் சேர்ந்தான். இச் செய்தியைக் கிருஷ்ண பகவான் தருமபுத்திரர்க்கு அறிவிக்க, அவர் கேட்டு மனக்கவலையொழிந்து, தங்களுக்குச் சகாயமாக விருக்கும் கிருஷ்ண பகவானைத் துதித்தார்.

அத்தியாயம்—25

நச்சுப் பொய்கை

இதற்குப் பிறகு பாண்டவர்கள் அவ்வனத்தை விட்டு நீர்வளம் நிலவளம் நிறைந்த விண்டுசித்த மகரிஷியினுடைய வனத்திற்குப் போய்த் தங்கியிருந்தார்கள். இப்பொழுது இவர்கள்வனவாசத்தில் பன்னிரண்டாவது வருஷம் நடக்கிறது. இவர்கள் அத்தினபுரத்துக்கு மிகச் சமீபத்திலிருக்கிறார்கள். இதையறிந்த துரியோதனன், "இந்த ஒருவருஷம் போனால் பிறகு அஞ்ஞாதவாச ஒரு வருஷத்தையுங் கழித்துவிட்டுப் பாண்டவர்கள் வந்துவிடுவார்கள். அப்படி இவர்கட்கு இடங் கொடுக்கக் கூடாது. ஏதேனும் தந்திரஞ் செய்து இந்தப் பாண்டவர்களைக் கொன்றுவிட வேண்டும்'' என்றெண்ணித் தன்னுடைய துர்மந்திரிகளாகிய சகுனி முதலியவர்களோடு

பலமான ஆலோசனை செய்து, காளமாமுனி யென்கிற ஒருமுனிவனை வரவழைத்து, "நீர் காட்டிற்குச்சென்று அங்கு ஹோமஞ்செய்து பூதத்தை வரவழைத்துப் பாண்டவர்களைக் கொல்லும்படி அதனையேவி என் மனத்திற்கு மகிழ்ச்சியை உண்டாக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

இந்தப் பேச்சைக் கேட்டதும் அம்முனிவர் இடி முழக்கங் கேட்ட அரவம் போலானார். "அந்தோ! அற நெறி தவறாத பாண்டவர்களைக் கொல்வதா ? இதற்கு நான் எப்படி உடன் படுவேன்! இதனால் நமக்குப் பாபமும் பழியும் வந்து சேரும்போ லிருக்கிறதே!" என்றெண்ணித் துரியோதனனை நோக்கி, "இது தகாத செய்கை. இதனால் நமக்கு ஒருபோதும் நன்மையுண்டாகாது" என்று கூறினார். துரியோதனன் கேட்கவில்லை. பிடிவாதமாய்த் தன் எண்ணத்தை நிறைவேற்றும்படி அவரைக் கட்டாயப் படுத்தினான். அவர், "அந்தோ! இந்தப் பாவியினிடம் அறியாமற் சிக்கிக் கொண்டோமே" என்றெண்ணி மனவருத்தப்பட்டுத் "தருமங்களை மறப்பதும் பெரியோர் சொல்லைக் கடப்பதும் வஞ்சனை நினைப்பதும் ஒருவனை ஒருகாலும் உயர்த்தா" என்று கூறித் துரியோதனனைக் கடிந்து கொண்டார். துரியோதனன் அவர் காலில் விழுந்து பணிந்து, "ஸ்வாமி, என்னைக் காப்பாற்ற வேண்டும், கைவிடுவது கூடாது" என்று வேண்டினான்.

முனிவர், "விநாசகாலத்திற் கேற்றபடி புத்தி!" என்றெண்ணி உடன்பட்டு ஹோமத்திற்கு வேண்டிய திரவியங்களுடன் காட்டிற்குப் போய் அதர்வண வேத விதியை அநுஷ்டித்து ஹோமஞ்செய்தார். அதிலிருந்து

ஒரு பூதந்தோன்றியது. பாண்டர்களைக் கொல்லும்படி அதை ஏவினர்.

இங்ஙிப்படி யிருக்கையில் பாண்டவர்களுடைய பர்னசாலைக் கருகே இருந்த ஒரு ரிஷியின் ஆசிரமத்தி லிருந்து நெருப்புண்டாக்கும் கருவியாகிய அரணிக் கட்டைகள் ஒரு மானின் கொம்புக் கிடையில் அகப்பட்டுக் கொள்ள, அது அதனல் மிரண்டு தாவித்தாவி யோடியது. அதைக் கண்ட பாண்டவர்கள் அதனைத் துரத்திக்கொண்டு சென்றார்கள்! அது மறைந்தும் வளைந்தும் தாவியும் ஓடிக்கொண்டே அவர்களை வெகுதூரம் இழுத்துக்கொண்டு போய்விட்டது. அப்பொழுது அலைந்த களைப்பினல் அவர்களுக்குத் தாகம் அதிகரித்தது. சகாதேவன் எங்கேனும் குள மிருகிறதா என்று ஒரு மரத்தின்மே லேறிப்பார்த்தான். கொஞ்ச தூரத்தில் செழிப்பான ஒரு சோலை தெரிந்தது. அங்கு ஜலம் கிடைக்குமென் றெண்ணிச் சகாதேவன் ஜலங்கொண்டு வரும்பொருட்டுப் புறப்பட்டுப் போனன்.

அங்கே அவன் நினைத்தபடி ஒரு குள மிருந்தது. அதிலிறங்கித் தண்ணீரருந்தப் போகையில், அக்குளத்தைக் காத்துவரும் கொக்கு ரூபமான ஒரு யக்ஷன், "நான் கேட்குங் கேள்விகளுக்குத் தக்க விடை சொல்லிப் பிறகுதான் நீ இந்தக் குளத்துநீரை அருந்தவோ அல்லது எடுத்துப் போகவோ செய்யலாம்" என்று கூறினன். சகாதேவன் அதைக் கவனியாமல் அக்குளத்து நீரை அள்ளிக் குடித்தான். குடித்தவுடனே மயக்க முண்டாயது. உடனே அவன் கரையேறினன். அங்கு அவன் விழுந்து இறந்து போனன்.

தருமபுத்திரர் சகாதேவனுக்காக நெடுநேரங் காத்திருந்து பிறகு நகுலனை அனுப்பினர். அவனு மப்படியானன்; பிறகு அர்ச்சுனனும் பீமனும் போய் அவ்வாறே தண்ணீரருந்தி இறந்தனர்.

இவ்வாறு நால்வரும் வராமற் போகவே தருமபுத்திரர் மனங் கலங்கி உடனே புறப்பட்டு அக்குளத்துக்குப் போய் அங்குத் தம்பிமார்கள் இறந்து கிடப்பதைக் கண்டு பொறுக்க முடியாத துக்கமடைந்து வெகுநேரம் புலம்பி யழுது பிறகு ஒருவாறு தேர்தலுற்று இவர்கள் இப்படி இங்கு இறந்துபோனதற்குக் காரணம் யாதாயிருக்குமென்று சற்றுநேரம் சிந்தித்துப் பார்த்தார்; ஒன்றுந் தோன்றுமற் போகவே தண்ணீரில் விழுந்து இறக்கத் தீர்மானித்தார். அச்சமயம் அந்த யக்ஷனுகிய கொக்கு, "தருமனே! உன் தம்பிமார்கள் என் கேள்விகளுக்கு விடை சொல்லவில்லை. அதனுல் நான் அவர்களைக் கொன்றேன்" என்றது. தருமபுத்திரர் "அப்படியா! அக்கேள்விகளை நீ இப்போது என்னைக் கேள். நான் விடை தருகின்றேன்" என்றுர்.

யக்ஷன்:—மேதினியில் விளங்கும் நூல்களில் எது பெரிது?

தருமர்:—வேதம்.

யக்ஷன்:—ஒருவன் மேன்மை யடைவ தெதனுல்?

தருமர்:—துறவறத்தால்.

யக்ஷன்:—ஒருவன் அறிவாளி யாவதெப்படி?

தருமர்:—பெரியோர்க்குப் பணிவிடை செய்வதால்.

யக்ஷன்:—வாயுவைவிட வேகமானது எது?

தருமர்:—மனம்.

யக்ஷன்:—இறந்து போகிறவர்களுக்குரிய துணை யெது?

தருமர்:—அவர்கள் செய்த தருமமே யாம்.

யக்ஷன்:—புகழ்ச்சியை யுண்டாக்குவ தெது?

தருமர்:—தானமும் தருமமும்.

யக்ஷன்:—சுகம் எதனுலுண்டாகும்?

தருமர்:—நல்ல ஒழுக்கத்தினுல்.

யக்ஷன்:—சிறந்த நிதி யெது?

தருமர்:—அறிவேயாம்.

யக்ஷன்:—சிறந்த அறம் யாது?

தருமர்:—பிறவுயிர்க் கிடுக்கண் செய்யாமை.

யக்ஷன்:—எதை விட்டால் நம்மை எல்லோரும் விரும்புவார்கள்?

தருமர்:—செருக்கை.

யக்ஷன்:—எதை விட்டால் துக்கம் நீங்கும்?

தருமர்:—கோபத்தை.

யக்ஷன்:—எதை விட்டால் பணக்காரனுகலாம்?

தருமர்:—ஆசையை.

யக்ஷன்:—எதனுல் நண்பர்கள் பகைவர்களாவார்கள்?

தருமர்:—பணத்தாசையால்.

யக்ஷன்:—தயை என்றுலென்ன?

தருமர்:—உயிர்களுக்கு நன்மை செய்ய எண்ணுதல்.

யக்ஷன்:—வெல்ல முடியாத விரோதி எது?

தருமர்:—வெகுளி.

யக்ஷன்:—நீங்காத நோயெது?

தருமர்:—பிறர் பொருளை விரும்பல்.

யக்ஷன்:—மெய்யான கர்மாநுஷ்டானம் எது?

தருமர்:—சித்தசுத்தி.

யக்ஷன்:—உலகத்தில் எது ஆச்சரியமானது?

தருமர்.—உலகத்தில் நாடோறும் மானிடர் இறப்பதைக் கண்டும் உயிரோடிருப்பவர்கள் தாம் மாத்திரம் இறவாதிருக்க வேண்டுமென்று கருதுகிறார்களே; இது தான்.

யக்ஷன்:—எது முத்திக்குரியவழி?

தருமர்:—சிஷ்டாசாரமே யாம்.

இவ்வாறு யக்ஷன் கேள்விகளுக்குத் தருமபுத்திரர் விடைகூறவே அவன் மகிழ்ந்து, "நீ தம்பிமார்களுள் யாரைப் பிழைப்பிக்க விரும்புகிறாய்?" என்று கேட்டான். தருமபுத்திரர், "நகுலனை" என்றார். யக்ஷன், "அவனை அவ்வாறு விரும்பியது ஏன்?" எனத் தருமபுத்திரர், "என் தந்தைக்கு மனைவிமாரிருவர். அவர்களில் ஒருத்திக்கு மூத்தபிள்ளை நான். மற்றவளுக்கு மூத்தபிள்ளை நகுலன். ஆகையினால் அந்த முறைப்படி நகுலனை விரும்பினேன்" என்றார். யக்ஷன் அதனால் அவரிடம் மகிழ்ச்சியடைந்து "உன்னுடைய நல்லகுணமே உனக்குத் துணை செய்கிறது" என்று நால்வரையும் எழுப்பிக் கொடுத்து அவர்களைப் பார்த்து "நான் யமதர்மராஜா" என்று சொல்லி மேலே பேசு

வதற்குள் அவர்கள் முன் அந்த யக்ஷன், யமதரும ராஜாவாக நின்றான்.

தருமராஜாவின் காட்சியைக் கண்டதும் ஐவரும் தண்டாகாரமாய் விழுந்து வணங்கினார்கள். யமன் அவர்களை வாழ்த்தித் தருமபுத்திரரைப் பார்த்து—நீங்களிந்த வனத்திற்கு வந்திருப்பதையும், வனவாசங்கழியப் போவதையுமெண்ணி உங்களை வதைக்கத் துரியோதனன் கொடிய சூழ்ச்சி செய்தான்—என்று தொடங்கி அவன் காளமாமுனியை வரவழைத்து ஹோமத்தில் பூதத்தைத் தோற்றுவித்து அவர்களைக் கொல்லும்படி வேண்டிக் கொண்டதையும் அதற்கிணங்கி அம்முனிவன் காட்டிற்கு வந்து ஹோமஞ்செய்து பூதத்தை வரவழைத்து அதனை யேவியதையுங் கூறி, "அப்பனே, என்ன சொல்வேன் பிறகு நடந்த விநோதத்தை; அந்தப் பூதம் இந்தக்குளத்திற்கு வந்து இவர்களிறந்து கிடப்பதைப் பார்த்து, 'சை! இறந்துகிடப்பவர்மீதா என்னை யேவினான் மூடன்' என்று முனிவடைந்து திரும்பிப் போய் அம்முனிவனையே தனக்கு உணவாகக் கொன்று தின்றுபோய் விட்டது! அந்தப் பூதம் அப்படிச் செய்யவேண்டு மெனவே நான் இந்தச் சூழ்ச்சி செய்தேன். இனி உங்களுக்கு ஒரு குறைவும் வராது. நீங்கள் கடத்தவேண்டிய அஞ்ஞாதவாசத்தை விராட தேசத்தரசனுடைய அரண்மனையில் மாறுவேடத்துடனிருந்து கடத்துங்கள். உங்களை ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாது. விராட வேந்தனும் உங்களைக் கண்டு பிடிக்க மாட்டான். அவ்வருஷ முடிவில் உங்களுக்கு வெற்றி யுண்டாகும்" என்று தெரிவித்து உடனே மறைந்தான்.

பிறகு தருமபுத்திரர் தமது சகோதரருடன் புறப் பட்டுச் சந்தோஷமாகத் தாங்களிருந்த வனத்துக்குப் போய்த் திரௌபதிக்கு நடந்தவைகளை யெல்லாம் சொன்னார். திரௌபதி கேட்டு, இறைவனுடைய திரு வருளை யெண்ணி மகிழ்ந்தாள். அப்பால் பாண்டவர்கள் பன்னிரண்டாம் வருஷமுடிவில் தம்முடனிருந்த பிரா மணர்களையெல்லாம் நகரத்திற்கு அனுப்பிவிட்டு அவ் வனத்திலிருந்து புறப்பட்டு விராட நகரத்துக்குச் சமீப மான ஒரு வனத்துக்குப் போய் அங்கே மாறுவேடம் பூண்டு அந்த நகரத்து அரசனையடுத்து ஒவ்வொருவரும் தத்தம் வேடத்திற்கியைந்த தொழிலை மேற்கொண்டு சுகமாக வாழ்ந்துவந்தனர்.

முற்றிற்று.

PRINTED AT THE NOBLE PRESS, MADRAS. S. E.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

வெகுநாளாய் அச்சிலில்லாமலிருந்த

ஜடாவல்லவர்

ஓர் இனிய தமிழ் நாவல்.

(பெரிய பதிப்பு)

ஸ்ரீமான் வரகவி-சுப்ரமண்ய பாரதியார் எழுதிய இந் நாவல் ஆண், பெண் இருபாலரும், பள்ளிச்சிறுவர்களும் பன்முறை படிக்க விரும்பும் கதைப்போக்குடனும், விஷயங்களுடனும் அமைக்கப்பட்டுளது. இந் நாவலைப் படிக்கும் ஒவ்வொருவரும் தம்தம் குடும்பங்களிலும் வாழ்நாளிலும் அனுபவிக்கும் அநேக இரகசியங்களைக் கண்டுணர்வதோடு, அவைகளினின்றும் சீர்திருத்திக்கொள்ள வேண்டிய வழிகளையும் அறியக்கூடும். நம் தேசத்தையும், ஜனங்களையும் கொஞ்சகாலமாக மறைத்து வரும் ஒருவித மேல்நாட்டு நாகரிகத்தின் சொரூபத்தையும், அதன் பலனாக ஆங்கிலம் படித்தவர்களிலே பெரும்பான்மையோர் நமது நாட்டிற்கும், குலாசார வழக்க ஒழுக்கங்களுக்கும் மாறுபாடாகச் செய்துவரும் அநேக விஷயங்களையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளக்கிக் காட்டியும், சேவகாவிர்த்தியின் இழிவு, வரதக்ஷிணையினால் வரும் கேடு, கற்பின் மகிமை முதலிய இல்லற வாழ்க்கையின் அநேக இரகசியங்களை வெகு அழகாகவும், அநேக நீதி நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டியும் படிப்போர் மனதைக் கவர்ந்து செல்லும்படியான கதைப் போக்குடனும் எழுதப்பட்டிருக்கிறது. இதை ஒருமுறை படித்தவர் பன்முறையும் படிப்பதோடு நில்லார் என்பது நிச்சயம். கிரௌன் 600 பக்கம் கொண்ட இந்நாவல் வெகுநாளாய் அச்சில்லாமலிருந்து இப்பொழுது தான் வெளிவந்திருக்கிறது.

விலை ரூபாய் 2-8-0. தபாற் கூலி அணா 6.

எமது பிரசுரங்கள்

* சென்னைத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

வாழ்தடை-வேங்கடராம சாஸ்திரிகள் எழுதியவை.	ரூ.	அ.
* திருக்குறளும் கதைக்குறிப்பும் (அறத்துப்பால்) ...	0	12
* ஜயஸிங்த	0	8
* சந்தநு	0	6
* உலகநீதி உரையும் கதைக்குறிப்பும் ...	0	6
* ஆத்திசூடி உரையும் கதைக்குறிப்பும் ...	0	6
* கொன்றைவேந்தன் உரையும் கதைக்குறிப்பும் ...	0	6
* வெற்றிவேற்கை உரையும் கதைக்குறிப்பும் ...	0	6
* நல்வழியும் கதைக்குறிப்பும்	0	6
மூதுரையும் கதைக்குறிப்பும்	0	8
மணி. திருநாவுக்கரசு முதலியார் இயற்றியவை.		
புலவர் கதை	0	12
பாமணிக்கோவை (Gems of Tamil Poetry) ...	0	12
உரைமணிக்கோவை	0	1
திருக்கண்ணப்பன்	0	
G. இரத்தினம் பிள்ளை, B. A., L. T. எழுதியது.		
கிருஷ்ண குமாரி (A Thrilling Rajput Story) ...	0	1
வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி எழுதியவை.		
ஜடாவல்லவர் (மூன்றும் பதிப்பு)	2	
ஔவை அருந்தமிழ்	0	1
பாண்டவர் பாலலீலை (படங்களுடன் கூடியது) ...	0	1
* பாண்டவர் வனவாசம்	0	
* பரதன் (நாடகம்)	0	
* பரதன் (வசனம்) 8-ம் பதிப்பு	0	
* சாவித்திரி	0	
* மதாலஸா (ஓர் புராணக்கதை)	0	
பால கோபால லீலை	0	
* சந்திரகாசன்	0	
* ஸ்ரீமதி (அம்பரீஷோபாக்யானம்)		
* கர்நாடக யோகினிக் கதைகள் (இரண்டுபாகம்) ...		
* புத்திமானே பலவான்		
சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார் எழுதியது		
* ஒரு சந்நியாசியின் இளமைப்பருவம் ...		

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெ[...]

திருவல்லிக்கேணி, சென்னை.

Cover printed at The Tata Printing Works, Madr[...]